




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:81 | 06-10-2025 | திங்கள்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

06.10.2025 புரட்டாசி 20
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
இன்று காலை 11.42 வரை சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

நட்சத்திரம்:
இன்று காலை 6.06 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

யோகம் :
இன்று பிற்பகல் 2.06 வரை விருத்தி பின்பு துருவம்.

கரணம் :
இன்று அதிகாலை 12.33 வரை கரசை பின்பு காலை 11.42 வரை வணிசை பின்பு இரவு 10.45 வரை பத்திரை . பின்பு பவம்

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.01 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று காலை 6.06 வரை ஆயில்யம் பின்பு மகம்

நல்ல நேரம்
காலை 6.15 – 7.15.
மாலை 5.00 – 6.00.
இராகு காலம்
காலை 7.30 – 9.00.
எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம்

# சிறப்பு புலனாய்வுக் குழு நெரிசல் ஏற்பட்ட இடத்தில் தீவிர ஆய்வு

**கரூர், அக்.6:**

கரூர் தவெக கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாக ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நேற்று தொடங்கியது.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்து, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

மறுநாளே விசாரணையை தொடங்கிய நீதிபதி அருணா ஜெகதீசன், 2 நாட்கள் விசாரணை நடத்தினார்.

இதற்கிடையே, நெரிசல் சம்பவம் தொடர்பாக கரூர் நகர போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். தவெக கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், நிர்வாகி பவுன்ராஜ் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கட்சியின் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோரை தேடி வருகின்றனர். இந்த சூழலில், வழக்கை விசாரிக்க வடக்கு மண்டல ஐ.ஜி.



அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த குழுவில் எஸ்.பி.க்கள் விமலா, சியாமளாதேவி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் நேற்று கரூர் வந்து விசாரணையை தொடங்கினர். தவெக பிரச்சாரகூட்டம் நடைபெற்ற வேலுசாமிபுரத்துக்கு சென்ற குழுவினர், நெரிசல் ஏற்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். சைபர் க்ரைம் உதவி ஆய்வாளர் சுதர்சன், கரூர் நகர காவல் நிலைய தனிப்பிரிவு காவலர் மோகன்ராஜ் ஆகியோரிடம் அஸ்ரா கார்க் கேட்டறிந்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், ''இந்த குழுவில் என்னுடன் 2 எஸ்.பி.க்கள், ஒரு ஏடிஎஸ்பி, 2 டிஎஸ்பிக்கள், 5 ஆய்வாளர்கள் இடம்பெற்றுள்ளனர். தற்போது தான் விசாரணையை தொடங்கி உள்ளதால், குறிப்பிட்டு எதுவும் கூறமுடியாது" என்றார்.

உயர் நீதிமன்றத்தில் கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 3-ம் தேதி நடந்தது. அப்போது, ''விஜய் பயணம் செய்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக காணொளிகள் வெளியாகியுள்ளன. அதுதொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டதா?" என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, வேலாயுதம்பாளையம் காவல் நிலைய தலைமைக் காவலர் அளித்த புகாரின்பேரில், விஜய் பிரச்சார வாகன ஓட்டுநர் மற்றும் இருசக்கர வாகன ஓட்டுநர்கள் 2 பேர் மீது பிஎன்எஸ் 281 (அதிவேகமாக, கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியது) பிரிவில் போலீஸார் 4-ம் தேதி வழக்கு பதிவு செய்துள்ளனர்..

# ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு போராடும்: மு.க. ஸ்டாலின்

**சென்னை, அக்.6:**



தமிழ்நாடு யாருடன் போராடும்? என்ற தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியின் கேள்விக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

தமிழ்நாடுபோராடும் தமிழ்நாடுவெல்லும் என்பதை சுட்டிக்காட்டி அவர் பட்டியலிட்டுள்ளதாவது,

இந்தி மொழியை ஏற்றுக்கொண்டால்தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும்!

அறிவியல்மனப்பான்மையை விதைக்கும் கல்வி நிலையங்களுக்குள் சென்று மூடநம்பிக்கைகளையும் - புரட்டுக் கதைகளையும் சொல்லி, இளம் தலைமுறையை நூறாண்டு பின்னோக்கி இழுக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!

உச்சி மண்டை வரை மதவெறியை ஏற்றிக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மதத்தைப் பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தந்திரக் கும்பல்கள் தலையெடுக்காமல் போராடும்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை, மக்களின் விருப்பத்திற்கு மாறாக நெருக்கும் ஜனநாயக விரோதிகளுக்கு எதிராகப் போராடும்!

ஆளுநரின் அதிகார அத்துமீறல்களுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்துக்குச் சென்று மாநில உரிமைகளை நிலைநாட்டுகிறோம். அரசியல்சட்டத்தின் மாண்பை சிறுமைப்படுத்தும் எண்ணம் கொண்டவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடும்!

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தொழிற்சாலைகளை - தொழில் வளர்ச்சியை - வேலைவாய்ப்புகளை, அடுத்த மாநிலத்துக்கு மிரட்டி அழைத்துச் செல்லும் சதிகாரர்களுக்கு எதிராகப் போராடும்!

ஆர்.எஸ்.எஸ். ஆசியுடன் இந்திய மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து மீண்டும் மனுதர்மத்தை நிலைநாட்டத் துடிக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகப் போராடும்!

உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்குக் காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே, அதற்கு எதிராகப் போராடும்!

வரம்பு நிர்ணயம் மூலம் தமிழ்நாட்டின் வலிமையைக் குறைக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!

ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டதுபோல் திணித்திருக்கும் நீட் எனும் பலிபீடத்துக்கு எதிராகப் போராடும்!

நாட்டையே நாசப்படுத்தினாலும், தமிழ்நாடு மட்டும் 11.19% வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு ஒளிகாட்டுகிறதே என்று நாள்தோறும் அவதூறுகளைப் பரப்பி, கலவரம் நடக்காதா? என ஏங்கிக்கிடக்கும் நரிகளுக்கு எதிராகப் போராடும்!

நாகாலாந்து மக்கள் புறக்கணித்து அனுப்பிய பின்னும் திருந்தாமல், தமிழ்நாட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கமட்டுமே பணியாற்றும் ஆளுநருக்கு எதிராகவும் போராடும்!

இறுதியில் தமிழ்நாடே வெல்லும்! ஒட்டுமொத்த இந்தியாவையும் காக்கும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## மகளிர் உலகக் கோப்பை: பாகிஸ்தானை எளிதில் வீழ்த்தியது இந்தியா



இலங்கையின் கொழும்புவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதியதில் இந்திய அணி 88 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

# உக்ரைன் மீது 50 ஏவுகணைகள், 500 ட்ரோன்கள் வீச்சு! ரஷிய தாக்குதலில் 5 பேர் உயிரிழப்பு!

**உக்ரைன்,அக்.6:**

உக்ரைன் மீது 50-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், 500-க்கும் அதிகமான ட்ரோன்களை ஏவி, ரஷியா சனிக்கிழமை விடிய விடிய கடும் தாக்குதல் நடத்தியது. பொது உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ராணுவக் கூட்டமைப்பான 'நேட்டோ'வில் உக்ரைன் இணைய எதிர்ப்பு தெரிவித்துவரும் ரஷியா, அதற்கான முயற்சிகளைத் தடுக்கும் வகையில் அந்நாட்டின் மீது கடந்த 2022-ஆம் ஆண்டில் முழுவீச்சில் படையெடுத்தது. உக்ரைனின் நான்கு



கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான பகுதிகளை ரஷியா கைப்பற்றியுள்ளது.

மூன்றரை ஆண்டுகளாகத் தொடரும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர அதிபர் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அதன் ஒரு பகுதியாக, ரஷிய அதிபா் விளாதிமீா் புதினுடன் டிரம்ப் கடந்த ஆகஸ்ட் மாதம் பேச்சுவாா்த்தை நடத்தினாா். இதில் எந்த உடன்பாடும் எட்டப்படாத நிலையில், உக்ரைன் மீதான ரஷியாவின் தாக்குதல் தொடா்கிறது.

உக்ரைனின் லிவிவ் நகரம் உள்பட 9 இடங்களில் சனிக்கிழமை விடிய விடிய ரஷியா கடுமையான தாக்குதல் நடத்தியது. 50-க்கும் மேற்பட்ட தொலைதூர ஏவுகணைகள், 500-க்கும் மேற்பட்ட ட்ரோன்களை ரஷியா ஏவியதாக, உக்ரைன் அதிபா் வொலோதிமீா் ஸெலென்ஸ்கி ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தாா்.

உக்ரைன் அவசரகால சேவைகள் பிரிவு அதிகாரிகள் கூறுகையில், 'பொது உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து ஏவுகணைகள், ட்ரோன்கள், துல்லியமாகத் தாக்கும் வெடிகுண்டுகள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் லிவிவ் நகரில் 4 போ் உயிரிழந்தனா்; மேலும் 4 போ் காயமடைந்தனா்.

லிவிவ் புகா் பகுதியில் உள்ள பெரிய வணிக வளாகம் தீக்கிரையானது. இதேபோல், ஸபோரிஸியா நகரில் பெண் ஒருவா் உயிரிழந்தாா். 16 வயதுச் சிறுமி உள்பட மேலும் 9 போ் காயமடைந்தனா்.

ஸபோரிஸியாவில் ஏராளனமான குடியிருப்புக் கட்டடங்கள் இடிந்துள்ளன. தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதுடன், போக்குவரத்தும் நிறுத்திவைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோா் பாதிக்கப்பட்டுள்ளனா்' என்றனா்.


பல லட்சம் வாசகர்களை கொண்ட தமிழ்நாடு இ-பேப்பரை https://epaper.tamilnaduepaper.com/ இணையதளத்தில் படித்து பயன்பெறுங்கள்


# டார்ஜிலிங் 7 இடங்களில் நிலச்சரிவு:20 பேர் பலி

**டார்ஜிலிங்,அக்.6:**

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் 12 மணி நேரம் பெய்த தொடர் கனமழையால் 7 இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி சுமார் 20 பேர் உயிரிழந்தனர். பலர் மாயமாகி உள்ள நிலையில் மீட்புப் பணிகள் அங்கு முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, நாளை டார்ஜிலிங் செல்ல உள்ளார்.

டார்ஜிலிங்கில் சனிக்கிழமை அன்று கனமழை பொழிந்த நிலையில் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் மக்களின் வீடுகள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. மழையினால் சில பகுதிகளுக்கான சாலை போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கம் மற்றும் சிக்கிமை இணைக்கும் முக்கிய சாலை இதில் சேதமடைந்துள்ளது.

டார்ஜிலிங்கின் சார்ஸ்லே, ஜெஸ்பீர்கான், மிரிக் பஸ்தி, தார் கான், மிரிக் லேக் ஏரியா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மீட்பு பணியில் மாவட்ட நிர்வாகம், காவல் துறையினர் மற்றும் தேரிய பேரிடர் மீட்பு படையினர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சூழலில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு நிவாரண உதவி அறிவித்துள்ளார் மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி. நாளை (அக்.6) அவர் டார்ஜிலிங் செல்ல உள்ளார். அங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் கண்டு



மாநில அதிகாரிகளுடன் சேத விவரங்களை பெற உள்ளார்.

"பூடானில் கனமழை பொழிந்த காரணத்தால் மேற்கு வங்க மாநிலத்தில் வடக்கு பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இது இயற்கை பேரிடர். இந்த சம்பவம் எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேசி உள்ளேன். அங்கு நிலவும் சூழலை உன்னிப்பாக மாநில அரசு கவனித்து வருகிறது.

இடைவிடாமல் 12 மணி நேரம் தொடர்ந்து மழை பொழிந்துள்ளது. 7 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நாளை பிற்பகல் அங்கு செல்ல திட்டமிட்டுள்ளேன். சுற்றுலா பயணிகள் அதிகளவில் டார்ஜிலிங்கில் சிக்கி உள்ளனர்.

அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். அவசரப்பட வேண்டாம். அவரவர் தங்கியுள்ள விடுதிகளில் பத்திரமாக இருங்கள். விடுதி உரிமையாளர்கள் சுற்றுலா பயணிகளிடம் கூடுதல் தொகை வசூலிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்" என்று மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் நிலச்சரிவில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். பாஜக உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு களத்தில் உதவி வருவதாக அமித் ஷா கூறியுள்ளார். உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் சூழல் நிலவுவதாக மேற்கு வங்க மாநில எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார்.







# திருக்குறள் குறள்-401

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக்
கோட்டி கொளல்



அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது.

## சிந்திக்க ஒரு நொடி



பிரச்சினையே வயிறு தான் . சிலர் குறைக்க ஓடுகிறார்கள் சிலர் நிறைக்க ஓடுகிறார்கள்.

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## மண்டல பூஜையில் சிறப்பு வழிபாடு



**திருவள்ளூர், அக். 6:**
திருவள்ளூர் மாவட்டம் திருவூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீஸ்வர்ண சத்தியநாராயணர் துளசி மாலை அலங்காரத்தில் மண்டல பூஜையில் அபிஷேகம், அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சனிபிரதோஷ வழிபாடு



போச்சம்பள்ளி வடமலைப்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சனிபிரதோஷ வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டில் திரளாக மக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு மலையாளி சங்க கூட்டமைப்பின் நடந்த பேரணியில் பங்கேற்ற கலைஞர்கள்



சென்னை கீழ்ப்பாக்கத்தில் தமிழ்நாடு மலையாளி சங்க கூட்டமைப்பின் நடந்த பேரணியில் பங்கேற்ற கலைஞர்கள்.

## மசினகுடியில் நடந்த புகைப்படக் கண்காட்சி



நீலகிரி மாவட்டத்தில் வன உயிரின வார வார விழாவையொட்டி, மசினகுடியில் நடந்த புகைப்படக் கண்காட்சி.

# புரட்டாசி 3வது சனிக்கிழமையை முன்னிட்டு காட்பாடி ஸ்ரீ வரதராஜ பெருமாள் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிப்பு!

**வேலூர்,அக்.6:**
வேலூர் மாவட்டம், பழைய காட்பாடியில் பெருமாள் கோவில் தெருவில் ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத வரதராஜ பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

இந்நிலையில் புரட்டாசி 3வது சனிக்கிழமையை முன்னிட்டு ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயிலில் அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடந்தது.

இதைய டுத்து துளசி மற்றும் மலர்களாலும், கல் பதித்த நகைகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீவரதராஜ பெருமாள் ஸ்ரீசர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பக்தர்கள் காலை முதல் இரவு வரை நீண்ட வரிசையில் நின்று ஸ்ரீ வரதராஜ பெருமாளை தரிசித்தனர். அபிஷேக ஆராதனைகளை ஸ்ரீ சந்தோஷ் ஐயர் மற்றும் சிவக்குமார் ஐயர் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர். பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீ வரதராஜ பெருமாள்



கோயில் அறங்காவலர் ஜி. மனோகரன் வெகு விமரிசையாக செய்திருந்தார். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

# திருப்பூர் குமரனின் 121 வது பிறந்தநாள் விழா மற்றும் புதிய நீதி கட்சி நிறுவனத் தலைவர் ஏசி சண்முகத்தின் 75 வது பிறந்தநாள் விழா :கோலாகல கொண்டாட்டம்!

**வேலூர், அக். 6:**
விடுதலைக்காக தன் உயிரையே விலையாகக் கொடுத்த தியாகி திருப்பூர் குமரனின் 121 வது பிறந்தநாள் மற்றும் புதிய நீதி கட்சியின் நிறுவனத் தலைவர் ஏ.சி. சண்முகத்தின் 75 வது ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, குடியாத்தம் நகர புதிய நீதிக் கட்சியின் சார்பில் அப்பு சுப்பையர் வீதியில் உள்ள வெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் அபிஷேகமும், அன்னதானமும் நடைபெற்றது.

மேலும் தியாகி திருப்பூர் குமரனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கி, அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஒருங்கே நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு 'கைத்தறி காவலன்' புதிய நீதி கட்சியின்



நகரச் செயலாளர் எஸ்.ரமேஷ் தலைமை தாங்கினார். மண்டலச் செயலாளர் பி. சரவணன், ஆர். வி. மூர்த்தி, பட்டு வி. பாபு முன்னிலை வகித்தனர்.

மேலும் புதிய நீதி கட்சியின் நகர நிர்வாகிகள் சசிகுமார், வெங்கடேசன், உமா மகேஸ்வரி, பெயிண்ட் செந்தில், முரளி, கன்னியப்பன், சுந்தரமூர்த்தி, சுந்தர்ராஜ், செல்வம், மோகன்குமார், சரத்குமார், ஆறுமுகம் மற்றும் ஹேமந்த் குமார், கட்சியின் பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா



செங்கல்பட்டில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கனிமொழி எம்.பி. பேசினார்.

## பிஎஸ்ஆர் அறக்கட்டளையின் 10ஆம் ஆண்டு விழா



திருச்சியில் பிஎஸ்ஆர் அறக்கட்டளையின் 10ஆம் ஆண்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்றார்.

## அரசுக் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு




திருப்பூரில் வன விலங்குகளை பாதுகாக்க வலியுறுத்தி நூதன முறையில் அரசுக் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## வெள்ளி கருட வாகனத்தில் பெருமாள்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீபாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் நேற்று புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு இரவு கருடசேவை வைபவம் நடந்தேறியது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## வள்ளலார் தெய்வ நிலையத்தில் அன்னதானம்



வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடந்த விழாவில் அமைச்சர்கள் எம்ஆர்கே பன்னீர்செல்வம்,சேகர்பாபு ஆகியோர் சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர்.

## ஸ்ரீ வலம்புரி விநாயகர் கோவிலில் விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணம்



வேலூர் சத்துவாச்சாரி பகுதி 3ல் உள்ள ஸ்ரீ வலம்புரி விநாயகர் கோவிலில் நேற்று விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணம் நடந்தது. மழை வேண்டியும், எல்லா உயிரினங்களும் இன்புற்று வாழ வேண்டியும், 12 ராசிகளில் அடங்கிய 27 நட்சத்திரங்களில் உள்ள அனைவரின் நலனுக்காக இந்த பாராயணம் நடத்தப்பட்டது.

# காந்திகிராம கிராம பல்கலைக்கழகத்தில் நடந்த 38வது பட்டமளிப்பு விழாவில்,முன்னால் இந்திய கிரிக்கெட் வீரர் விவிஎஸ்.லட்சுமணனுக்கு கௌரவ டாக்டர் பட்டம்

**நிலக்கோட்டை,அக்.06:**
காந்திகிராம கிராம பல்கலைக்கழகத்தில் நடந்த 38வது பட்டமளிப்பு விழாவில்,202324 மற்றும் 202425 கல்வியாண்டுகளில் படித்த சுமார் 2700 மாணவ மாணவியர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி அருகே உள்ள காந்திகிராம கிராமிய நிகர் நிலை பல்கலைக்கழகத்தில்,38வது பட்டமளிப்பு விழா நடை பெற்றது. விழாவிற்கு பல்கலை வேந்தர் டாக்டர் கே.எம்.அண்ணாமலை தலைமை வகித்து பட்டங்களை வழங்கினார்,துணைவேந்தர் என்.பஞ்சநதம்,முன்னிலை வகித்தார்,பதிவாளர் (பொ) டாக்டர் எம் சுந்தரமாரி வரவேற்றார். நிகழ்ச்சியில் உலகப் புகழ் பெற்ற இந்திய முன்னால் கிரிக்கெட் வீரர் விவிஎஸ். லக்ஷ்மண் க்கு கௌரவ டாக்டர் பட்டம் (Honorary Doctorate) வழங்கப்பட்டது,தொடர்ந்து 202324 மற்றும் 202425 கல்வியாண்டுகளில் படித்த சுமார் 2700 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கினர்.

தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய வேந்தர் அண்ணாமலை தேசிய தரமதிப்பீட்டுக் குழுமம் (NAAC) வழங்கிய A++ தரச் சான்றை பெற்றதில் மகிழ்ச்சி,இந்த




விழாவில் பட்டம் பெறும் மாணவர்கள் அனைவரும் A++ தரச் சான்று பெற்ற பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெறுகின்றனர் என்பதில் பெருமை, கடந்த சில ஆண்டுகளில் பல துறைகளில் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ள அபாரமான முன்னேற்றத்தைப் பார்த்து பெருமை கொள்கிறேன்.

இது மாணவர்கள், பேராசிரியர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் பணி யாளர்கள் அனைவருக்கும் பெருமிதம் அளித்துள்ளது, NAAC A++ அங்கீகாரம் கிடைத்தது. அனைவரின் ஒருங்கிணைந்த உழைப்பின் பலன் எனவும், துணைவேந்தர் உட்பட அனைவரையும் பாராட்டினார்.

மேலும் பல்கலைக்கழகத்தின் பல பேராசிரியர்கள் உலகின் முன்னணி 2% விஞ்ஞானிகளில் இடம்பிடித்திருப்பதும், உலக ஆராய்ச்சிக்கு அளித்த பங்களிப்பு அளவிட முடியாதது என்று கூறினார்.

உலகளாவிய முன்னணி பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள் (MoUs) மேற்கொண்டு, இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி மாணவர்களுக்கு சர்வதேச ஆய்வகங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்..

இவ்விழாவில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சசிதானந்தம் மற்றும் துறைத் தலைவர்கள்,பேராசிரியர்கள், பணியாளர்கள்,பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## விபத்தில்லா தீபாவளி பண்டிகை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி மாவட்ட பட்டாசு விற்பனையாளர்கள் சங்கம் மற்றும் தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் விபத்தில்லா தீபாவளி பண்டிகை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பாளையங்கோட்டையில் நடந்தது.

## மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**மதுரை, அக்.6:**

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்து டிஜிபி அனுலவலகத்திற்கு இ-மெயில் மூலம் மிரட்டல் வந்திருக்கிறது. இதைத்தொடர்ந்து மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் போலீஸார் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

அம்மன் சுவாமி சன்னதிகள், தங்க கொடிமரம், அன்னதானம் வழங்கும் இடம் உள்ளிட்ட இடங்களில் தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது. தெப்பக்குளம் உள்ளிட்ட பகுதிகளிலும் மோப்பநாய் உதவியுடன் தீவிர சோதனை நடத்தப்பட்டது.3 மணிநேர சோதனையில் எந்த வெடி பொருள்களும் கண்டறியப்படாத நிலையில் இ-மெயில் புரளி என தெரியவந்தது. இதேபோல் திருப்பரங்குன்றம் கோயில், சிக்கந்தர் தர்காவுக்கும் மர்ம நபர்களிடமிருந்து மிரட்டல் வந்ததாகக் கூறப்படுகிறது. இதையொட்டி, மிரட்டல் விடுக்கப்பட்ட இடங்களில் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு போலீஸார் மோப்ப நாய் உதவியோடு தீவிர சோதனை நடத்தினர். இதனால் அப்பகுதிகளில் பரபரப்பு நிலவியது.

## ஆர்டிஇ: புதிதாக சேர்க்கை நடத்த தனியார் பள்ளிகள் சங்கம் கோரிக்கை

**சென்னை, அக்.6:**

பள்ளிகளில் நிகழ் கல்வியாண்டில் ஏற்கெனவே சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு ஆர்டிஇ ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கீடு வழங்கினால், பள்ளிகளுக்கு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படும். இதனால் இந்தத் திட்டத்தின் கீழ் மாணவர்களைப் புதிதாக சேர்க்க தமிழக அரசு முன்வர வேண்டும் என தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பொதுச் செயலர் கே.ஆர்.நந்தகுமார், பள்ளிக் கல்வித் துறைச் செயலருக்கு அனுப்பிய கடிதம்: நீதிமன்றங்களின் உத்தரவுக்கேற்ப இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 25 சதவீதம் மாணவர் சேர்க்கை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தாண்டு எல்கேஜி வகுப்பில் சேர்ந்தவர்களில் 25 சதவீதம் தேர்வு செய்து பட்டியலை சமர்ப்பிக்க கால அவகாசம் தரப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளில் ஜூன் மாதமே மாணவர் சேர்க்கையை முடித்துவிட்டோம். இதுதவிர அந்த மாணவர்களிடம் கல்விக் கட்டணத்தைப் பெற்று அவர்களுக்குரிய புத்தகம், நோட்டுப் புத்தகம், சீருடை உள்ளிட்டவற்றை வழங்கி பாடங்களை நடத்தி காலாண்டு தேர்வுகளையும் முடித்துவிட்டோம். அதே மாணவர்களை 25 சதவீத ஒதுக்கீட்டில் சேர்த்தால் தனியார் பள்ளிகளுக்கு மீண்டும் மிகப்பெரிய பொருளாதார சிக்கல் ஏற்படும். எனவே, தயவுசெய்து தாங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பில் உள்ள குளறுபடிகளைச் சரிசெய்து புதிதாக ஆர்டிஇ மாணவர்களைச் சேர்க்க வழிசெய்ய வேண்டும். இல்லையெனில், தனியார் பள்ளிகளுக்கு பொருளாதார சிக்கல் ஏற்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

## டெங்கு பரவல் அதிகரிப்பு: சுகாதாரத் துறை அறிவுறுத்தல்

**சென்னை, அக்.6:**

தமிழகத்தில் சில மாதங்களாக நிலவி வரும் பருவநிலை மாற்றத்தால் காய்ச்சல் பாதிப்புகள் அதிகரித்து காணப்படுகின்றன. குறிப்பாக, டெங்கு காய்ச்சலை பரப்பும், 'ஏடிஸ் - எஜிப்டை' வகை கொசுக்கள் அதிகளவில் உற்பத்தியாகி நோய்களை பரப்பி வருகின்றன. இதன் காரணமாக, டெங்கு காய்ச்சல் பாதிப்பு மாநிலம் முழுதும் தீவிரமடைந்து வருகிறது. ஏற்கெனவே, இன்ப்ளுயன்ஸா வகை காய்ச்சல் அதிகரித்து, அனைத்து தரப்பு மக்களையும் பாதித்துவரும் நிலையில், டெங்கு பாதிப்பும் தீவிரமடைந்திருப்பது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து, பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: மழைக் காலம் என்பதால், டெங்கு காய்ச்சல் பாதிப்பு தீவிரமாக உள்ளது. குறிப்பாக, தினமும் 60 முதல் 70 பேர் வரை, டெங்கு காய்ச்சலில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். அதன்படி, நிகழாண்டில் இதுவரை 14,000-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு, ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். வரும் காலங்களில் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரிக்கும் என்பதால், இந்தாண்டு இறுதிக்குள் 20,000 பேர் வரை பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே, பொதுமக்கள் தங்கள் வீடுகளின் அருகில் உள்ள தேவையற்ற பொருள்களை அகற்ற வேண்டும். மேலும், வீட்டில் உள்ள, 'பிரிட்ஜ்' பின்பக்கம் தண்ணீர் வடிந்து தேங்கக்கூடிய தொட்டியை வாரத்தில் ஒருமுறையாவது தூய்மை செய்ய வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

## கரூர் பலி! விஜய்யை கூட்டணிக்குள் கொண்டுவர முயற்சி - சீமான்



**சென்னை, அக்.6:**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக ஒருவருக்கொருவர் பழியைப் போட்டுக்கொள்வதுவேதனையாக இருப்பதாக நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக தவெகவுக்கு ஆதரவாக பாஜக பேசுவதாக எழுப்பப்பட்ட கேள்விக்கு சீமான் கூறுகையில், ''தெருக்களில் கூட்டம் நடத்துவதைவிட, ஓரிடத்தில் கூட்டம் என்று அழைப்பு விடுத்து, பேசிவிட்டு கிளம்பி விடலாம். தெருக்களுக்குள் செல்வதால், எப்போதும் நெரிசலைத்தான் உண்டாக்கும். ஆனால், எல்லோரும் அதனைத்தான் செய்கின்றனர். இந்த மாதிரியான பரப்புரையை நிறுத்திக் கொள்ளுதல் அல்லதுமாற்றிக்கொள்ளுதல் நல்லது.

இல்லையெனில், மேலை நாடுகள் மாதிரி செய்யலாம். ஒவ்வொரு தலைவருக்கும் அரை மணிநேரம் அல்லது ஒரு மணிநேரம் பேசுவதற்கு ஒதுக்கலாம். இந்த இடத்தில் இவர் பேசவிருக்கிறார் என்று அறிவித்தால், யார் பேசுவது ஏற்புடையதோ அவர்களுக்கு வாக்கு செலுத்துவர்.

ஆனால், இதில் நேர விரயம், பண விரயம், பொதுமக்களுக்கும் தொந்தரவுதான் ஏற்படுகிறது. ஆகையால், மேலை நாடுகளின் முறையைக் கொண்டு வருவதுதான் நல்லது.

விஜய் வருவதனால்தான் கரூரில் கூட்டம்; அப்படியென்றால், அவர் வருவதுதான்முக்கியகாரணம். அப்படியிருக்கையில், அதற்கு பொறுப்பேற்று வருந்துகிறேன் என்று கூறினாலே முற்றுப் பெற்றுவிடும். அதை விட்டுவிட்டு,பழியைஅரசுஏற்க வேண்டும், காவல்துறை ஏற்க வேண்டும் என்றும், எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்று கூறும்போதுதான் சிக்கல் உண்டாகிறது. இருதரப்புக்கும் பொறுப்பு உள்ளது. அதனைத் தவற விட்டதால், பல உயிர்களை இழந்து விட்டோம்.

தகாத ஒரு நிகழ்வு நிகழ்ந்து விட்டது, இனி வரும் காலங்களில் கவனமாக இருக்க வேண்டும் என்று இருப்பதுதான் சரி. அதை விட்டுவிட்டு, மாறிமாறி ஒருவருக்கொருவர் பழியைப் போட்டுக்கொண்டு இவர்தான் காரணம், அவர்தான் காரணம் என்று கூறுவதைப் பார்க்கும்போது நமக்குதான் வேதனையாக இருக்கிறது. இது உயிரிழப்புகளைவிட கொடுமையாக இருக்கிறது.

அவரை எப்படியேனும் கூட்டணிக்குள் கொண்டுவர பாஜக முயற்சிக்கிறது; அதனால் பேசி வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

## தேஜ கூட்டணியில் இணையுமாறு விஜய்க்கு எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை: குஷ்பு




**சென்னை, அக்.6:**

தேஜ கூட்டணியில் இணையுமாறு விஜய்க்கு எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை என்று நடிகையும், பாஜக துணைத் தலைவருமான குஷ்பு தெரிவித்தார்.

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில் "தாமரை தேசமே" என்ற பாடல் வெளியீட்டு விழா சென்னை கமலாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நடிகையும் பாஜக மாநிலத் துணைத் தலைவருமான குஷ்பு சுந்தர், பாஜக மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவிற்குப்பிறகு, குஷ்பு தி.நகர் பாஜக அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அதில், நான் தமிழக வெற்றிக் கழகத்தின் செய்தித் தொடர்பாளர் அல்ல. அந்தக் கேள்வியை விஜய்யிடம் கேட்டு பதில் வாங்கிக் கொள்ளுங்கள்.

கரூர் விபத்துக்குப் பிறகு, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைய வேண்டும் என விஜய்க்கு எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை.

அது முற்றிலும் பொய்யான தகவல். மணிப்பூர் சம்பவத்தையும் கரூர் சம்பவத்தையும் ஒப்பிட்டு பேசுவது முற்றிலும் தவறு. மணிப்பூரில் எல்லைப் பிரச்னை இருக்கிறது. அங்கு நடந்ததை நான் ஒருபோதும் ஆதரிக்கவில்லை. ஆனால் கரூரில் நடந்தது தமிழக அரசின் பொறுப்பிலேயே நடந்தது.

கரூர் சம்பவம் தொடர்பாக தமிழக வெற்றிக் கழகத்தினர் சிபிஐ விசாரணை கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் மாநில அரசு ஏன் சிபிஐ விசாரணைக்கு ஒப்புதல் தராமல், மாநில காவல் துறையின் மூலமாகவே விசாரணை நடத்துகிறது? இது மக்களின் மனதில் சந்தேகம் எழுப்பும் விதமாக உள்ளது என்றார்.

## வேளாண் பல்கலைக்கழகங்களில் 20% இடங்கள் ஐசிஏஆர் தேர்வு மூலம் நிரப்பப்படும்: சிவராஜ் சிங் சௌகான்



**புதுடெல்லி, அக்.6:**

நாடு முழுவதும் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் வேளாண் பல்கலைக்கழகங்களில் உள்ள இளநிலைப் படிப்புகளுக்கான இடங்களில் 20 சதவீதத்தை அகில இந்திய போட்டித் தேர்வு மூலம் நிரப்பப்படும் என மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் சனிக்கிழமை அறிவித்துள்ளார்.

ஒரு நாடு, ஒரு விவசாயம், ஒரு குழு என்ற கொள்கையின்படி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் இந்தத் தேர்வை நடத்தும் என்று வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை 12 ஆம் வகுப்பில் உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதம் அல்லது வேளாண்மை படித்த மாணவர்கள் 'க்யூட்-ஐசிஏஆர்'சிய நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து செய்தியாளர்களுடன் பேசிய சிவராஜ் சிங் சௌகான், வேளாண் கல்லூரி மற்றும் வேளாண் பல்கலைக்கழகங்களில் உள்ள இளநிலைப் படிப்புகளுக்கான இடங்களில் 20 சதவீதத்தை அகில இந்திய போட்டித் தேர்வின் அடிப்படையிலேயே நிரப்பப்படும். இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு சேர்க்கை எளிமைப்படுத்தப்படுவதாக கூறினார்.

இது 2025-26 கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்றும், இது பி.எஸ்சி. வேளாண்மையில் சேருவதில் உள்ள சேர்க்கை தொடர்பான சிக்கல்களையும் நீக்கும். இதன் மூலம் சுமார் மூவாயிரம் மாணவர்கள் நேரடியாக பயனடைவார்கள் என்று சௌகான் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### வறட்சியான கண்களுக்கு தீர்வு



நீங்கள் தொடர்ந்து சில மணி நேரம் கம்ப்யூட்டர் திரையைப் பார்த்தபடி வேலை செய்கிறீர்களா? அப்படியானால், வேலை முடிந்ததும் உங்கள் கண்கள் சோர்வடைந்து, பார்வை மங்கினாற்போல் உணர்வது சகஜம்தான். மேலும், கண்களைச் சுற்றி லேசான வலி, கண்கள் வறண்டு போய் நீரின்றி எரிச்சலாக உணர்வதும் உண்டு. இப்படி கண்கள் வறண்டு போவதைத் தடுக்கவும், கண்களின் மொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் வீட்டில் இருந்தபடியே நாம் செய்யக்கூடிய சில எளிய மற்றும் பயனுள்ள மருத்துவக் குறிப்புகளை இந்தப் பதிவில் பார்ப்போம்.

1. ரோஸ் வாட்டர்: கண்களை மூடிக்கொண்டு, ரோஸ் வாட்டரில் நனைத்த பஞ்சை இமைகளின் மீது சிறிது நேரம் வைத்து எடுக்க கண் எரிச்சலும், வறட்சியும் விரைவில் நீங்கும்.

2. நெய்: பசு நெய்யில் தேவையான கொழுப்பு அமிலங்களும் கண்களுக்கு ஆரோக்கியம் தரும் ஊட்டச் சத்துக்களும் அதிகம் உள்ளன. தினசரி உணவில் சிறிதளவு நெய் சேர்த்து உண்பது கண்களில் வறட்சித் தன்மையை நீக்கி கண்கள் ஆரோக்கியம் பெற உதவும்.

3. நெல்லிக்காய்: ஆம்லா எனப்படும் நெல்லிக்காயில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் கண்களின் வறட்சித்தன்மை நீங்கவும் கண்களின் மொத்த ஆரோக்கியம் மேன்மையடையவும் உதவும். நெல்லிக்காயை அப்படியே சாப்பிடலாம் அல்லது சப்ளிமென்ட்டாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

4. ஆலுவேரா ஜெல்: ஆலுவேரா ஜெல் ஆன்டி இன்ஃபிளமேட்டரி குணம் கொண்டது. இதில் நீர்ச் சத்தும் அதிகம். இந்த ஜெல்லை கண்களைச் சுற்றிலும் தடவி வைக்க வறட்சியுற்ற கண்கள் நீரேற்றம் பெறும்; கண்கள் குளிர்ச்சியடையவும் செய்யும்.

5. டயட் மற்றும் நீர்ச்சத்து: கண்களின் ஆரோக்கியத்திற்கு வைட்டமின்கள், மினரல்கள், நீர்ச்சத்து மற்றும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சரிவிகித உணவு உட்கொள்வது அவசியம். உணவில் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த வால்நட் மற்றும் ஃபிளாக்ஸ் சீட்களை சேர்த்து உண்பதும் சரியான அளவு நீர் அருந்துவதும் நல்ல பலன் அளிக்கும்.

6. திரிபலா பொடி: நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக் காய் ஆகிய மூன்று காய்களை உபயோகித்து ஆயுர்வேத மருத்துவ முறையில் தயாரிக்கப்படுவது திரிபலா பொடி. இந்த பவுடரை பசு நெய்யில் கலந்து சாப்பிட கண் திசுக்கள் மற்றும் நரம்புகள் வலுப்பெறும். மேலும், பார்வைத் திறன் அதிகரிக்கும். திரிபலா பொடியை ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து பத்து நிமிடம் கொதிக்க வைத்து, குளிர்ந்த பின் அந்த நீரை வடிகட்டி அதில் கண்களைக் கழுவுவதும் கண்கள் ஆரோக்கியம் பெற உதவும். (இதை உபயோகிக்கும் முன் மருத்துவரின் ஆலோசனை பெறுவது அவசியம்.)

7. தரமான தூக்கம்: தினமும் ஆழ்ந்த அமைதியான போதுமான அளவு தூக்கம் பெறுவதும் கண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். தூக்கமின்மை கண் வறட்சியை அதிகமாக்கவும், கண் ஏரிச்சலை உண்டாக்கவும் செய்யும்.

8. யோகா பயிற்சி: யோகா முறையில் கண்களுக்கு தினசரி பயிற்சி அளிப்பதும், பிரணாயமா (மூச்சிப் பயிற்சி) செய்வதும் கண்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து கண்கள் சோர்வடைவதைத் தடுக்கும். கண்களில் வறட்சியை நீக்கி முழு ஆரோக்கியம் பெற உதவும்.

வேலைக்கிடையே அவ்வப்போது இடைவெளி கொடுத்து கண்களுக்கு அழுத்தம் ஏற்படுவதை குறைக்கலாம். பாதுகாப்பு கண்ணாடி அணிவது, வேலை செய்வதற்கு தேவையான அளவு முறையான வெளிச்சம் கிடைக்கும் இடத்தை தேர்வு செய்வது போன்றவையும் கண் வறட்சி அடையாமல் ஆரோக்கியமுடன் இருக்க உதவும்.

# வீட்டிலுள்ள பழைய பொருள்களை அகற்ற வேண்டுமா? சென்னை மாநகராட்சி புதிய சேவை!

**சென்னை, அக்.6:**

வீட்டில் இருக்கும் பழைய பொருள்களை அகற்ற சென்னை மாநகராட்சி ஒரு புதிய சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னை மாநகரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளில் தேங்கிக் கிடக்கும் பயன்படுத்த முடியாத அல்லது தேவையற்ற பழைய பொருள்களை அகற்ற அவற்றை அப்படியே குப்பைகளுடன் போட்டுவிடுவதுண்டு.

இதைத் தவிர்க்கும் வகையில் சென்னை மாநகராட்சி ஊழியர்களே வீட்டிற்கு வந்து பழைய பொருள்களை சேகரித்துக்கொள்ளும் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




வீட்டில் இருக்கும் தேவையற்ற நாற்காலிகள், படுக்கைகள், மேசைகள், துணிகள், மின்னணு பொருள்கள் போன்றவற்றை ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறும் சிறப்பு கழிவு சேகரிப்பு சேவையின் மூலம் பாதுகாப்பாக ஒப்படைக்க மாநகராட்சி வலியுறுத்துகிறது.

எப்படி செய்வது?

1. இந்தச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர் 1913 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுக்கு அழைக்கலாம் அல்லது 9445061913 என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் மூலமாகவோ அல்லது நம்ம சென்னை செயலியில் பதிவு செய்ய வேண்டும்.

2. உங்கள் கோரிக்கை சென்னை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அதிகாரிக்குத் தெரிவிக்கப்படும்

3. சனிக்கிழமைகளில் உங்கள் வீட்டிற்கு வரும் மாநகராட்சி வாகனங்களில் வீட்டிலுள்ள பழைய பொருள்களைச் சேகரித்துக் கொடுக்கலாம்.

4. சென்னை மாநகராட்சியின் இந்தச் சேவை சனிக்கிழமைகளில் மட்டுமே கிடைக்கும்.

5. சேகரிக்கப்பட்ட பொருள்கள் மாநகராட்சியால் பாதுகாப்பாக எரிக்கப்படும். தேவையற்ற மற்றும் பழைய பொருள்களைச் சரியான முறையில் அப்புறப்படுத்தப்படும்.

சென்னையைத் தூய்மையாக வைத்திருக்க மக்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு சென்னை மாநகராட்சி வலியுறுத்தியுள்ளது.






## வங்கிக்காப்பீட்டு சேவை: எல்ஐசி - ஆர்பிஎல் ஒப்பந்தம்




வங்கிக்காப்பீட்டு சேவை வழங்குவதற்காக இந்தியாவின் மிகப்பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்ஐசியுடன் தனியார் துறையைச் சேர்ந்த ஆர்பிஎல் வங்கி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து ஆர்பிஎல் வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வங்கிக்காப்பீட்டு சேவை தொடர்பாக எல்ஐசி-யுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஆர்பிஎல் வங்கி வாடிக்கையாளர்கள், வங்கியின் கிளைகள் மற்றும் எண்ம தளங்கள் வழியாக எல்ஐசியின் பல்வேறு ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகளைப் பெறலாம். இதில் பருவகாலக் காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் யூனிட்-இணைக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டங்கள் அடங்கும்.

எல்ஜசியின் 3,600-க்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் தொலைதூர அலுவலகங்கள், ஆர்பிஎல் வங்கியின் 2,000-க்கும் மேற்பட்ட மையங்களுடன் இணைந்து ஆயுள் காப்பீடு பெறுவதை எளிதாக்கி, '2047-க்குள் அனைவருக்கும் காப்பீடு' என்ற புரட்சிகர இலக்கை நோக்கி முன்னேறும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவகாசியில் 30% உற்பத்தி குறைவு: பட்டாசு விலை 20% வரை அதிகரிக்க வாய்ப்பு



சிவகாசி: சிவகாசியில் உரிமம் ரத்து செய்யப்பட்ட பட்டாசு ஆலைகளுக்கு உற்பத்தி அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், ஆய்வு மற்றும் விபத்து அச்சம் காரணமாக முன்கூட்டியே பட்டாசு ஆலைகள் மூடப்பட்டதால் 30 சதவீதம் வரை உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் 20 சதவீதம் வரை விலை உயர வாய்ப்புள்ளதாக உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1,080-க்கும் அதிகமான பட்டாசு ஆலைகள் இயங்கிவருகின்றன.

நாட்டின் மொத்த பட்டாசு தேவையில் 90 சதவீதம் சிவகாசியில் உற்பத்தி செய்யப்படுகிறது. பேரியம் நைட்ரேட் மற்றும் சரவெடி உற்பத்திக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்ததால், பிஜிலி, சக்கரம், புஸ்வானம், லட்சுமி, குருவி, மத்தாப்பு, ஆட்டம் பாம், உயரே சென்று வெடிக்கும் பேன்ஸி ஷாட் என 60 சதவீதம் பட்டாசுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

# சென்னை வந்த எக்ஸ்பிரஸ் ரயிலில் திடீர் புகை

**ராணிப்பேட்டை, அக்.6:**

திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை சென்டிரல் வரை செல்லும் திருவனந்தபுரம் அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரெயில் இன்று காலையில் காட்பாடியை கடந்து அரக்கோணத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. காலை 8.20 மணியளவில் மேல்பாக்கம் ரெயில் நிலைய பகுதியில் வந்தபோது எக்ஸ்பிரஸ் ரெயிலில் இருந்த ஒரு ஏ.சி. பெட்டியில் இருந்து திடீரென புகை வந்துள்ளது.

உடனடியாக அந்த பெட்டியில் பயணம் செய்த பயணிகள் அபாய சங்கிலியை பிடித்து இழுத்தனர். ரெயில் நின்றதும் அவர்கள் ரெயில் பெட்டியில் இருந்து அலறியடித்துக்கொண்டு இறங்கினர். தகவல் அறிந்ததும் மேல்பாக்கம் ரெயில் நிலையத்தில் இருந்த ரெயில்வே ஊழியர்கள் விரைந்து சென்று தீயணைப்பான் கருவி மூலம் ஏ.சி. பெட்டியில் இருந்து வந்த புகையை கட்டுப்படுத்தினர்.




தொடர்ந்து புகை வந்ததற்கான காரணம் குறித்து சோதனை செய்தபோது சக்கரங்களில் ஏற்பட்ட பிரேக் அழுத்த ஏற்ற இறக்கத்தின் காரணமாக புகை வந்தது தெரிய வந்தது. அதைத் தொடர்ந்து ரெயில்வே ஊழியர்கள் பிரேக் அழுத்தத்தை சரி செய்தனர். ரெயிலில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை என தெரிய வந்ததையடுத்து பயணிகள் நிம்மதி அடைந்தனர். இதனை தொடர்ந்து சுமார் 30 நிமிடங்கள் தாமதமாக ரெயில் அரக்கோணத்தை நோக்கி புறப்பட்டு சென்றது.

# வால்வோ புதிய அரசு சொகுசு பஸ்கள் இயக்க ஏற்பாடு

**சென்னை, அக்.6:**

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் முதல் முறையாக 20 வால்வோ மல்டி ஆக்சில் சொகுசு பஸ்கள் பொங்கலுக்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது.

இதுபற்றி அரசு விரைவு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது:-

விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் 1080-க்கும் மேற்பட்ட டீலக்ஸ் மற்றும் ஏ.சி. பஸ்கள் இயக்கப்படுகின்றன. தினமும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்கின்றனர். இப்போது முதல் முறையாக 20 வால்வோ மல்டி ஆக்சில் சொகுசு பஸ்களை இயக்க உள்ளோம். சட்டசபையில் ஏற்கனவே இது தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. அதன்படி ஒவ்வொரு பஸ்சும் ரூ.1.15 கோடி மதிப்பில் வாங்கப்படுகிறது. இந்த பஸ் 15 மீட்டர் நீளம் உடையது.




இதற்கான கொள்முதல் ஆணை வால்வோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு உள்ளது. இந்த வால்வோ பஸ் வழக்கமான பஸ்சை விட பெரியதாக இருக்கும்.

ஒரே நேரத்தில் 51 பேர் பயணம் செய்ய முடியும். அதிர்வுகள் இல்லாமல் பயணிக்கலாம். சொகுசு படுக்கை வசதி, ஏ.சி. வசதி, மொபைல் போன் சார்ஜிங் வசதி, வைபை, பயணிகளுக்கு தனிப்பட்ட ரீடிங் விளக்குகள் ஆகிய வசதிகள் இதில் இடம்பெறுகிறது.

ஆம்னி பஸ்களுக்கு இணையாக வாங்கப்பட்டு பொங்கலுக்கு பயணிகளுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## வீராணம் ஏரியில் ரூ.63.50 கோடி வெள்ள தடுப்பு பணிகள்: அமைச்சர் துவக்கி வைத்தார்

**கடலூர், அக்.6:**

கடலூர் மாவட்டம், லால்பேட்டை வீராணம் ஏரிப்பகுதியில் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் விரிவான வெள்ள தடுப்பு பணியினை கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

முதலமைச்சர் உத்தரவின் அடிப்படையில் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்திடவும், தமிழ்நாடு அரசினால் அவ்வப்போது அறிமுகப்படுத்தும் திட்டங்களின் பயன்கள் பொதுமக்களை சென்றடையும் வகையிலும் பல்வேறு துறைகளின் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

வீராணம் ஏரிக்கு கடந்த 60 ஆண்டுகால வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த டிசம்பர் 2024இல் அதிகப்பட்சமாக 30,000 கனஅடி வெள்ளநீர் வந்தடைந்தது. இதனால் வீராணம் ஏரி நிரம்பிய நிலையில், கதவணைகளின் அளவை தாண்டி, திடீரென வெளியேறியதால், வடிகால் வாய்க்கால் கரைகள் சேதமடைந்து அருகிலுள்ள கிராமங்களில் வெள்ள நீர் உட்புகுந்து அதிகப்படியான சேதம் ஏற்பட்டது. இவ்வாறான எதிர்பாராவிதமான வெள்ள சேதங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, முதலமைச்சர் கடலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்தபோது வீராணம் ஏரிக்கு ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் விரிவான வெள்ள தடுப்பு பணி மேற்கொள்ள அறிவிப்பு வெளியிட்டார்.

அதனடிப்படையில் இன்றைய தினம், ரூ.29.00 கோடி மதிப்பீட்டில் வீராணம் ஏரியில் கூடுதல் நீர்போக்கி அமைத்தல் மற்றும் பாழ்வாய்க்கால் வடிகால் வாய்க்கால்களை மேம்படுத்தும் பணிகள், ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் வீராணம் ஏரியின் உபரி நீர்போக்கிகள் மற்றும் வடவாறு உள்வாங்கி மதகுகளில் உள்ள சேதமடைந்த இரும்பு கதவுப்பலகை மற்றும் மின்தூக்கி சீரமைக்கும் பணிகள், ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் வீராணம் நீர்தேக்க பிரதான உபரி வாய்க்காலான வெள்ளியங்கால் ஓடை மற்றும் மணவாய்க்கால்களை புனரமைத்து மேம்படுத்துதல் மற்றும் வெள்ள தடுப்புசுவர் கட்டும் பணி பணிகளையும், துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

வீராணம் ஏரியை சுற்றுலா தலமாக மேம்படுத்தும் வகையில் பல்வேறு வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், ரூ.10 கோடி மதிப்பீட்டில் பூங்கா உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப் படவுள்ளது, இதன் மூலம் இப்பகுதி வளர்ச்சி ஏற்படுவதுடன் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் ஜனவரி மாதம் திறக்கப்படும்: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**கீழடி, அக்.6:**

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் வரும் ஜனவரி மாதம் திறக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் உள்ள அகழாய்வில், தமிழர்களின் நாகரிகத்தின் தொன்மை வெளிக்கொண்டு வரப்பட்டு உள்ளது. இது உலக அரங்கத்தில் தமிழர்களின் பெருமையை தூக்கிப்பிடிக்கும் சான்றாக அமைந்துள்ளது. எனவே அங்கு அகழாய்வு செய்து எடுக்கப்படும் சான்றுகளான தொல்பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு இருந்தார். அதன்படி கட்டப்பட்ட கீழடி அருங்காட்சியகத்தை அவர் திறந்து வைத்தார்.

2 ஏக்கர் நிலப்பரப்பில் 31 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தை உலகமெங்கிலும் இருந்து வரும் தமிழர்கள் மட்டுமல்லாமல், வெளிநாட்டவர்களும் வந்து பார்வையிட்டு ஆச்சரியம் தெரிவித்து வருகின்றனர்.



இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று கீழடி அருங்காட்சியகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார். மேலும், கீழடியில் நடைபெற்று வரும் திறந்தவெளி அகழாய்வுப் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார். அப்போது அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பெரிய கருப்பன், ராஜகண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் கீழடி அருங்காட்சியகம் குறித்து முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கூறப்பட்டு இருப்பதாவது:- கீழடி கண்டேன், பெருமிதம் கொண்டேன். திறந்து வைத்த 30 மாதங்களில் 12 லட்சம் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது கீழடி அருங்காட்சியகம்.

வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து வருவோரும், தமிழரின் தொன்மை கவினுறக் காட்சிப்படுத்தப்பட்டு இருப்பது கண்டு வியப்பதை, திடீர் ஆய்வுக்காக அங்கு சென்றபோது அறிந்து கொண்டேன்.

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகமும் வரும் ஜனவரியில் திறக்கப்பட இருக்கிறது. பொருநை அருங்காட்சியகம் வரும் டிசம்பரிலேயே மக்கள் பார்வைக்கு திறக்கப்பட உள்ளது. கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றுமொரு அருங்காட்சியகம் எழுந்து வருகிறது. பூம்புகார் ஆழ்கடல் ஆய்வுகள் தொடங்கிவிட்டன.

நிலத்திலும், நீரிலும், இலக்கியத்திலும் ஆய்ந்து, இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு, தமிழ் நிலத்திலிருந்து தொடங்கித்தான் எழுதப்பட வேண்டும் என்பதை உறுதிசெய்து வருகிறது நமது திராவிட மாடல் அரசு.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாலைவன ரோஜா



அது அந்த நகரின் ஒரு பிரபல பள்ளி.ஷியாம் அந்த நகரின் ஒரு பிரபல ஓட்டல் தொழிலதிபரின் அப்பா.தன்னுடைய இறுதிக் காலத்தில் பையனுடன் வந்து ஒட்டிக் கொண்ட ஷியாமுக்கு அந்த பள்ளியைப் பற்றி ஒன்றும் தெரியாது.

பல பெற்றோர்கள் அந்தப் பள்ளியின் முதல்வரைப் பார்க்க வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். ஷியாம் தன் சமூக அந்தஸ்துக் காரணமாக நேரில் பள்ளி முதல்வரின் அறைக்குள் சென்றார். உள்ளே முதல்வர் இருக்கையில் உட்கார்ந்திருந்த கவிதாவை பார்த்த அவர் அதிர்ந்து தான் போனார்.பல வருடங்களுக்குப் பிறகு அவர் அவளை இன்று எதிர்பார்க்காமல் பார்க்கிறார்.கவிதா பார்ப்பதற்கு இப்போது சற்று ஒல்லியாகியிருந்தாள். காதோரம் இலேசான நரை தோன்றத் தொடங்கியிருந்தது.

கோல்டன் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியை தன் கூர்மையான மூக்கின் மேல் சற்றே அழுத்தியவாறு,'வாங்க உட்காருங்கள்' என்று அமைதியாகச் சொன்னாள். 'என்ன வேண்டும்?' என்று அவரைக் கேட்டாள் கவிதா பள்ளி முதல்வராக.

'என்னுடைய பேரன் முருகேஷ் இவன். இவனை எல்.கே.ஜி.யில் உங்கள் பள்ளியில் சேர்க்க நீங்கள் உதவ வேண்டும்' என்று தன்னுடைய சன்னக் குரலில் மெதுவாகச் சொல்லியபடியே தன் விசிட்டிங் கார்டை அவளிடம் நீட்டினான். அதை அமைதியாக வாங்கிக் கொண்டாள் கவிதா.

எப்பொழுதும் அதிர்ந்து பேசும் ஒரு குரல் இப்பொழுது இவ்வளவு மென்மையாக ஒலிப்பதைக் கேட்ட கவிதாவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. 'ஒரு காலத்தில் என்னை இந்த ஷியாம் மட்டுமல்ல, இவனுடைய அக்கா, அப்பா, அம்மா, எல்லோரும் அப்பா இல்லாத என்னை எவ்வளவு கேவலமாக நடத்தினார்கள்? எப்பொழுதும் பணம், பணம் என்று வரதட்சணை கேட்டு துன்புறுத்தினார்கள். இவனை இப்பொழுது பழிவாங்கி விடலாமா?' என்று கவிதாவின் உள் மனம் சொன்னது. ஆனால் அவள் படித்த படிப்பு அவளை, 'கண்ணியமாக நடந்து கொள்' என்றது.

30 வருடங்களுக்கு முன்னால் கவிதாவின் கணவன் ஷியாம். அவனும் அவன் குடும்பமும் கவிதாவுக்கு செய்த கொடுமைகள்தான் எத்தனை? ஒரு ஆறு மாத காலம் பொறுமை காத்த கவிதா,'நீயும் வேண்டாம். உன்னுடைய குடும்பமும் வேண்டாம்.' என்று நீதிமன்றப் படியேறி விவாகரத்து வாங்கி விட்டாள். ஒரே துணையாக இருந்த அம்மாவையும் இழந்த கவிதா, பல்வேறு பள்ளிகளுக்கு ஆசிரியர் பணிக்கான நேர்காணலுக்குச் சென்றாள்.

இந்த பள்ளியை நடத்தி வந்த யுவராஜ்தான் ஆசிரியர் பணிக்கு வந்த இவள் மேல் அக்கறைக் கொண்டு, தன்னுடைய வயதான அம்மாவிற்கு அவளை உதவியாக பணிக்கு அமர்த்தினான். அவன் அம்மாவின் பரிந்துரையின் பேரில் அவளையே மனைவியாக்கியும் கொண்டான்.

அவன்தான் அந்த பள்ளியின் நிர்வாகி. கூடுதலாக அவனுக்கு கணினி உதிரி பாகங்களை விற்கும் கம்பெனி ஒன்றும் உள்ளது. விரைவில் ஆசிரியர் பயிற்சி முடித்திருந்த கவிதா அந்தப் பள்ளியின் நிர்வாகியானாள். அந்தப் பகுதியிலேயே அது பிரபல பள்ளியாக அவளது உழைப்பால் மாறியது.

விவாகரத்தான பிறகு கவிதாவை பற்றிக் கவலைப்படாத ஷியாம்தான் இன்று கவிதாவின் உதவியைக் கேட்டு வந்திருக்கிறான். 'அவள் கொடுப்பாளா? மாட்டாளா?' என்ற சஞ்சலம் அவன் மனதில் ஓடிக் கொண்டு இருந்தது. அவன், 'நான் செய்ததெல்லாம் தவறுதான். நான் என்னுடைய பெற்றோரின் பேச்சைக் கேட்டு அப்படி செய்து விட்டேன்' என்று சொல்லி மன்னிப்பு கேட்டான் ஷியாம். அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாத கவிதா, உள்ளே இருந்த அலுவலக ஊழியரை அழைத்தாள்.'சார்'கிட்ட அட்மிஷன் ஃபார்ம் ஒன்னு கொடுத்து ஃபில் அப் பண்ணி வாங்கிக்குங்க.'என்றாள்.'நீங்கள் மண்டே வந்து ஃபீஸ் கட்டிடுங்க'என்றாள் ஷியாமிடம்.

தன்னுடைய அடுத்த பணியை பார்க்கத் தொடங்கினாள் கவிதா. ஏற்ற கோணத்தில் இருந்த கவிதாவின் அறையிலிருந்து வெட்கத்துடன் வெளியேறினான் ஷியாம். கம்பீரமாக உள்ளே சென்ற தொழிலதிபர் கவலையுடன் வெளியே வருவதைப் பார்த்தவர்கள் அவர்களுக்குள் குழம்பித்தான் போயிருந்தார்கள்.

இவன் பாலைவனமாக்கிய அவள் வாழ்க்கை இன்று ஒரு ரோஜாத் தோட்டமாக மாறி உள்ளது என்பது அவன் மனதுக்கு மட்டும்தானே தெரியும் பாலைவனத்தில் ரோஜாக்களும், பசுமையான தோட்டத்தில் முட்களும் இருக்கலாம். நாம் தான் பார்த்து வாழ்க்கையை கொண்டு செலுத்த வேண்டும் இது எனக்கு கவிதாவின் வாழ்க்கை சொல்லிக் கொடுத்த பாடம்.உங்களுக்கும்தானே?



**முனைவர் என். பத்ரி**
ஆதம்பாக்கம், சென்னை

# சோர்ந்து விடாதே.

அந்தச் செய்தி ஆச்சர்யம் மட்டுமல்ல, ஆனந்தமாய் இருந்தது.
நான் ஃபோனில் அவனைத் தொடர்பு கொண்டேன்.
"நீ சொன்னது நிஜமா?"
சில நேரங்களில் அவன் கலாய்ப்பதும் உண்டு.
"எனக்கே நம்பிக்கை இல்லைடா ,கடவுள் அருள் தாண்டா." அவன் குரலில் சந்தோஷம் தவழ்ந்தது.

"ஆமாம் உனக்கு எழுத கூட வருமா" நக்கலாய்த்தான் கேட்டேன் "டேய் ரொம்ப நக்கல் பண்ணாதே.ஏதோ ஸ்கூல் நாட்களில் என் எழுத்தில் எழுத்து பிழை நிறைய இருக்கும். கூட்டி கூட்டி படிச்சா ஒரு பத்தியை முடிக்க ஒரு மணி நேரமாகும். கொஞ்சம் ஸ்லோ தான்....அதுக்காக அப்படியே இருப்பேனா".
அவன் சொல்லி முடிக்கும்போது பழைய நினைவு ஒன்று என் நினைவில் பொறி தட்டியது.

நான் பள்ளி மாணவர் தலைவன். தலைமை ஆசிரியர் என்னை அழைத்து அடுத்த வாரம் நடைபெற இருக்கும் ஜில்லா கல்வி அதிகாரியின் இன்ஸ்பெக்சன் பற்றி விளக்கமாய் என்னிடம் சொன்னார்.
பள்ளியின் நற் பெயரைக் காக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்
மாணவர் தலைவன் என்கிற பொறுப்பில் சுறு சுறுப்பாய் சுழலத் தொடங்கினேன்.

அன்று நடக்கவிருக்கும் அஜெண்டாவை தமிழாசிரியர் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர் என இவர்களைக் கலந்து முடிவு பண்ணேன்.
முதல் அஜெண்டா கடவுள் வாழ்த்து.சங்கரன் கணீரென்ற குரலெடுத்துப் பாடுவான்.அதற் கடுத்து ஒரு குறள் சொல்லி விளக்க வேண்டும். நந்த கோபால் ரொம்ப ஆசைப்பட்டான்.அவனிடம் அதை விட்டு விட்டேன்
அன்றறைய முக்கிய செய்தி வாசிப்பு.அதை எப்பொழுதும் நன்றாகச் செய்யும் ரஹீம் எடுத்துக் கொண்டான்.
அன்று ஸ்கூல் பரபரப்போடு இருந்தது. ஜில்லா கல்வி அதிகாரி ஃபுல் கோட், சூட்டோடு வந்திருந்தார்.
தலைமை ஆசிரியர் கோட்டு சூட்டுடன், டர்பனும் அணிந்திருந்தார்.
நான் மாணவர்கள் சீருடையோடு வருவதை ஊர்ஜிதம் செய்தேன்.
உடற்பயிற்சி ஆசிரியர் விசிலடித்ததும், மாணவர்கள் கொடிக் கம்பத்தின் முன் வகுப்பு வாரியாக வரிசை கட்டி நின்றனர்.
தலைமை ஆசிரியர் கொடிக் கயிற்றை ஜில்லா அதிகாரியிடம் தந்தார்.
மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது.
சங்கரன் தன் வெண்கலக் குரல் எடுத்து விநாயகரை வணங்கினான்.
அடுத்து குறள் ஒன்றைச் சொல்லி அதை விளக்க வந்த நந்த கோபால் ஏனோ குழம்பிப் போனான்.

உள்ளுவது எல்லாம் உயர் உள்ளல் என்பதை மாற்றி உண்ணுவது எல்லாம் உயர் உண்ணல் என்று உல்டாவாய்ச் சொன்னான்.
ஜில்லா அதிகாரி சிரித்துவிட்டார்.தலைமை ஆசிரியர் சங்கடத்தில் தவித்து என்னை தன் அறைக்கு வர உத்திரவிட்டார்.



"எதற்காக நந்தகோபாலிடம் திருக்குறளைச் சொல்லச் சொன்னாய். அவனுக்கு தமிழ் சரியாக வராது.தமிழ் பரீட்சையில் எப்பவும் ஃபெயில் ஆவான். நம்ப ஸ்கூல் பேரை ரண்டு பேரும் சேர்ந்து கெடுத்துட்டீங்க". சரமாரியாக திட்டினார்.
அன்று நொந்து போன அந்த நந்த கோபால் இன்று என்னை அழைத்து அந்த ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்த அந்தச் செய்தியை சொன்ன போது என்னால் நம்பவே முடியல.
அவன் வீட்டிற்கேச் சென்று அவனை வாழ்த்த ,அங்கு சென்றேன்.
" மணி" என்று அழைத்து என்னைக் கட்டித் தழுவினான்.
"எப்படிடா இந்த அதிசயம் நடந்தது" நான் நக்கலாய்க் கேட்கவில்லை. நெஞ்சு நிறைந்த சந்தோஷத்தோடு கேட்டேன்.

"எல்லாரு மே எனக்குத் தமிழ் வராதுன்னு கிண்டல் பண்ணும் போதெல்லாம், நான் அதை ஒரு இன்ஸல்ட்டா எடுத்துக்கல.

இவங்க முன்னாடி ஜயித்துக் காட்டணுங்கற வெறி எனக்குள் வந்துடுச்சு. ஜில்லா கல்வி அதிகாரி அன்னிக்கு என்னைப்பார்த்துச் சிரிச்சது எனக்கு அவமானமாய் இருந்துச்சு.

அன்னியிலேர்ந்து நிறைய படிக்க ஆரம்பிச்சேன்.
சிறு கதைகள் நாவல்கள் என, லைப்ரரியில் அடுக்கி வச்சதெல்லாம் படிச்சு படிச்சு, நானும் எழுத முயற்சி பண்ணேன்.
அதுல ஜெயிச்சுட்டேன்".
வெற்றியின் சந்தோஷம் அவன் முகமெங்கும் ஜொலித்தது.
மீண்டும் கட்டித் தழுவி அந்தப் புத்தகத்தை கையில் வாங்கினேன்.
"சோர்ந்துவிடாதே. சொர்க்கம் உன் கையில்"
உலகளாவிய குறுநாவல் போட்டியின் ஓட்டத்தில் முதல் இடத்தில் நின்று, ஆனந்தக் கண்ணீரில் ஆழ்ந்தான் .



**-சுந்தர மணிவண்ணன்**
சிட்ல பாக்கம்,
சென்னை 600 064.

# திருவிளையாடல் புராணம்

3




**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## திருநகரங்கண்ட படலம்

மதுரைக் காண்டத்தின் மூன்றாவது படலம், திருநகரங்கண்ட படலம். சிவனின் திருவிளையாடலால் கடம்பவனத்திற்கு மதுரை என்ற பெயர் ஏற்பட்டது குறித்து விளக்கும் படலமே, திருநகரங்கண்ட படலம். திருநகரங்கண்ட படலம், மதுரை நகரம் உருவானது பற்றியும், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் தோற்றம் குறித்தும், பாண்டியர்களின் தலைநகர் மாற்றம் பற்றியும் கூறுகிறது.

பாண்டியநாடு பழங்காலத்தில் கடம்பவனங்கள் நிறைந்த வனமாக இருந்தது. அதனால் அதற்குக் 'கடம்ப வனம்' என்ற பெயரும் இருந்தது. கடம்ப வனத்திற்கு கிழக்கே மணவூர் என்ற நகர் ஒன்று இருந்தது. அதனைத் தலைநகராகக் கொண்டு குலசேகர பாண்டியன் ஆட்சி செய்து வந்தான். அவ்வூரில், சிவபெருமானிடம் பெரும் பக்தி கொண்ட தனஞ்செயன் என்ற வணிகன் ஒருவன் இருந்தான்.
ஒரு சமயம் தனஞ்செயன் வணிகத்திற்காக மணவூருக்கு மேற்கே உள்ள ஊர்களுக்கு சென்றான். வணிகத்தை முடித்துவிட்டு ஊர் திரும்பும்போது இடையில் உள்ள கடம்ப வனம் வழியாகப் பயணம் செய்தான். அப்போது மாலை முடிந்து இரவு நேரம் வந்ததால், சூரியன் மறைந்து, கானகத்தை இருள் சூழ்ந்தது. சிவனே துணை என்றவாறு தனஞ்செயன் நடந்துகொண்டிருந்தான்.

அவன் செல்லும் வழியில், திடீரென ஓரிடத்தில் மிகப் பிரகாசமான ஒளி ஒன்று தென்பட்டது. ஆச்சரியத்துடன் தனஞ்செயன் அதை நோக்கிச் சென்றான். அங்கு, எட்டு யானைகளால் தாங்கப்பட்ட விமானத்தின் கீழ் வீற்றிருந்த சொக்கநாதரைக் கண்டான். இந்தக் கோயில் இங்கே எப்படி வந்தது? யார் கட்டியது? என்று தனஞ்செயன் குழம்பினான். அருகில் இருந்த குளத்தில் பொற்றாமரைகள் பூத்துக் கிடந்ததைப் பார்த்து வியந்து வணங்கினான். திடீரென வாத்தியங்கள் முழங்கும் ஒலி கேட்டது. தலையில் கிரீடங்களுடன், பூஜை பொருட்களை தங்கத் தாம்பாளத்தில் சுமந்தபடி தேவர்கள் வந்து கொண்டிருந்தனர்.



சொக்கலிங்கப் பெருமானுக்கு அவர்கள் பூஜை செய்தனர். தனஞ்செயன், அவர்களுடன் இணைந்து தானும் அங்கு சிவவழிபாட்டினை மேற்கொண்டான். குளத்துக்குள் இறங்கி, தேவர்களுக்கு பூப்பறித்துக் கொடுத்து உதவினான். தேவர்கள் அவனை வாழ்த்தி பூஜை முடிந்ததும் அவ்விடம் விட்டு அகன்றனர்.

அந்த ஆலயத்திலேயே இரவு தங்கியிருந்த தனஞ்செயன், பொழுது விடிந்ததும், தான்கண்ட அதிசயக் காட்சியை மன்னனிடம் தெரிவிக்க அரண்மனைக்குச் சென்றான்.

தனஞ்செயன், குலசேகரப் பாண்டியனைச் சந்தித்து, அவனிடம் முதல் நாள் இரவில் நடந்தவற்றை விரிவாக எடுத்துரைத்தான். மன்னனும் அந்தப் பூஜையைக் காண வேண்டும் என தனஞ்செயன் வேண்டுகோள் விடுத்தான். மன்னனும் அதனைக் கேட்டு மனம் மகிழ்ந்தான். அடுத்த சோமவாரம் எப்போது வருமென காத்து கொண்டிருந்தான்.

அன்றைய இரவில் மன்னனின் கனவில் சொக்கநாதப் பெருமான் சித்தர் வடிவில் தோன்றினார். கடம்பவனத்தை அழித்து அழகிய நகரத்தினை உருவாக்குமாறு ஆணையிட்டார். கோயிலை அடையாளமாகக் கொண்டு, அது நடுவில் இருக்க, நகரம் சிறப்புற அமைய வேண்டும் என்றும், வீதிகள், வீடுகள், மாளிகைகள் அமைய வேண்டும் என்றும் கட்டளையிட்டார். அதனைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் குலசேகர பாண்டியன், அமைச்சர் பெருமக்களோடும், பெரியவர்களோடும் கலந்து ஆலோசித்தான். பின் பெரும் திரளான படைகளுடன் கடம்ப வனத்திற்குப் புறப்பட்டான்.

கடம்ப வனத்தின் நடுவில் எட்டு யானைகள் விமானத்தை தாங்க, அதன் கீழ் சொக்கநாதர் அருள்பாலித்துக் கொண்டிருந்ததை மன்னன் கண்டான். பொற்றாமரைக் குளத்தில் நீராடி, சொக்கநாதரை வழிபட்டான். சொக்கநாதர் கூறியபடி காட்டை அழித்து, ஆலயத்தை மையமாக வைத்து நகரை உருவாக்கினான். ஆலயக் குடமுழுக்கையும் சிறப்புற நடத்தினான்.

சிவபெருமான், ஜடாமுடியில் அணிந்திருந்த சந்திரனின் கலைகளில் ஒன்றை நகரில் சிந்தி, நகரை ஒளி வீசும்படிச் செய்தார். சிவபிரானின் திருமுடியிலிருந்து சிந்திய அமுதம் அந்நகரினை தூய்மை செய்து இனிமையாக்கியது. இவ்வாறு இறைவனின் கருணையால் அமுதம் சிந்தி மதுரமாகிய (இனிமை) தன்மையைப் பெற்றதால் குலசேகர பாண்டியன் உருவாக்கிய திருநகரம் மதுரை எனப் பெயர் பெற்றது.

பாண்டியன் மதுரை மாநகரின் காவலுக்கு நகரின் கிழக்கு திசையில் ஐயனாரையம், தென்திசையில் சப்த கன்னியர்களையும், மேற்கில் திருமாலையும், வடக்கில் பத்ரகாளியையும் நிறுவினான். பின் வேத நெறிப்படி நாட்டைச் சிறப்புற ஆட்சி செய்தான்.

குலசேகரப் பாண்டியனுக்கு மலயத்துவசன் என்னும் மகன் பிறந்தான். மலயத்துவசனுக்கு உரிய வயது வந்ததும் அவனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, குலசேகர பாண்டியன், சிவவழிபாட்டில் நாட்டம் செலுத்தி இறுதியில் சிவபெருமானின் திருவடியை அடைந்தான்.

(தொடரும்)


# பிரம்மதேசம் அருள்மிகு.ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில்

நெல்லை மாவட்டத்தில் பொதிகை மலைச்சாரலை அடுத்துள்ள அம்பாசமுத்திரத்தின் வடக்கே 3 மைல் தொலைவில் அமைந்துள்ளது' பிரம்மதேசம்' எனும் இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். இவ்வூரில் கோயில் கொண்டுள்ளார் ஸ்ரீ கைலாசநாதர். சுயம்புலிங்கமானஇவரை பிரம்மாவின் பேரன் ரோமச முனிவர் பூஜை செய்ததால்' பிரம்மதேசம் ' என்று பெயர் வழங்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.


ஊரின் நடுநாயகமாக அமைந்துள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோயிலுக்கு செல்லும் முன் கோயிலின் முன்புறம் அமைந்துள்ள தெப்பக்குளத்தை காண்கிறோம். தெப்பக்குளத்தின் தெள்ளிய நீரில் கோயில் கோபுரத்தின் பிம்பம் விழுவதைக் காணலாம்.கோயிலுக்குள் செல்லும் முன் தெற்கே ஆனைமுகத்தானையும் வடக்கே ஆறுமுகத்தானையும் காணலாம் கோவிலின் முன் ராஜ கோபுரம் ஏழு அடுக்குகளை கொண்டு கம்பீரமாக நிற்கிறது.ஏழு அடுக்குகளுக்கும் செல்வதற்கு படிக்கட்டுகள் அமைந்துள்ளது மேலும் ஒரு சிறப்பு.

இக்கோவிலின் குடவரை வாயிற்கதவு மிகுந்த பாதுகாப்பாக செய்யப்பட்டுள்ளது. அந்நியப் படையெடுப்பு காலங்களில் அவ்வூர் மக்கள் இக்கோவில் அடைக்கலம் புகுந்து கதவை பூட்டிக் கொள்ளும் பொழுது,பகைவர் யானைகளாலும் தகர்க்க முடியாத அளவு கதவில் மிக நெருக்கமான குமிழ் ஆணிகள் அமைக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

கோவிலின் முன்பு தென்பக்கங்களில் " நெல்குத்துப்பிறை " என்ற பெரிய மிகப் பெரிய கல் மண்டபம் உள்ளது கோவிலின் தினசரி நிவேதனங்களுக்கும், விழா காலங்களுக்கும், பஞ்சகாலத்திற்கும், போர்க்காலங்களிலும், அவ்வூர்வாசிகளுக்கு உணவளிக்க தேவைப்படும் அரிசி இந்த நெல் குத்து பிறையிலேயே கைக்குத்தலாக குத்தப்பட்டதாம்







கோவிலின் சுற்று சுவர்கள் மிக உயரமாகவும், அகலமாகவும் அமைந்துள்ளது .அக்காலத்தில் இவ்வாலயம் மக்களின் போர்க்கால காப்பகமாகவும் அமைக்கப்பட்டிருக்கலாம் என்றே கருதுகின்றனர்.

ஆலயத்தின் உள்ளே நுழைந்ததும், கூரை போன்ற அமைப்பை காணலாம்.. அது காண்போர் கண்ணுக்கு மரவேலைப்பாடு போல் தோன்றினாலும் சிற்பக் கலைஞர்களின் கற்பனைத் திறனால் உருவாக்கப்பட்ட கற்கூரை.

கோவிலின் தென் பக்கத்தில் முதலில் நம் கண்ணெதிரே தோன்றுவது சமயகுரவர்கள்... தேவாரம் பாடிய மூவர் திருச்சந்நிதி... அதைத்தாண்டி மேற்கே சென்றால் சித்திவிநாயகர் கம்பீரமாக காட்சியளிக்கிறார்... அதற்கு வடபுறம் இம் மாவட்டத்திலேயே பெரிய... ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நந்திகேஸ்வரர் வீற்றிருக்கிறார். அழகிய சிற்ப வேலைப்பாடுகள்... நந்திகேஸ்வரரின் மணிகள், சலங்கைகள், பட்டைகள், ஆபரணங்கள், மிகுந்த கவனத்துடன் செதுக்கப் பட்டுள்ளன.

நந்திகேஸ்வரரின் முன்னிருக்கும் கொடி மரத்திற்கு வடபுறம், மண்டபத்தின் மேல் கல்லிலிருந்து மூன்று கண்ணிகளும் (சங்கிலியுடன்) மணியும் , நாக்கும், ஒரே கல்லில் செதுக்கப்பட்டு தொங்குவதை காணலாம் . சிற்பக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது நந்திகேஸ்வரர் வடபுறம் வள்ளி, தெய்வானையுடன் கூடிய முருகர் சன்னதி அமைந்துள்ளது. நுழை வாயிலில் இருபுறமும் கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்ட துவாரபாலகர்களைக் காண்கிறோம் .அதற்கப்பால் பிரம்மி, மாகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி போன்ற சப்த மாதர்களும் அவர்களுக்குப் எதிரில் தட்சிணாமூர்த்தியும், மகிஷாசுரமர்த்தினி, பால கணபதியும் எழுந்தருளியுள்ளனர்.

கருவறையில் மூலவர் ஸ்ரீ கைலாசநாதர் மிகப் பெரிய லிங்க உருவில் அருள்பாலித்து வருகிறார். கருவறையின் மேலே அமைக்கப்பட்டுள்ள விமானம் மிகப் பெரியதாகும். கோபுர உயரத்தில் பாதி உள்ளதாகவும் அமைந்துள்ளது.

சுவாமி கோயிலில் இருந்து வெளியே வந்து அம்மன் கோயிலை நோக்கி செல்லும் வழியில் இடப்புறம் உள்ள ஒரு யாழியின் வாயில் ஒரு கல்லுருண்டை கீழே விழாத நிலையில் வாய்க்குள் உருளக் கூடிய அளவு கவனமாக செதுக்கப்பட்டிருக்கிறது. சுவாமி சன்னதியும், அம்மன் சன்னதியும் இணைக்கும் பாதையாக சொற்பொழிவுகளை நிகழ்த்த தக்க வகையில் சோமவார மண்டபம் அமைந்துள்ளது. அதன் இரு புறங்களிலும் உள்ள தூண்களில் பீமன், புருஷா மிருகம், வாலி - சுக்ரீவன், தர்மபுத்திரன், துரியோதனன், மன்மதன்- ரதி போன்ற பல புராணக் கதைகளை நினைவூட்டும் உருவங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தின் தாண்டி அம்மன் சன்னதிக்குள் நுழைந்தால்,கருவறையில் பிரஹந்நாயகி அம்பாள் அருள்பாலித்து வருகிறார். அம்பாள் சன்னதிக்கு எதிரே தனியாக கொடி மரமும், நந்தீஸ்வரரும் இருப்பதை பார்க்கலாம்.

அம்மன் சன்னதிக்கு எதிராக சிற்பக்கலைக்கும், கட்டடக் கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் திருவாதிரை மண்டபம் அல்லது ஆருத்ராமண்டபம் எழில் கூடமாக திகழ்கிறது. இம்மண்டபத்தின் தூண்களாய் 20 அழகிய யாழிகள்.. படிக்கட்டில் அமைக்கப்பட்டிருக்கும் யானைகள் .. நாட்டியக் கலை சிற்பங்கள்.. தெய்வத்திரு கோலங்கள் ஆகியவை மிகச்சிறந்த கலை பொக்கிஷமாக காணப்படுகிறது. சோமவார மண்டபத்தின் தென்கோடியில் " பிச்சாடனர் சபை" மண்டபம் அமைந்துள்ளது. இங்கு நடுநாயகமாக சிவபெருமானும், பரிவார தேவதைகளும், சந்திரன், சூரியன் முதலிய நவகிரகங்களும்,அக்னி, வாயு ,எமன் போன்ற அஷ்டதிக் பாலகர்களும்,நாரதர், தும்புரு முதலிய ரிஷிகளும் ஏககாலத்தில் வாகனத்துடன் காட்சி அளிப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பாகும். சபையின் கீழ் புறம் காவல் தெய்வமாகிய பைரவர் காட்சியளிக்கிறார். இச்சன்னதி அருகே இக்கோவிலின் ஸ்தலவிருட்சமாகிய இலந்தை மரத்தை காணலாம் .

வெளிப் பிரகாரத்தில் விசாலாட்சி- விஸ்வநாதர் அண்ணாமலையார்- உண்ணாமுலையம்மை ஆகியோருக்கு தனி சன்னதியும். சாஸ்தா..சண்டேஸ்வரி ஆகியவர்களையும் தரிசிக்கலாம். ஐந்து சிவலிங்கங்களும், சந்திரன், சூரியன் ஆகியோர் இருப்பதால் நவக்கிரகங்கள் தனியாக இடம்பெறவில்லை .

மொத்தத்தில் பண்டைய சிற்பக் கலைக்கு சான்றாக விளங்கும் இக்கோவிலின் ஒவ்வொரு தூணும் ஏதாவது ஒரு அழகிய சிற்பத்தை தாங்கியோ, அல்லது கலை நுணுக்கத்தோடோ...விளங்குகிறது. சிற்பக்கலை ஆர்வலர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய சிற்ப கலைக்கூடம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நவகைலாயங்களில் முதன்மையான பிரம்ம தேசம் சென்று தாயார் பிரஹந்நாயகி உடனுறை ஸ்ரீ கைலாசநாதரை தரிசிப்பதுடன், சிற்பங்களையும் பார்த்து ரசித்து வாருங்கள்.

(கூடுதல் தகவல் :இத்தலத்திற்கு தாங்கள் செல்லவில்லை என்றாலும் இக்கோபுரத்தை அடிக்கடி தொலைக்காட்சியில் தரிசித்து இருப்பீர்கள். திருமதி. ராதிகா சரத்குமார் அவர்களின் அண்ணாமலை தொடரில் டைட்டில் பாடலில் வரும் கோயில் கோபுரம் பிரம்மதேச திருக்கோயிலின் கோபுரமே ..)



-தி.வள்ளி
திருநெல்வேலி.

# தினம் ஒரு தலைவர்கள் கேளப்பன் நாயர் வரலாறு

கோயப்பள்ளி கேளப்பன் நாயர் (24 ஆகஸ்ட் 1889 - 7 அக்டோபர் 1971) ஒரு இந்திய அரசியல்வாதி, சுதந்திர ஆர்வலர், கல்வியாளர் மற்றும் பத்திரிகையாளர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தின் போது, அவர் கேரளாவில் இந்திய தேசிய காங்கிரஸின் முன்னணி நபராக இருந்தார் , மேலும் கேரள காந்தி என்று பிரபலமாக அறியப்பட்டார். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் காந்திய அமைப்புகளில் பல்வேறு பதவிகளை வகித்தார். அவர் நாயர் சேவை சங்கத்தின் இணை நிறுவனர் மற்றும் முதல் தலைவராகவும் , கேரள க்ஷேத்திர சம்ரக்ஷண சமிதியின் (கோயில் பாதுகாப்பு இயக்கம்) நிறுவனராகவும் இருந்தார்.

ஆரம்ப கால வாழ்க்கை

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள கோயிலாண்டியில் உள்ள முச்சுகுன்னு என்ற சிறிய கிராமத்தில் , நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணியாற்றிய தென்போயில் கனாரன் நாயர் மற்றும் கோயப்பள்ளி குஞ்சம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் கேளப்பன். கேளப்பனுக்கு தாய்வழி வாரிசுரிமை மூலம் கோயப்பள்ளி என்ற குடும்பப் பெயர் கிடைத்தது .

அவர் கோழிக்கோடு மற்றும் சென்னையில் கல்வி பயின்றார், மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார், பின்னர் சங்கனாசேரியில் உள்ள செயிண்ட் பெர்ச்மன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார் . கேளப்பன் நாயர் சேவை சங்கத்தின் நிறுவனத் தலைவராக இருந்தார் , பின்னர் அந்த சங்கத்தால் நடத்தப்படும் ஒரு பள்ளியின் முதல்வரானார். சீர்திருத்தவாதியாக ஒருபுறம் சமூக சீர்திருத்தங்களுக்காகவும் மறுபுறம் ஆங்கிலேயர்களுக்காகவும் அவர் போராடினார். தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிராக அவர் இடைவிடாமல் போராடினார். கே. குமாருடன் சேர்ந்து , கேரளாவில் சாதி நிலையைக் குறிக்கும் தனது பெயருக்குப் பின்னொட்டை நீக்கிய முதல் நபரானார். அவர் கேரள காந்தி என்று அழைக்கப்பட்டார்.






அனைத்துப் பிரிவு மக்களின் சமத்துவத்திற்காகவும் கேளப்பன் அயராது பாடுபட்டார். வைக்கம் சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார், பின்னர் 1932 இல் குருவாயூர் சத்தியாக்கிரகத்தை வழிநடத்தினார். கோயில் நுழைவு பிரகடனத்தை நினைவுகூரும் வகையில் காந்தி திருவிதாங்கூருக்கு விஜயம் செய்தபோது , காந்திஜியின் தலைமையிலும், சமூக சமத்துவத்திற்கான நடவடிக்கையின் உணர்வை மொழிபெயர்க்க காந்திய அணுகுமுறைக்கு இணங்க எடுக்கப்பட வேண்டிய முன்னோக்கிய நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டும் மிக முக்கியமான தீர்மானத்தை அவர் ஆதரித்தார். வைக்கம் சத்தியாக்கிரகத்தின் தலைவர்களில் ஒருவரான திருவிதாங்கூரை சேர்ந்த கே. குமார் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார் , பின்னர் மக்களாலும் வரலாற்றாசிரியர்களாலும் மறக்கப்பட்டார்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய பங்கு சுதந்திரத்திற்குப் பிறகு அவர் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினார். அவர் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியில் சேர்ந்தார் மற்றும் 1952 இல் பொன்னானி மக்களவைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது பதவிக் காலத்தின் முடிவில், அவர் தீவிர அரசியலை விட்டுவிட்டு சர்வோதய ஊழியரானார் மற்றும் கேரளாவில் பூதான் இயக்கத்துடன் தீவிரமாக தொடர்புடையார். கேளப்பன் மாத்ருபூமியைத் தொடங்க உதவினார் , மேலும் பல ஆண்டுகள் அதன் ஆசிரியராகவும் இருந்தார். கேரளாவை ஒரு புதிய மொழியியல் மாநிலமாக ஒன்றிணைக்க அவர் பாடுபட்டார். கேரள சர்வோதய சங்கம், கேரள காந்தி ஸ்மாரக் நிதி, கேரள சர்வோதய மண்டல் மற்றும் கோழிக்கோடு காந்தி அமைதி அறக்கட்டளை உள்ளிட்ட பல காந்திய அமைப்புகளின் தலைவராகவும் இருந்தார். கேரளாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மலப்புரம் மாவட்டம் உருவாவதை கேளப்பன் எதிர்த்தார், அது ஒரு 'மினி பாகிஸ்தானை' உருவாக்கும் என்று வாதிட்டார். மலப்புரத்தில் உள்ள அங்கடிப்புரத்தில் உள்ள ஒரு மசூதிக்கு அருகில் ஒரு கோயில் மறுமலர்ச்சியை நோக்கமாகக் கொண்ட தாலி கோயில் இயக்கத்தில் அவர் ஈடுபட்டார், இது சில வகுப்புவாத பதட்டங்களை ஏற்படுத்தியது.

தாலி கோயில் இயக்கத்தில் கேளப்பன் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் அது நிறைவடைவதற்கு முன்பே, அக்டோபர் 7, 1971 அன்று கேளப்பன் இறந்தார். அவரது ஆதரவுடன் கட்டப்பட்ட கோயில் மசூதியுடன் இணைந்து நிற்கிறது, இது வெவ்வேறு சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைக் குறிக்கிறது.

விருதுகள் மற்றும் அங்கீகாரம்

அவரது நினைவாக இந்தியா போஸ்ட் 1990 இல் ஒரு நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டது .

# நாக் அஸ்வின் இயக்கத்தில் சாய் பல்லவி?

நாக் அஸ்வின் இயக்கத்தில் சாய் பல்லவி நடிக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

'மஹாநடி' மற்றும் 'கல்கி 2898 ஏடி' ஆகிய படங்களின் மூலம் முன்னணி இயக்குநராக வலம் வருபவர் நாக் அஸ்வின். 'கல்கி 2898 ஏடி' படத்தின் 2-ம் பாகத்தின் பணிகள் எப்போது தொடங்கும் என்பது தெரியாமல் இருக்கிறது. இதனால் அடுத்ததாக புதிய படமொன்றை இயக்கவுள்ளார் நாக் அஸ்வின்.

முழுக்க நாயகியை மையமாக கொண்டு உருவாகும் இப்படத்தில் நடிக்க சாய் பல்லவியிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அவரும் சம்மதம் தெரிவித்திருப்பதாகவும், விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என கூறப்படுகிறது. இதனையும் வைஜெயந்தி மூவிஸ் நிறுவனமே தயாரிக்கவுள்ளது.

சாய் பல்லவி நடிக்கவுள்ள படத்தினை முடித்துவிட்டு, 'கல்கி 2898 ஏடி' 2-ம் பாகத்தின் பணிகளை நாக் அஸ்வின் தொடங்கவுள்ளார். இதில் தீபிகா படுகோன் விலகிவிட்டதால் அவருக்கு பதிலாக யார் நடிக்கவுள்ளார் என்பதும் விரைவில் தெரியவரும்.





மயில் கழுத்து நந்திதா ஸ்வேதா

# ராஷ்மிகா நடிக்கும் "The Girlfriend" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு

தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவின் முன்னணி கதாநாயகிகளில் ராஷ்மிகா மந்தனா முன்னணி இடத்தில் இருப்பவர். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான குபேரா திரைப்படம் மக்களிடையே பெறும் வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் ராஷ்மிகா மந்தனா அடுத்ததாக தி கேர்ள்ஃபிரெண்ட் திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை ராகுல் ரவிந்திரன் இயக்கியுள்ளார். படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. படப்பிடிப்பு பணிகள் முழு வேகத்துடன் நடைப்பெற்று வருகிறது.

இப்படத்தில் தீக்ஷித் ஷெட்டி கதாநாயகனாக நடித்துள்ளார். பிரபல இசையமைப்பாளரான ஹேஷம் அப்துல் வஹாப் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.


அல்லு அரவிந்த் வழங்கும் இப்படத்தை தீரஜ் மற்றும் வித்யா இணைந்து தயாரித்துள்ளனர்.

இந்நிலையில், The Girlfriend திரைப்படம் வரும் நவம்பர் 7ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.



# மரியா- திரைவிமர்சனம்



கன்னியாஸ்திரியான நாயகி சாய்ஶ்ரீ பிரபாகரன், விடுமுறைக்காக உறவினர் வீட்டுக்கு செல்கிறார். அங்கு சில நாட்கள் தங்கும் அவர் கன்னியாஸ்திரி வாழ்க்கையில் இருந்து வெளியேறி மற்ற பெண்களைப் போல் சகஜமாக வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால், அவரது குடும்பம் இதை ஏற்றுக்கொள்ள மறுப்பதோடு, அவரை வீட்டைவிட்டு துரத்தி விடுகிறது. இதனால் கிறிஸ்தவ மதத்தை வெறுக்கும் அவர், அதற்கு எதிரான சாத்தானை வழிபடும் குழுவுடன் பழக்கம் ஏற்படுகிறது.

இறுதியில் சாய்ஶ்ரீ பிரபாகரன் சாத்தானை வழிபட்டாரா? மீண்டும் கன்னியாஸ்திரியாக மாறினாரா? அவரது வாழ்க்கை என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

படத்தில் கதையின் நாயகியாக நடித்திருக்கும் சாய்ஶ்ரீ பிரபாகரன், சர்ச்சையான கதாபாத்திரத்தில் தைரியமாக நடித்திருக்கிறார். ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் காட்சிகளில் உணர்வுப்பூர்வமாக நடித்து இருக்கிறார். ஆர்ப்பாட்டம் இல்லாத இவரது நடிப்பு கவனிக்க வைத்து இருக்கிறது.

சாத்தான் வழிபாட்டு குழுவின் தலைவராக நடித்திருக்கும் பாவல் நவகீதன், படம் முழுவதும் பேசிக்கொண்டே இருக்கிறார். ஒரு கட்டத்தில் போதும் என்ற அளவிற்கு பேசி இருப்பது பலவினம். மற்ற கதாபாத்திரத்தில் நடித்து இருக்கும் சிது குமரேசன், விக்னேஷ் ரவி, பாலாஜி வேலன், சுதா புஷ்பா, அபிநயா ஆகியோர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து இருக்கிறார்கள்.

**இயக்கம்**

கன்னியாஸ்திரியாக இருக்கும் இளம் பெண்ணை மையமாக வைத்து படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குனர் ஹரி கே.சுதன். சர்ச்சையான விசயத்தை தைரியமாக சொல்லி இருக்கிறார். முதல் பாதி திரைக்கதை தெளிவாகவும், இரண்டாம் பாதி தெளிவில்லாமல் திரைக்கதையை நகர்த்தி இருக்கிறார். அனைத்து தர மக்களுக்கும் பிடிப்பது சந்தேகம்.

**இசை**

இசையமைப்பாளர்கள் அரவிந்த் கோபால கிருஷ்ணன் மற்றும் பரத் சுதர்ஷன் ஆகியோரது இசை காட்சிகளுக்கு ஏற்ப பயணித்திருக்கிறது. பின்னணி இசை படத்திற்கு பலம்.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவாளர் மணிஷங்கர்.ஜி, அதிக வெளிச்சம் இல்லாமல் படமாக்கி இருக்கிறார்.


ராஷி கன்னா

இமைக்கா நொடிகள், அரண்மனை, அயோகிகா, அடங்க மறு ஆகிய படங்களில் நடித்து தமிழ் சினிமா ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தவர் ராஷி கன்னா. இவருக்கு கோலிவுட் முதல் பாலிவுட் வரை நல்ல பேன் பேஸ் உள்ளது. படங்களை தாண்டி வெப் தொடர்களிலும் கலக்கிக்கொண்டு இருக்கிறார்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ராஷி கன்னா, சமீபத்தில் எடுத்துக்கொண்ட அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பகிர்ந்துள்ளார். தற்போது, இந்த போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.



# ஆரோமலே படத்தின் 'எப்படி வந்தாயோ' பாடல் வெளியானது!




கிஷன் தாஸ், ஹர்ஷத் கான் ஆகிய இருவரும் இணைந்து 'ஆரோமலே' படத்தில் நடிக்கின்றனர். முதல் நீ முடிவும் நீ' படம் மூலம் பிரபலமானவர் நடிகர் கிஷன் தாஸ். இப்படத்தை தொடர்ந்து சிங்க், தருணம் ஆகிய படங்களில் கிஷன் தாஸ் நடித்தார்.

இதேபோல், பிரபல யூடியூபரான ஹர்ஷத் கான் பெரிய திரையில் அறிமுகமானார். கடந்த பிப்ரவரி மாதத்தில் வெளியான டிராகன் திரைப்படத்தில் முக்கிய கதாபாத்தில் நடித்திருந்தார். இவரது நடிப்புக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

இது தவிர விஜே சித்து இயக்கி நடிக்க உள்ள 'டயங்கரம்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள புதிய படத்திலும் நடிக்க உள்ளார் ஹர்ஷத் கான். இந்த படத்தை மினி ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்த படத்தை சாரங் தியாகு இயக்க, சித்து குமார் இசையமைக்கிறார். கவுதம் ராஜேந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார்.

இந்நிலையில் இப்படத்தின் 'எப்படி வந்தாயோ' பாடல் வெளியானது. சித்து குமார் இசையில் சின்மயி, ஆனந்த் அரவிந்த் அக்ஷன் ஆகியோர் இப்பாடலை பாடியுள்ளனர்.

# கும்கி-2: போஸ்டர் வெளியீடு




பிரபுசாலமன் இயக்கத்தில் விக்ரம் பிரபு, லட்சுமி மேனன், தம்பி ராமையா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'கும்கி'. விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

மேலும், இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்த சுகுமாருக்கும் நல்ல பெயர் கிடைத்தது. இந்தப் படத்தைத் தொடர்ந்து பல்வேறு பெரிய படங்களுக்கு ஒளிப்பதிவாளராக பணிபுரிந்து வந்தார்.

இந்த நிலையில், பிரபு சாலமன்- சுகுமார் கூட்டணி மீண்டும் இணைந்து 'கும்கி 2' படத்தை உருவாக்கி வருகின்றனர். இந்தப் படம் முழுக்க காடுகளுக்குள்ளே படமாக்கப்பட்டுள்ளது.

'கும்கி 2' படத்திற்கு நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ளார். படத்தில் மதி மற்றும் அர்ஜுன் தாஸ் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்நிலையில், இப்படத்தில் நடிக்கும் ஹீரோ மதியின் அறிமுக போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளனர்.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: எச்.ராஜா நடித்துள்ள 'கந்தன் மலை' படத்தின் பாடல் வெளியீடு



பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா நடித்துள்ள படம் கந்தன் மலை.

அண்மையில் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள சிக்கந்தர் தர்காவை அகற்ற வேண்டும் என்று இந்துத்துவ அமைப்புகள் போராட்டம் நடத்தின. அப்போது திருப்பரங்குன்றம் என்பது கந்தர் மலை, அது சிக்கந்தர் மலை அல்ல என்று எச். ராஜா கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

திருப்பரங்குன்றம் விவகாரத்தை மையமாக வைத்து தான் கந்தன் மலை திரைப்படத்தை உருவாக்கியுள்ளனர்.

இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில் எச் ராஜா முறுக்கு மீசையுடன் கழுத்தில் ருத்ராட்ச மாலையுடன் இருந்த புகைப்படம் இணையத்தில் வைரலானது. மேலும் படத்தின் போஸ்டரில் அவருக்கு 'தர்மபோராளி' என்ற பட்டப்பெயரும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கந்தன் மலை திரைப்படத்தின் முதல் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை எச்.ராஜா தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

## FOR SALE
**2BHK FLAT**
K.K. PUDUR.P.O.
SAIBABA COLONY
96009 22463

---

## குடோன் LEASE/ வாடகைக்கு
Industrial / Prime area-வில் Industrial குடோன் with (EB-Power) சகல வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது.
(For all kind of Manufacturing, warehousing and Logistics use)
Ph: 85269 25168

---

## குடோன் வாடகைக்கு
**900 sqft**
- GODOWN
- OFFICE ROOM
- WORKSHOP

with 10HP Line
Near Singanallur ESI
98420 44110

---

## WANTED
Kasturi ITI in Kuniamuthur requires
**TEACHING STAFF**
Qualification: B.E. (Mech) / Dip. in Automobile Engg / Mechanical Engg
Apply with resume to:
cmdcorpoff@yahoo.in
94422 77777

---

## தி புரொபஷனல் கூரியர்ஸ்
கோவை
**டிரைவர்கள் தேவை**
லைட் / EV
காலை 8.00 - 8.00
3 or 4 சக்கர வாகனம்
ரூ.20,000/-
காலை: 9.30 - 6.30
3 or 4 சக்கர வாகனத்தில் டெலிவரி மட்டும் செய்ய
ரூ.17,500/-
தங்கும் வசதி இலவசம்
ஒரிஜினல் லைசென்ஸ், ஆதார் நகல் போட்டோவுடன் நேரில் அணுகவும்
தலைமை அலுவலகம்
56/2, சுங்கம் பை-பாஸ் ரோடு, சுங்கம், கோவை-45
89393 77709
98433 21677

---

## இடம் விற்பனைக்கு
ஈச்சனாரி
பொள்ளாச்சி சாலை
மிக அருகில் 50செண்ட் வடக்கு 30அடி தார்ரோட்டின் மேல் அமைந்துள்ளது.
L&T Bye Pass
கற்பகம் யுனிவர்சிட்டி மற்றும் L&T Tech Park அருகில்
மிக குறைந்த விலையில் விற்பனைக்குள்ளது.
98422 14096
SAA

---

## குடோன் வாடகைக்கு
காளப்பட்டி ரோடு
Tax Park அருகில்
30 அடி ரோட்டில்
கிழக்கு பார்த்த
1800 Sq Feet-ல்
குடோன் வாடகைக்கு
98942 21416

---

## ஏர்போர்ட் அருகில் வீடு விற்பனைக்கு
கோவை Airport பின்புறம்
இருகூரில் 4 சென்ட் மேற்கு சைட்
வடக்கு வாசல் 3200 ச.அடி
3 போர்சன் புதிய வீடு 1.50 Cr
வாடகை வருமானத்துக்கு உகந்தது
மொத்த வாடகை வருமானம் 60,000
gated community
Ph: 88705 21041

---

## Aachi
The Mother of Good Taste
நிறுவனத்திற்கு
**டிரைவர்கள் தேவை**
நல்ல சம்பளம்
உணவு, தங்குமிடம்
சீருடை, காப்பீடு இலவசம்
எண்.1, காமராஜ் தெரு,
பொன்னியம்மன் நகர்,
கீழ் அயனம்பாக்கம், சென்னை - 95
99410 12110

---

## FOR SALE
INDUSTRIAL LAND
3.42 ACRES
@SRIPERUMBUDUR
- IDEAL FOR FACTORY SETUP
- CLEAR TITLE

JBM HOMES
INDUSTRIAL | RESIDENTIAL | PLOTS | VILLAS
6369521526/ 8883042819

---

## DTCP Sites For Sale
@ KALAPATTY
North Facing Sites
5.5Cent
Direct Sale !!!
90471 87197
SAA

---

## பாப்பம்பட்டியில் இடம் விற்பனைக்கு
பாப்பம்பட்டி ஸ்ரீ கிருஷ்ணா கார்டனில் வீட்டுமனைகள் விற்பனைக்கு
வடக்கு பார்த்த 3.5செண்ட் DTCP வீட்டுமனைகள் விற்பனைக்கு
1செண்ட் 7.80 லட்சம்
Ph: 88705 21041

---

## WANTED
**TELECALLERS**
Female 4 nos
Sidco
Attractive Salary + incentive
Ph: 99527 35557
SAA

---

## செக்யூரிட்டிகள் தேவை
செக்யூரிட்டிகள் அதிக அளவில் உடனடி தேவை
சம்பளம்: ரூ.14,000 to 18,000
வாரம் அட்வான்ஸ் உண்டு
கணபதி, சரவணம்பட்டி, சீரநாயக்கன் பாளையம், காளப்பட்டி
செக்யூரிட்டி – 25 நபர்கள்
ASO – 5 நபர்கள்
உணவு, தங்குமிடம் சலுகை விலையில் வழங்கப்படும்
63802 81047
63699 77639

---

## ஹோட்டல்/ லாட்ஜ் விற்பனைக்கு
திருச்சி மாவட்டம்
சமயபுரம் மாரி அம்மன் கோவில் தேரடி வீதியில்
8500 சதுர அடி
26 ரூம்ஸ் கொண்ட
10 கார் பார்க்கிங் வசதி உள்ளது.
பத்திர பதிவு செய்யும்போது உடனடி பணம்.
Clear Title with Bank Loan.
No Brokers.
Call: 99945 62553, 99945 62554, 90032 30032

---

## ராணிப்பேட்டை-ல்
100 ஏக்கர் மாந்தோட்டம்
நீச்சல் குளத்துடன்
கெஸ்ட் ஹவுஸ்
விற்பனைக்கு
புரோக்கர்கள் தவிர்க்கவும்
73972 73555 / 73973 69555
73396 49555

---

## பூமி லீசுக்கு தேவை
அன்னூர் (ஓதிமலை, ரங்கம்பாளையம் புளியம்பட்டி, இரும்பொறை)
சுற்றுவட்டாரத்தில்
CT: 81229 93179

---

## OFFICE SPACE FOR RENT
TRICHY ROAD
(Near Nanjappa Nagar)
Ground Floor: 1750 Sqft.
Prime Location with all amenities
98422 22725

---

## REQD ENGINEERS
B.E. / D.M.E, - Mech., Elect., ECE
(Freshers/1-3yrs Exp.) for Engineering Company
Tiruvanmiyur Chennai.
CTC: 2.5 to 3 Lakhs p.a with Accommodation,
Basic Computer knowledge.
vtc600041@gmail.com
Mob: 9444296562

---

## மகாராணி தியேட்டர் அருகில்
2 கடை
வாடகைக்கு உள்ளது
94444 13395
044-48609138

---

## நிலம் விற்பனைக்கு
கோவை to பொள்ளாச்சி (ஆச்சிப்பட்டி)
மெயின் ரோட்டில் இருந்து
700 மீட்டர் தொலைவில்
மேற்கு பார்த்த
3½ Cent DTCP நிலம்
அவசர விற்பனைக்கு
மொத்தம் விலை
12.5 லட்சம் மட்டுமே.
95788 16871

---

## தென்னந்தோப்பு விற்பனைக்கு
கிணத்துகடவு
செட்டிகாபாளையத்தில்
பஸ் ரோடு மேல்
1 ஏக்கர்
தென்னந்தோப்பு விற்பனைக்கு
போர் 3A1 அக்ரிசர்வீஸ் உண்டு.
முழுவதும் சொட்டுநீர் பாசனம்
நல்ல காய்ப்பு 80 மரங்கள்,
பஸ்ரோடு 221 அடி,
இரு வழிபாதை உள்ளது.
விலை 1.5Cr.
99949 27777
98411 58008

---

The Dairy & Spice People
Magic in your Cuisine
BAKERS
The Authentic Taste of India
bakersspicesindia@gmail.com www.bakersspices.in
## We are Hiring!
DTP / GRAPHIC DESIGNER
with working Knowledge in CorelDRAW, Photoshop etc.
CALL
+91 9363210849
+91 9585159864

---

## டிரைவர் தேவை
வீட்டு டிரைவர் ஆக முன் அனுபவம் கொண்ட 40 வயதிற்குக் குறையாத நபர்கள் அணுகவும்
திருச்சி ரோடு சுங்கம் அருகில் வேலை
வேலை நேரம் :
காலை 8 மணியிலிருந்து
மாலை 8 மணி வரை
நேரில் வர அழைக்கவும்:
99 44 44 75 67

---

## ஏத்தர் பைக் ஷோரூம் இடம் தேவை
தரை மட்டும் பில்ட் ஏரியா:
2500 சதுரடி அடி
ஷோரூம்: 1000 சதுர அடி
சர்வீஸ் சென்டர்:
1500 சதுர அடி
தேவையான வசதிகள்:
மெயின் ரோடு நேர் முன்,
குறைந்தபட்சம் 20அடி
முன்புறம் கார்/பைக் பார்கிங் வசதி அவசியம்.
விருப்ப இடங்கள்:
சோழிங்கநல்லூர், கூடுவாஞ்சேரி,
திருவொற்றியூர், வாசர்மேன் பேட்டை
Contact: 87126 00676






உன்னிலிருந்து
தொடங்குவதுமல்ல
என்னிலிருந்து
முடிவதுமல்ல தொடர்வது
உணர்வது உறைவது?

**காதல்!**

சிறகடித்து வாழும்
பட்டாம் பூச்சியின்
வாழ்க்கை நரகமென
பட்டாம் பூச்சியாய்
வாழ்ந்து பார்த்தால்
மட்டுமே தெரியும்?!

உத்தம மழை

கலங்கப்பட்டு போனது?
உன் மேல் பட்டு!
தீதாராய் போகவும் தயார்
மூதார் உங்கள்
துரோகங்களை
சிலுவையாய் சுமக்க
எப்போதைக்கும் மனமில்லை!
என் முதுகுக்கு பின்னே
ஒலிக்கின்ற உங்கள்
புன்னகையில் என் அவமானச்
சின்னங்களை
காணாமல் காண்கிறேன்!

உறக்கம் இல்லாத
இரவுகளை தந்து விட்டாய்
கடைசியாய் ஒரே ஒரு
கோரிக்கை கண்
விழிக்காதவாறு
மீள முடியாத ஒரு
உறக்கம்
அது மரணமாக கூட
இருக்கட்டும்!



**லி.நௌஷாத் கான்**

அவ்வளவு இருட்டாயில்லை
இந்த இரவு..
நீ பார்க்கும் போது.

உன் கண்களும் ஸோலார்
எனர்ஜி..
பகலில்
சேகரித்து
இரவில்
ஒளிர்கிறதே.



**ரிஷபன்**



## பளிங்கு போன்ற வதனம்.....

பளிங்கு போன்ற வதனம்
அதைப் பார்த்தாலே
மனதுக்குள் பரவசம் ..
அந்த வதனத்தில் அதரம்
விரிய சிரிப்பது ஒரு வனப்பு
விண்ணில் மின்னும்
தாரகை போல் வதனம்
மின்னுகிறதே...
வெண் முகில்கள் வட்ட
மிடும் வானத்தில்
தான் நட்சத்ரம் தெரியும்
என்று இல்லாமல் உன்
வதனத்திலும் நட்சத்திர
புன்னகை தெரிகிறதே....
அந்தி சாயும் ஒளியில்
மினுமினுக்கும் தோற்றம்,
சிவந்த வானில் பிரதி
பலிக்கும் —
உன் அழகு வதனம் .
பார்வை ஒன்று போதும்
மனம் மகிழ்ச்சியில்
திளைக்கிறதே.....,
பாசமெனும் காதலில்
விழுந்து விட்டேன்.
அழகின் சிகரம் நீ —
வானில் உலாவரும்
வெண்மதி நீ
பளிங்கு முகம்
போல—
என்றும்
மனதில் குடி
கொண்டதே....



**உஷா முத்துராமன்**



## நினைவுகள் மறைவதில்லை

உந்தன் நினைவு
உள்ளம் முழுவதும்
உந்தன் நினைவே
உள்ளம் முழுவதும் ..

ஒன்றும் புரியாது
ஒன்றும் தெரியாது
ஏனோ இங்கே வந்திடும்,
தங்கிடும் உந்தன் நினைவு
உந்தன்நினைவு!

எத்தனை நினைவுகள்
எத்தனை கனவுகள்
எத்தனை நிகழ்வுகள்...
ஆயிரம் அலகுகள்
அத்தனை நினைவும்...

நினைவே கனவாய்!
கனவே நினைவாய்!

நினைவுகள் ஓர்சக்தி
நினைவுகள் ஓர்பக்தி
நெஞ்சுக் குழிக்குள்
சிக்கிய வார்த்தைகள்
வந்து வெளிவிழ
வந்ததோர் சக்தி!

அங்குள்ள ஒளிக்கற்றை
இங்கிருக்கும் இங்குள்ள
ஒளிக்கற்றை அங்கிருக்கும்
இரண்டும் ஒன்றென
நாமறிவோம்.

அங்கும் இங்கும் அதேநேரம்
அதேவேகம்.. எங்குமே
என்றும் என்னில் தங்கிடும்
நுண்ணுணர் வாயிது
உன்னுணர் வாயிது

நினைவுகள் எப்போதும்
நெஞ்சைவிட்டு
மறைவதில்லை தினவுடன்
ஓடிடும் தினம்தினம்
வெளிவரும்

உன் நினைவா?
உள்நினைவா?
எப்படிச்
சொல்வேன் ?
என்னென்று
சொல்வேன் ?



**வைரமணி**
சென்னை

ஒற்றை விரல் நீட்டித்
தொட்டுவிட முடிகிறது
உச்சி மலையை ஒற்றைக்
கண் மூடி ரசிக்க முடிகிறது
உதிக்கும் சூரியனை
வளைந்து நெளியும் நதியை
வரைபடத்தில் தொட
முடிகிறது ஆகாயத்தில்
பறக்கும்பறவையை
வீட்டுக்குள் கொணர்கிறது
தொலைக்காட்சி
உலகை உள்ளங்கையில்
காணலாம்விரும்பியதை
எல்லாம் வாங்கவும்
உண்ணவும் முடிகிறது
வீட்டில் இருந்தபடியே
வாழ்க்கையில்
முடியாதது
என்று எதுதான்
உள்ளது
முயற்சியைத்
தவிர



**ஜி ஏ பிரபா**
கோவை

## தேடல்

அரிவை: கற்றது மிகுதி
புரிந்தது அவ்வளவும்.
தெரிந்தது அநேகம்.
அறிந்ததும் அளவிடா
அளவில். ஆயினும்;
ஓடும் ஞமலி ஊரும் எறும்பு..
மலருக்கு மலர் தாவும் ஞமிறு
மண் குடையும் புழு
தேடல் தொடர
ஆவுடையாள்
அருளில்
ஆவுடையாரில்
மனம்
அடங்கியதே



**சசிகலா விஸ்வநாதன்**

பிறப்பு இறப்பு இதற்கிடையில்
சில காலமே கையிருப்பு:
இந்த இடைவேளையில்
பணம். பதவி மேல் விரும்பு
சக மனிதர்களிடம் வெறுப்பு
அன்பு பாசம் வெளியிட
மறுப்பு –இதனால் மறைந்து
போய்விட்டது புண் சிரிப்பு:
மதங்களி
டை யே
பெருந்தடுப்பு:
இதனால்
விளைந்தது
பெரும்
கொத்தளிப்பு
இவற்றிற்கெல்லாம் யார்
பொறுப்பு?



**எஸ் சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை



## ஆலமரம்...

பாட்டன் முப்பாட்டன் என்னப்பன்.. என்பிள்ளையினை
பரவசமாய் வரவேற்ற அந்தமரம்.!

கூட்டுக் குடும்பமாய்.. கூடிநின்று குழந்தைகளும்..
ஆட்டம்மாடி ஓய்வெடுக்க மடிகொடுத்த அந்தமரம்!

பாட்டுக் குயில்களும் பச்சைக் கிளிகளும் காக்கைகளும்
வந்தமர்ந்து.. கானம் இசைக்குமிடம் அந்தமரம்!

கூட்டாய் ஒன்றுகூட.. குறைநிறை கலந்துபேச
கிராமப் பஞ்சாயத்தின் அதிகாரத் தளம்அந்த ஆலமரம்.!

வயதான காலத்திலே வளர்த்து விட்டப்பிள்ளைகளை தாங்கும்
விழுதாக்க வேண்டும் என்றே அழைக்கிறது அந்தமரம்!

தாயாய் தந்தையாய் தனைத்தந்து ஊர்நடுவே புயல்மழை
கடந்துநின்று புன்னகைக்கிறது பார் அந்தமரம்!

சாயும் நிலையினிலே சற்றும் தளராது
தாங்குகின்ற விழுதுகளால் தலைநிமிர்ந்து
நிற்கிறது அந்தமரம்!

நீயும் நானும் இங்கு பிறந்தவர்கள் மறைந்தாலும்..
ஓயாது உயர்ந்துஅடர்ந்து நிழல்தந்து
பயன்மரமாய் நின்றதடா ஆலமரம்.!



**வே.கல்யாண்குமார்**



## கிடைத்த வரம் மனைவி

ஆயிரம் கைகள் அனைத்தாலும் ஆறுதல் சொன்னாலும்....
அள்ளி கொடுக்க ஒரு கை இருந்தால் போதும்....!

கோடி, கோடியாய், பணம், கொள்ளைக்கொள்ளாத சொத்து
இருந்தாலும்... நோய் இல்லாத உடலும், உயிரும் மட்டும்
இருந்தால் போதும்....!

ஆயிரம் நண்பர்கள், பல எதிரிகள்
இருந்தாலும்....
ஒரு துரோகி இல்லாமல் இருந்தால் போதும்....!

எத்தனை உறவுகள் இருந்தாலும்....நீ
வாழ நல்ல ஒரு மனைவி மட்டும் போதும்....!



**பொன்.கருணா,** நவி மும்பை



## மிளகோ மிளகு.!

கலம் ஏற்றி.. கடல்கடந்து
என்தமிழர் விற்று வந்தார்..
மிளகோ மிளகு!

நலம் காக்கும் நல் மருந்தாய்..
நற்றமிழர் போற்றி வந்தார்..
மிளகோ மிளகு!
பொங்கல் வடைக் ரசத்தில்..
மிளகாய் பொடி ருசியில்..
தங்கம் போல் சேர்த்தார்
மிளகோ மிளகு!

தாரம் வெறுத்தாலும் காரம்
வெறுக்காதே.. தாரம் போல்
நலம் பேண சேர்த்துக்கொள்
மிளகோ மிளகு!


ஊரார் பழித்தாலும் உணவில்
விடம் கலந்தாலும் நாலு
மிளகினை சேர்த்து உண்டால்
கவலை தீர்க்கும் மிளகோ
மிளகு!

உளநாள் மட்டும் உணவில்
மிளகிருந்தால்.. பல்லாண்டு
வாழவே பாதைகாட்டும்
மிளகோ மிளகு!

**வே.கல்யாண்குமார்.**

# நூல் விமர்சனம்

பற ... பற ...
நூல் ஆசிரியர் கவிஞர்
வசீகரன் !
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !
வெளியீடு மின்னல்
கலைக்கூடம் 117.எல்டாம்ஸ்
சாலை தேனாம்பேட்டை ,
சென்னை .18.
விலை ரூபாய் 30.
தொலைபேசி 9841436213.




இனிய நண்பர் நூல் ஆசிரியர் கவிஞர் வசீகரன் அவர்கள் பொதிகை மின்னல் மாத இதழ் ஆசிரியர் .பல படைப்பாளிகள் இதழ் தொடங்கியதும் படைப்பதில் தொய்வு வரும் .ஆனால் இவரோ படைப்பு , பத்திரிக்கை என்ற இரண்டு குதிரையிலும் லாவகமாக பயணிப்பவர் .ஆற்றல் மிக்கவர் .சிறந்த பண்பாளர் .மனித நேயம் மிக்கவர் . மதுக் கடைகளை மூடு என்ற தலைப்பில் கவியரங்கம் நடத்தி கவிதைகளை தனது மின்னல் கலைக்கூடம் சார்பாக நூலாக வெளியிட்டவர் .புகையிலை ஒழிப்போம் என்ற தலைப்பில் கவியரங்கம் நடத்தி கவிதைகளை மின்னல் கலைக்கூடம் சார்பாக நூலாக வெளியிட்டவர் .சமுதாய ஈடுபாடு உள்ளவர் .

பற ... பற ... என்ற நூலின் தலைப்பே பறவைகளை நினைவூட்டி விடுகின்றது .நூல் முழுவதும் பறவைகள்! பறவைகள் ! பறவைகள் ! பற்றிய ஹைக்கூ கவிதைகள் படிக்கும் வாசகனுக்கு சிறகுகள் முளைக்க வைக்கின்றன .அட்டைப்பட வடிவமைப்பு .உள் அச்சு,பறவைகள் புகைப்படங்கள் என யாவும் மிக நேர்த்தியாக உள்ளன .பாராட்டுக்கள் .மின்னல் கலைக்கூடத்தின் பெருமை மிகு படைப்பாக வந்துள்ளது .

இந்த நூலை இலக்கிய பறவைகளின் இனிய வேடந்தாங்கலாய் ஊஉக்கமலிது உற்சாகப்படுத்தும் கவிஞர் சீனி .இரவி பாரதி அவர்களுக்கு காணிக்கை ஆக்கி உள்ளார் .நூல் ஆசிரியர் கவிஞர் வசீகரன் திருக்குறளில் ஆழ்ந்த புலமை உள்ளவர் என்பதால் மறக்காமல் நண்பர்கள் கவிஞர்கள் பெயர் குறிப்பிட்டு நன்றியை பதிவு செய்துள்ளார் .என் பெயரும் உள்ளது .நூல் ஆசிரியருக்கு இது மூன்றாவது நூல் முத்தாய்ப்பாக வந்துள்ளது .முத்திரை பதிக்கும் நூலாக வந்துள்ளது . பாராட்டுக்கள் .

பறவைகளை என்றும் நேசிப்போம் ! உயிர்வதை வேண்டாம் யோசிப்போம் !

கல்வெட்டு வரிகள் நூல் படிக்கும் வாசகர்களை சிந்திக்க வைக்கின்றன பறவை நேசம் விதைக்கின்றது .

தோட்ட உரிமையாளர்கள் என்று சொல்லி பட்டா வைத்துக் கொண்டு மார் தட்டும் முதலாளிகளின் தலையில் கொட்டும் வண்ணம் ஒரு ஹைக்கூ . பறந்து வந்து இறங்கும் தோட்ட உரிமையாளர்கள் பறவைக் கூட்டம் ! மனிதர்களில் பலர் பிறரை நேசிப்பதில்லை .இன்னும் சிலர் தன்னையே நேசிப்பது இல்லை .தன்னையே விரும்பாத மனிதர்களும் பூமியில் உண்டு .அவர்களுக்கான ஹைக்கூ ஒன்று .மிக நன்று. காட்சிப் படுத்தும் ஹைக்கூ .

தன்னையே காதலிக்கும் ஒற்றைச் சிட்டுக்குருவி கண்ணாடியில் அலகுகொத்தி ! துன்பம் தந்தவனுக்கும் இன்பம் தரும் அகிம்சை வாதியாக கிளியை சித்தரிக்கும் ஹைக்கூ .

கூண்டில் அடைத்தவனுக்கு கூழ் ஊற்றுகிறது சோதிடக் கிளி! நன்மை செய்யும் பறவைகளுக்கு தீமை செய்யும் மனிதர்களை சாடும் விதமாக .புத்திப் புகட்டும் விதமாக உள்ள ஹைக்கூ .பாசமாக வளர்த்த சேவலும் விருந்தாடி வந்து விட்டால் விருந்தாகி விடும் அவலம் சுட்டும் ஹைக்கூ .

அதிகாலை ஐந்து மணி கூவி எழுப்பிய சேவல் குழம்பில் கொதித்தது !

உலகின் மிகப்பெரிய அஞ்சல் துறை உள்ள நாடு இந்தியா .இந்த அஞ்சல் துறை க்கு முன்னோடியான பறவையை நினைவூட்டும் ஹைக்கூ .

மனித வரலாற்றில் முதல் தபால்காரன் தூதுப்புறா !

பறவைகளை ஆய்வு செய்து என்ன பறவை என்ன நிறம் .என்ன குரல். என்ன செய்யும் இப்படி பல தகவல்களை ஹைக்கூ கவிதை மூலம் எழுதியது சிறப்பு .பெற்ற அன்னையை மறந்து விடும் அவலம் சாடும் ஹைக்கூ .

விரட்டப்பட்ட அம்மா வழித்துணையாய் வந்தமரும் தோளில் புறா !

தொன்மை தகவலும் ஹைக்கூ கவிதையில் பதிவாகி உள்ளது .

மை தொட்டு எழுத முதலில் உதவியது சிறகு !

அட்டை முதல் அட்டை வரை பறவைகள் பற்றிய பரவச ஹைக்கூ கவிதைகள் .பறவை பாசம் பறை சாற்றும் விதமாக உள்ளன .பதச் சோறாக சில மட்டும் உங்கள் ரசனைக்காக எழுதி உள்ளேன் .நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுங்கள் .மனித நேயம் தாண்டி பறவை நேயம் கூறும் நூல் . நூல் ஆசிரியர் கவிஞர் வசீகரன் அவர்களுக்கு பாராட்டுக்கள் .



’என்னை ஒரேயொருமுறை
எட்டித்தான்
பார்த்தாலென்ன..
ஒன்றும் குறைந்து
விட மாட்டாய்’

கூவியழைக்கும்
குரலுடன் சேர்ந்த
மிக மெல்லிய கர
நுனிகளால் ஆனால்..
உறுதியான..
கனமான தட்டல்

சொல்லத் தெரியாதொரு
அதிர்வலையை
உண்டுபண்ணுமோர்
உள்மன வெளிப்பாடு

பிரிய இயலாப்
ப்ரியத்தின் பிரிகள் !

அயர்ச்சியைத் தாண்டி..
மனதின் துள்ளல் அபாரம்

மெல்ல மெல்லச்
சிறிது சிறிதாகத்தான்
திறக்க முடிகிறது
சாளரக் கதவினை

செடிகொடிகளை
வேரோடு சாய்த்து விடுமோ
என்ற திகில் சேர்த்த..

இடி மின்னலுடன்
ஊழிக் கூத்தென
ஆடித் தீர்க்கும் மழையின்
கொண்டாட்
டத்தை
பேராசையுடன்
ரசிக்க!



**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்.

## தொடும் தூரம்

" வெற்றிகள் தானாய் வந்து
விழுவதில்லை
கிடைப்பதும் இல்லை .... "

பூமிக்கு அடியில் இருக்கும்
விதை முட்டி மோதி
மண்ணைப் பிளந்து
தலை காட்டுகிறது ......"

இடை விடாத உழைப்பும்
முயற்சியும் தன்
நம்பிக்கையும் முடிவில்
வெற்றியை எட்டுகிறது ..."

வெற்றிகள் பெறும் முன்
தோல்விகள் பல உண்டு ..."

தோல்விகளே வெற்றியின்
முயற்சிப்படிகள் ....."

தோல்விகள் தான்
அனுபவப் பாடம்
வெற்றியின் முகவரி
காட்டும் ரகசியம் ..."

முயற்சி இல்லாமல்
தோல்வியை கூட
எட்ட முடியாது ..."

தோல்வி என்று எண்ணாமல்
பயிற்சி என்று நினைத்தால்
அதுவே வெற்றி தான் ... "

தோல்விக்கும்
வெற்றிக்கும்
தூரம் மிகக்
குறைவு ...."



**ஆர். சீதாராமன்,**
சீர்காழி



கிளி ஜோஸ்யம்
பார்க்கும் ஜோஸ்யன்
கிளியை பட்டினி
போடுவதில்லை!
பட்டினிபோட்டால்
அவன் எதிர்பார்க்கும்
படத்தை அது
எடுத்துக்கொடுக்காதே!
இது தான் கொடுத்து வாங்குவதோ?
கடலைவாங்கினேன் சுடச்சுட கடலைமடித்த பேப்பரில் எனது
கவிதை, பழையபேப்பர்கடையில் எடைக்குப்போட்டேன்
கடலைமட்டும் கையைசுடவில்லை வறுமையும்
கையைச்சுட்டதே! ஓரிருநாளே உயிர்வாழும் கொசுக்கள் கூட
ஏ பாசிட்டிவ் ரத்தம் உள்ளநபரைத்தான் கடிக்குமாம்.
இங்கே ரத்த சம்பந்த உறவுகளோ வசதியானவரை ஒரு கடி
கடித்து அவன் வாழ்ந்து கெடும் வரை விடுவதில்லையே!
முயல் ஆமை கதையில் முயல் மமதையிலோ போதையிலோ
தூங்கியபாதையே ஆமைக்கான வெற்றிப் பாதையானதோ?
இங்கே எதுவும் நியாய தர்மப்படி நடக்காதபோது தர்மம் எங்கே
தலையைக்காக்கும்? கோவில் உண்டியலில் காசுபோட்டால்
களவு போகிறது, களவு போனது காசுமட்டுமல்ல. வெளியில்
விட்டுவந்த புதுசெருப்பும்தான் தட்டில்
காசுபோட்டால் புன்சிரிப்போடு ஆசீர்வாதம்
கலந்த விபூதி குங்கும பிரசாதம் கிடைக்கிறது.
மனைவிக்கு மரியாதை கொடுத்தான் கணவன்
பதிலுக்கு தேங்க்யூடா என்றாள் அவள் இதுதான்
நாகரீகம்!



**நா.புவனாநாகராஜன்** செம்பனார்கோவில்






# மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் ஜென்ம தினத்தில் சிறப்பு பூஜை வழிபாடு 700 ஆண்டுகள் கழித்து பாண்டிய செங்கோல், அரசு சின்னங்கள் மற்றும் நாணயங்கள் வைத்து நடைபெற்ற பூஜை வேத ஓதலுடன் மக்களின் பெரும் திரளான பங்கேற்பு

**மதுரை அக் 6:**
மதுரை பாண்டிய அரசின் புகழ்மிக்க மாமன்னர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216 1244) அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் (புரட்டாசி மாதம், அவிட்ட நட்சத்திரம்) பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு சார்பாக சிறப்பு பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாண்டிய அரசின் அடையாளங்களான செங்கோல், அரசு சின்னங்கள் மற்றும் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

சுமார் 700 ஆண்டுகள் கழித்து பாண்டிய செங்கோல் மற்றும் பாண்டிய நாணயங்களை வைத்து வேதம் ஓதப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது என்பது இந்நிகழ்வின் வரலாற்றுச் சிறப்பாகும்.





**நிகழ்வில் பங்கேற்றோர்**
பூஜையில் தமிழக மேனாள் தடயவியல் இயக்குனரும், அனைத்து மறவர் நல கூட்டமைப்பு பொதுச்செயலாளருமான செ.விஜயகுமார், மாநில பொருளாளர் டாக்டர் எஸ். குமார், மாநில இளைஞரணி செயலாளர் சு.மணிகண்டன், விஜயநகர உஜ்ஜீவனா டிரஸ்ட் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி செயலாளர் செந்தில்குமார், சிவனடியார் நாகராஜன், பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழுவின் பல்வேறு ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் ஆர்வமுடன் செங்கோல், அரசு சின்னங்கள், பழமையான பாண்டிய நாணயங்களை கண்டு களித்தனர். நிகழ்வில் பங்கேற்ற பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**பாண்டிய அரசின் வரலாறு ஒரு குறிப்பு**
பாண்டியர்கள், சங்ககாலம் தொட்டே தமிழ் நாட்டை ஆண்ட தொன்மையான வம்சம். இவர்களில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழர்களை வீழ்த்தி மதுரையை மீட்ட மன்னர் என்ற பெருமையை பெற்றவர். இவர் ஆட்சி செய்த காலத்தில் (1216 1244) பாண்டிய நாடு அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியது. அந்த காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள், பாண்டிய அரசின் செழிப்பையும், வாணிக வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் முக்கியச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

**வரலாற்று சிறப்பு மிக்க தருணம்**
"700 ஆண்டுகளுக்குப் பிறகு பாண்டிய செங்கோல், அரசு சின்னங்கள் மற்றும் மன்னர் கால நாணயங்களை வைத்து வேதம் ஓதப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது இதுவே முதல்முறை" என பாண்டிர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வாளர் மணிகண்டன் பெருமிதம் தெரிவித்தனர். இந்த நிகழ்வு, பாண்டிய வரலாற்றின் மகத்துவத்தையும், தமிழ் மரபின் சிறப்பையும் வெளிப்படுத்தும் ஒரு வரலாற்று நாளாக இன்று மதுரை மக்களின் சுதந்திர தினமாக கூட இதை கருதலாம்.

**தனிப்பெருங்கருணை நாள்!**
(வள்ளலார் பிறந்தநாள்)
நேரிசை வெண்பா!

வாடும் பயிரையே
கண்டபோது வாடினார்
நாடி அவர்களின் நற்பசியை...
ஓடவைத்தார் வள்ளலார்
அன்றே வளத்தையே
கண்டாரே அள்ளி

அருட்பா பருகு!

அணையா அடுப்பை
அழகாக வள்ளல்
மணந்திடவே தந்தாரே
மாண்பாய்.... முனைந்தார்
பசிபோக்கிப் பண்பாக
நின்றாரே நன்று
இசைந்தருள் செய்தார்
இனிது!

முனைவர்
இராம.வேதநாயகம்.

**காலமெல்லாம் காத்திருப்பேன்**

மௌனத்தின் நடுவே
நம்பிக்கையாய் நின்ற ஒரு
மனம்...

காத்திருக்கிறேன்...
இன்னும்
காத்துக்கொண்டிருக்கிறேன்...
இன்னும் எவ்வளவு நாள்
காத்திருப்பேன் எனக்கே
தெரியவில்லை.

ஏன் காத்திருக்கிறேன்?
உன் பதிலுக்காகவா...
உன் அழைப்புக்காகவா...
அல்லது உன்
பார்வைக்காகவா...

நீ பதில் தராவிட்டாலும்,
உன் மௌனத்தில் ஏதோ ஒரு
அர்த்தம் இருக்கிறது.
நீ அழைக்காவிட்டாலும்,
என் மனசு சிறு குழந்தை
போல உன்
கையைப் பிடித்து
நின்றுகொண்டே
இருக்கிறது.

உன் பார்வை
என் மீது
படாவிட்டாலும், நீ என்னை
பார்த்துக்கொண்டுதான்
இருக்கிறாய் என நான்
நம்புகிறேன்.

மணி இல்லாத கொலுசு
போல, உன் மனசு நடந்து
கொண்டுதான் இருக்கிறது,
ஆனால் அந்த மணி ஓசை
மட்டும் கேட்கவில்லை.

வானத்தில் சூரியன்
இருந்தாலும்,
நிழல் போலே நான்தான்
உன்னை தொடர்ந்து
வருவேன்.

நீ விட்டு சென்றாலும்,
நீ விட்டுச் சென்றதை
உன்னிடம் கொண்டு வந்து
சேர்ப்பேன்.

நீ என்னை
சேர்க்காவிட்டாலும் —
சேர்ந்தே இருக்கிறேன்,
உன் நிழலில்...
உன் நினைவில்...
உன் மௌனத்தின் மெல்லிய
ஓசையில்... காலமெல்லாம்
காத்திருப்பேன்



ஜனனி அந்தோணி ராஜ்
திருச்சிராப்பள்ளி

# கல்வி மையத்தில் வள்ளலார் 202 ஆவது பிறந்தநாள் விழா

**வந்தவாசி, அக் 06:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் வள்ளலாரின் 202 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மற்றும் படத்திறப்பு நிகழ்வு மைய வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை தாங்கினார். ஆசிரியர் மகாவீர் வரவேற்றார். பெரும்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கோ.ஸ்ரீதர், ஓய்வு பெற்ற ரயில்வே அதிகாரி சு.தனசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலரும், தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரி இயக்குநருமான



எஸ்.அப்பாண்டைராஜ் பங்கேற்று, வள்ளலாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். மேலும் வள்ளலாரின் கொள்கைகள் இன்றளவும் அனைத்து மக்களிடையே சமரசத்தையும், சகோதரத்து வத்தையும் ஏற்படுத்துகிறது என்று பேசினார்.

மேலும் இந்த நிகழ்வில் முதுகலை ஆசிரியர் கு.சதானந்தன், சுவாமி விவேகானந்தா தொண்டு மைய நிறுவனர் ம.சுரேஷ்பாபு, கவிஞர் வந்தை குமரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் ஜோதிடர் ஆர். சங்கரநாராயணன் நன்றி கூறினார்.

# ரத்ததான முகாம்



**திருமயம், அக்.6:**
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அதிமுக செயலாளரும், முன்னாள் வீட்டு வசதி வாரிய தலைவருமான திரு. பிகே. வைரமுத்து அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ரத்ததானம் செய்தனர். ரத்த தானம் வழங்கியவர்களுக்கு அதிமுக தெற்கு மாவட்ட செயலாளர் பிகே.வைரமுத்து அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் PKV. குமாரசாமி,ஒன்றிய செய லாளர்கள் காசி கண்ணப்பன், ஆலவயல் சரவணன் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகளும், தொண்டர்களும் உடன் இருந்தனர்.

பொ. பாண்டித்துரை.
திருமயம்
தொகுதி செய்தியாளர்:
8489907893.

# காட்பாடி ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீனிவாச கல்யாணம் கோலாகலம்!





**வேலூர், அக்.6:**
வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலில் மூன்றாவது புரட்டாசி சனிக்கிழமை முன்னிட்டு மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை ஸ்ரீனிவாச திருக்கல்யாணம் நடந்தது. முதலில் அர்த்தமண்டபத்தில் எழுந்தருளிய ஸ்ரீனிவாசனுக்கு வாசனை திரவியங்கள், சந்தனம் உள்ளிட்ட பொருட்களால் அபிஷேகம் நடந்தது.

இதையடுத்து திருமஞ்சனம் நடந்தது. தொடர்ந்து ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் நரசிங்கராயனி பேட், ஸ்ரீயோக நரசிம்மர் ஆலய அர்ச்சகர் ஆர்.பாலாஜி மற்றும் காட்பாடி ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் ஆலய பட்டாச்சாரியார் ஸ்ரீரங்கம் ஸ்ரீகண்ணன் பட்டாச்சாரியார் ஆகியோர் இணைந்து ஸ்ரீனிவாசதிருக்கல்யாணத்தை வெகு விமரிசையாக நடத்தி முடித்தனர்.

ஸ்ரீனிவாச திருக்கல்யாணத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

இதைத்தொடர்ந்து பூஜையில் வைத்து பூஜிக்கப்பட்ட மங்கள கயிறுகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. ஸ்ரீனிவாச திருக்கல்யாணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயில் பக்த கைங்கரிய சபாவினர் செய்திருந்தனர். ஸ்ரீனிவாச திருக்கல்யாணத்தைக்காண வந்த பக்தர்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு பிரசாதங்களை வழங்கினார் கோவில் மேலாளர் முருகன்.

# நலமுடன் ஸ்டாலின் மருத்துவ முகாம்



மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த நலமுடன் ஸ்டாலின் மருத்துவ முகாமினை அமைச்சர் முத்துசாமி துவக்கி வைத்து, பயனாளிக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



'ஸ' முதல் 'நி' வரை
வாழ்வின் ஏழு நிலைகள்
உயிரின் எழுச்சியும் வீழ்ச்சியும்
உணர்வின் நாதமாய் ஒளிரும்

இசை அது ...
நிலவின் ஒளியில் கரையும்
சுவாச காற்றில் கலக்கும்

கடவுளின் மௌனநாதம்...
அமைதியின் ஆத்மநாதம்...
இனிய இதயத்தின் மொழி

சுகமான அனுபவச் சுரமும்
தவறாத நினைவுத் தாளமும்
சேர்ந்து சொல்லும்
உண்மை
"உயிரே இசை.
இசையே
இறைவன்."

**இசை**
அமைதியின் மடியில்
அழகாக ஒலிக்கும்
சுகமான சுரங்களின்
அதிர்வலை வரிசைகளே
உலகின் இதயத்துடிப்பு.



நா.பத்மாவதி
கொரட்டூர்

# வள்ளலார் பிறந்த நாளையொட்டி அன்னதானம்



நாகை மாவட்டம் தேவூர் சுத்த சன்மார்க்க சங்கம் சார்பில் நேற்று வள்ளலார் பிறந்த நாளையொட்டி அன்னதானம் வழங்கப்பட்டது.

## ஆதிபராசக்தி வழிபாட்டு மன்ற 43-ம் ஆண்டு விழா



காரைக்காலில் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்ற 43-ம் ஆண்டு விழாவில் புதுச்சேரி அமைச்சர் திருமுருகன்பங்கேற்றார்.

## சூரிய உதயம் பார்ப்பதற்காக குவிந்த சுற்றுலா பயணிகள்



கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் நேற்று சூரிய உதயம் பார்ப்பதற்காக குவிந்த சுற்றுலா பயணிகள்.

## சிலம்பம் கலைக்குறித்து விழிப்புணர்வு பேரணி



கிருஷ்ணகிரியில் சிலம்பம் கலைக்குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது.

## அதிமுகவினரின் பிரச்சார பயணம்



சிவகங்கையில் அதிமுகவினரின் பிரச்சார பயணத்தை மாவட்டச் செயலாளர் செந்தில்நாதன் எம்எல்ஏ நேற்று தொடங்கி வைத்தார்.

**அன்பு !**

அ ன்புக்கு நாம் அடிமை
ஆ ற்றலுக்கு நாம் தயார்
இ யல்பாய் இருப்பது நம்
கடமை
ஈ தலில் பற்று வைப்பது நம்
கொள்கை
உ ண்மையே பேசுவது நம்
தீவிரம்
ஊ மையாக இருப்பதை
தவிர்க்க
வேண்டும்
எ ப்போதும்
எச்சரிக்கையாக
இருக்க வேண்டும்

ஏ மாற்றம் அடைய வேண்டாம்
ஐ யம் வேண்டாம்
நல்லவைகளில்
ஒ ன்று பட வேண்டும்
நல்லவர்களோடு
ஓ ங்கி உயர வேண்டும் நற்
பண்புகளோடு
ஔ வைப் பிராட்டியாரை
வணங்குவோம்
நித்தமும்
அஃ தே சாலச்
சிறந்தது !



வி.கே.
லக்ஷ்மிநாராயணன்
சென்னை

# கருமலையாள் கல்வி அறக்கட்டளையின் புதிய கட்டிடத் திறப்பு விழா



விருதுநகரில் அருள்மிகு கருமலையாள் கல்வி அறக்கட்டளையின் புதிய கட்டிடத் திறப்பு விழா மற்றும் 3-ம் ஆண்டு கல்வி பரிசளிப்பு விழாவில் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், மெய்யநாதன் பங்கேற்றனர்.

# வாசகர் கடிதம்

பிற்போக்குத்தனத்தைப் புகுத்த நினைப்பதை தடுக்கும் அரண் தான் திராவிட மாடல்#ஸ்டாலின் விளக்கம்
ஜப்பானின் முதல் பெண் பிரதமராகிறார் சனே தகைச்சி
காஸா அமைதி முயற்சியில் முன்னேற்றம்#டிரம்ப் பணிகளுக்கு மோடி வரவேற்பு
அடுத்த வாரம் இந்தியா வருகிறார் இங்கிலாந்து பிரதமர்
வீட்டில் நிறுத்தியிருந்த வாகனத்திற்கு டோல் கட்டணம்#கார் உரிமையாளர்
ிர்ச்சி=வேலையில்லாதவன் பூனையைப் பிடித்து சரைச்சானாம்
விஜய்க்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்க பரிந்துரை
சேவைக் குறைபாடு#மின் நுகர்வோருக்கு மின் வாரியம் 62000 வழங்க உத்தரவு=குறை தீர் ஆணையத்தின் பணி ஏதுமில்லை
ஒரே நாளில் கிளியர் ஆக உள்ள காசோலைகள்#ரிசர்வ் வங்கி நடவடிக்கை
ஜாவா சுந்தரேசன் என பெயர் மாற்றிக்கொண்ட சார்ம்ஸ்
சுவாமிநாதன்#எந்த எண் கணித நிபுணர் தந்த யோசனையோ?
ராஷ்மிகா-தேவரகொண்டாவுக்கு திருமண நிச்சய தார்த்தம்#எதைக் கண்டு மயங்கினாரோ?
புதுக் கவிதைகளின் அணிவகுப்பு அமர்க்களம்
வாசகர் கடிதங்கள் அட்டகாசம்
நூல் விமர்சனம் சிறப்பு
ஆதார் அட்டை அப்டேட் செய்வதற்கான கட்டணம் உயர்வு
கடந்த நான்கரை ஆண்டுகளில் 66018 இளைஞர்கள் தொழில் முனைவோர்களாக முன்னேற்றம்#தாமோ அன்பரசன் தகவல்
வரதட்சணையாக ஐம்பது சவரன் கேட்டு திருமணத்தை நிறுத்திய ஐடி ஊழியர் கைது
சென்னையில் முதல்வர் ஸ்டாலின், நடிகை திரிஷா வீடுகளுக்கு வெடி குண்டு மிரட்டல்#மோப்ப நாய் உதவியுடன் காவலர்கள் விரைவு
ம.பி. யில் குழந்தைகள் இறப்புக்கு இருமல் சிரப் காரணமா? 19 ஆலைகளில் ஆய்வு தீவிரம்
அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு இந்தியா அடிபணியாது #ரஷிய அதிபர் புதின் உறுதி
கனடா திரையரங்குகள் மீது தாக்குதல்#இந்திய திரைப்படங்கள் திரையிடுவது நிறுத்தம்
ஆய்வகத்தில் உருவான இதயம் மற்றும் கல்லீரல்#அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை
எச்1பி விசாவுக்கான புதிய கட்டணத்தை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதி மன்றத்தில் வழக்கு
நெட்ஃபிளிக்ஸை ஆட்டம் காண வைத்த எலான் மஸ்க்#பின்னணி என்ன?



**-பி. சுரேகா**
சென்னை

---

விஜய் கூட்டத்தில் அதிக ஆம்புலன்ஸ் வந்தது எப்படி யாருக்கு தெரியும்.
ஆன்மீக செய்திகள் அனைத்தும் பாராட்டும் படி இருந்தது.
எண்ணூர் விபத்தில் 10 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
டெட் விவகாரத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் அமைச்சர் அறிவிப்பு. கரூர் விசாரணையை சிபிஐ நடத்த வேண்டும் அன்புமணி கோரிக்கை. தங்கம் விலை 87000 ரூபாயை தாண்டியது. எவ்வளவு ஏறினாலும் வரதட்சணை கேட்காமல் இருக்க மாட்டார்கள். காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நீலகிரியில் மதுக்கடைகள் மூடல். மற்ற

ஏரியாக்களில் நிலவரம் எப்படி.
புதுக்கவிதைகள் அனைத்தும் சூப்பர் . ரகம். நெல்லை குரலோன் எழுதிய தேசிய முதியோர் தின கவிதை ரசிக்கும்படி இருந்தது.
குழந்தைகள் கை வண்ணம் அற்புதமாக உள்ளது
கரூரில் நிர்மலா சீதாராமன் ஆய்வு செய்தார் ஏன் மணிப்பூருக்கு செல்லவில்லை.
மகாராஷ்டிராவில் கனமழையால் 10 பேர் உயிரிழப்பு
ட்ரம்பின் காசா அமைதி திட்டம் முஸ்லிம் நாடுகள் வரவேற்பு.
நோபல் பரிசு கிடைக்கும் வரை மனுஷன் போராடிக் கொண்டுதான்

இருப்பார் போல. தமிழ்நாடு

இ பேப்பரை அதிகாலையில் படிக்கும் போது ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது
தினமும் அதிகாலையில் வாசகர்களை எழுப்பி வருவது தமிழ்நாடு இ பேப்பர் என்றால் மிகையாகாது.
தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்திற்கு வாழ்த்துக்கள்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

தமிழ் நாடு இ பேப்பர் குழுமம் பற்றிய, கோவை வாசக சொந்தம் திரு.சிவசங்கரின் மினி சர்வே ரிப்போர்ட் வித்யாசம் பிளஸ் சுவாரஸ்யம் மிகுந்ததாக இருந்தது.
சிங்கிள் கேள்வியை வாசகர் சிலரிடம் முன் வைத்து, இரண்டு நாள் கடிதமாக அந்த ரிப்போர்ட்டை வடிவமைத்த அசத்திய நேர்த்திக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

வாசகரின் புதுமை வேட்டைக்கு, ஈடு கொடுக்கும் வகையில் வாசக படைப்பாளருக்கு சுதந்திரம் அளித்து ஊக்கப் படுத்தி வரும் சீப் எடிட்டர் அவர்களுக்கு, வாசக சொந்தங்கள் அனைவரின் சார்பாகவும் நன்றி... நன்றி!

வாசக நண்பர் சிவசங்கர் அவர்களுக்கு இந்த தருணத்தில் ஓர் அன்பான வேண்டுகோள்...

இன்னொரு சந்தர்ப்பத்தில், ஒற்றை கேள்வி சர்வேயாக இல்லாமல், விரிவான தளத்தில் வீரியமான சர்வே எடுத்து ரிப்போர்ட் கொடுத்தால் தமிழ் நாடு இ பேப்பர் ஆசிரியர் குழுவினருக்கு பயனுள்ளதாக இருக்கும். ( வாசக உள்ளங்களின் உள்ளக் கிடக்கைகளை துல்லியமாய் உணர்ந்து உயர் தரத்தில் பத்திரிகை களை வெளியிட்டு வரும் ஆசிரியர் குழுவினருக்கு இதெல்லாம் தேவை இல்லை என்பது வேறு விஷயம்.)

சர்வேக்கு தேர்வாகிய அந்த 14 வாசகர் பட்டியலில் எனக்கு இடம் கிடைக்க வில்லை தான். ஆனாலும் தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் மீது எனக்குள்ள ஈடுபாட்டையும் பிரியத்தையும் காட்ட வேண்டும் என்ற துடிப்புக்கு தீனி போட்டாக வேண்டுமே...

அதனால் தமிழ் நாடு இ பேப்பர் பற்றி என்னுள்ளே ஓடிக் கொண்டிருக்கும் சில கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.
. செய்திகளை வெளியிடுவதில் தெளிவான -- நேர்மையான -- உறுதியான பார்வை.
இந்த விஷயத்தில் தமிழ் நாடு இ பேப்பர் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.
உள்நாட்டு -- வெளி நாட்டு செய்திகளில் மிகுந்த கவனமும் முக்கியத்துவமும் காட்டுவதோடு நின்று விடாமல், வட்டார செய்திகளில் தாராளத்தையும் தனித்துவத்தையும் வெளிப்படுத்தி வருவது மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.
தரமான -- உண்மையான பத்திரிகைக்கு சார்பு நிலை அவசியம் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழ் நாடு இ பேப்பர் தனிக் காட்டு ராஜாவாக ஜெயக்கொடி நாட்டி வருகிறது.
ஒரு நாளிதழின் தரத்தை தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும் செய்திகளில் குழப்பமே இல்லாமல் ஆரம்பம் முதல் இன்று வரை பிசிறில்லாத தெளிவான பாதையில் பயணிக்கும் தமிழ் நாடு பேப்பர் மேலும் மேலும் சிறந்தோங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.



**-பி.வெங்கடாசலபதி**
தென்காசி

---

அன்பு வாசக நெஞ்சங்களுக்கு வணக்கங்கள்.

ட்ரம்ப் அவர்களின் அயராத முயற்சியால் காசாவில் அமைதிக்கான வெளிச்சக் கீற்று தென்படத் துவங்கியுள்ளது. ஹமாசும், நெதன்யாகுவும் இறங்கி வந்துள்ளனர். ஐ. நா. சபையும், திரு. மோடி அவர்கள் உள்ளிட்ட உலகத் தலைவர்களும் பாராட்டுக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளனர்.

"போரில்லா உலகம் காண்போம்" என்னும் கருத்தை குருதியோட்டாமா கவும், No War என்னும் மந்திரத்தை இதயத் துடிப்பாகவும் கொண்டு இயங்கிவருகிறது பொட்டல்புதூர் "பேரன்பு" இயக்கம். பிரார்த்தனை மூலம் ப்ரம்மத்தையே அசைத்துவிட முடியும் என்பதில் அசாத்திய உறுதி கொண்ட இயக்கம் அது. அது எண்ணி முயலும் சாத்தியம் சாதனையாக கைசேரும் காலம் கனிந்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.
போரில்லா உலகம் மலர்வது சாத்தியமே. இது சத்தியமே.

தெருக்குற்றங்களைப் போல் சைபர் குற்றங்களும் பெருகி விட்டன என்பதை பாலிவுட் ஸ்டார் அக்க்ஷய் குமார் சுட்டிக்காட்டியுள்ளார். பள்ளிகளில் சைபர் பீரியட்கள் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள சமூகப் பிரக்ஞயுள்ள அவரது கருத்து செயல்படுத்தப்பட வேண்டும். அதனால் பெண்பிள்ளைகள் பாதுகாக்கப்படுவர்.

இங்கிலாந்தில் கத்தோலிக்க திருச்சபையின் பேராயராக சாராம் முல்லாலி என்ற பெண்மணி நியமனம் பெறுகிறார். உலகின் முதல் காத்தோலிக்க பெண் பேராயர் என்ற பெருமையைப் பெறுகிறார். சிலர் எதிர் கூச்சல் போடுகிறார்களாம். முல்லாலியை முல்லா என்று புரிந்து கொண்டார்களோ என்னவோ!!

சபரியில் 30 கிலோ தங்கம் மாயம் என்று சந்தேகமாம். அடர்வனக் கோவிலில் அடாத செயலா?

மேற்கண்டவை ஆனந்த பாஸ்கரில் படித்த செய்திகள். சூடானா தேசிய, உலகச் செய்திகள், சுவையான சிறுகதை, சிந்திக்க கவி வரிகள், சிறப்பான சினி துணுக்குகள், சிரித்து மகிழ ஜோக்குகள், சிக்கன சமையல் குறிப்பு, வகை வகையாய் வட்டாரச் செய்தி என வாசகரின் கவனம் பெறும் செய்திகளை சிரத்தையாகத் தேர்ந்தெடுத்து, அழகுறத் தொகுத்து வழங்குவது ஆனந்த பாஸ்கர். குறுகத் தரித்த குறள் என்பது போல அனைத்தையும் நாலே பக்கங்களில் வழங்கும் சாதனைதான் இதில் ஹைலைட். Brevity is the soul of wit என்ற ஷேக்ஸ்ப்பியரின் வாசகத்துக்கு வலிமை சேர்க்கும் ஆனந்த் பாஸ்கரின் ஆசிரியக் குழுமத்திற்கு பாராட்டுக்கள்.

தமிழ்நாடு இ இதழில் மாதுளை சாறு பற்றிய ப்ளஸ், மைனஸ் விளக்கம் சிறப்பு. பயனுள்ள தகவல்.

திருச்செந்தூரில் குவியும் மக்கள் கூட்டம் அச்சமூட்டுவதாக உள்ளது. பக்தி வேண்டியதுதான். அது உயிரின் பாதுகாப்புக்கு பங்கமாக ஆகிவிடக்கூடாதே.

வீட்டில், ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்துக்கு கட்டணம் கேட்கிறதாம் டோல் பிளாசா. நுகர்வோர் நீதி கேட்கிறார்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது மின்சாரத் துறையின் சேவைக் குறைபாட்டுக்கு நஷ்ட ஈடாக ரூபாய் 62 ஆயிரம் வழங்க நுகர்வோர் குறைதீர் ஆணையத் தீர்ப்பு வரவேற்புக்குரியது.

மேல்நோக்கு, கீழ்நோக்கு, சமநோக்கு நாட்கள் குறித்த கட்டுரை அவசியமான பாடம்.

ஜாவா சுந்தரேசனாக மாறிய காமெடி நடிகர் சாம்ஸுக்கு நடிப்பில் பல வாய்ப்புகள் பெற்று உயர வாழ்த்துக்கள்.

திரு. நடேஷ் கன்னா அவர்களின் ஆறு வரிகளும் அறுசுவைகளாக விளங்கின. சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தன. சபாஷ்.

முந்தானையில் முகம் துடைக்கும் கவிதைகளை வாசித்து வாசித்து சோர்ந்து போகும் தருணங்களுக்கு மத்தியில் ஒரு உற்சாக டானிக்காக வருகிறது திருமதி. உஷா முத்துராமன் அவர்களின் வரிகள். "சோர்வின்றி முயன்றால் சிகரம் அருகில். தன்னம்பிக்கையில் மலர்கிறது வெற்றியின் சிரிப்பு". அருமை.

வடவர், நம்மவர் தொழில் கண்ணோட்டத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டியுள்ளது கோவை. எம். பி. தினேஷ் அவர்களின் படைப்பு. நல்ல அவதானம். சூப்பர்.

ஐயா கருமலை. தமிழாழன் அவர்கள் சீர் நான்கில் சிறப்பாகப் படைக்கும் கவிதைக்கு நான் ரசிகன். எதுகை, மோனை, லயம், கற்பனைத்திறன் செறிந்த படைப்புகள் தருவது மிகச் சிறப்பு. பாராட்டுக்கள்.
புன்னகை - விலை இல்லா புதையல் என நிறுவும் தகைசால் தமிழ்நிலா அவர்களின் படைப்பும் பிரமாதம்.
மீண்டும் நாளை சந்திப்போம். நன்றிகள்.



**-P.கணபதி**
பாளையங்கோட்டை

# வாசகர்

வணக்கம். 5.10.25

அன்றைய தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் ஜப்பானில் முதல் பெண் பிரதமராகிறார் என்ற செய்தி மகிழ்ச்சியாக படிக்க வைத்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக எனக்கு அமைந்தது பாராட்டுக்கள்.

அண்ணாமலையார் மலை கிரிவலம் என்ற செய்தியும் படமும் மிகவும் அருமை. ஆர்வமுடன் படிக்க வைத்த அந்த பக்கத்தில் வந்த அனைத்து ஆன்மிக தகவல்கள் அரசியல் தகவல்கள் எல்லாமே பிரமிப்புடன் படிக்க வைத்தது பாராட்டுக்கள்.

நலம் தரும் மருத்துவம் பகுதியில் மாதுளை ஜூஸ் யார் யார் எல்லாம் குடிக்கக்கூடாது என்று மிகத் தெளிவாக சொன்னது பாராட்டுக்குரியது. சென்னை மெட்ரோவில் செப்டம்பர் மாதத்தில் 1.01 கோடி பேர் பயணம் செய்தார்கள் என்ற தகவல் ஆச்சரியமாக இருந்தது.

நடிகர் விஜய் அவர்களுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்க பரிந்துரை செய்தது விஜய் பற்றி யோசிக்க வைத்தது. அழிந்து வரும் உயிரினங்கள் பாதுகாக்க ஒரு கோடி செலவில் முன்னோடி திட்டங்கள் செய்வது மிகவும் அருமை. கடவுள் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினமும் உலகத்தில் வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யப் பட்ட இது மிகவும் அருமையான செய்தி.

தினம் ஒரு தலைவர்கள் பகுதி ஒவ்வொரு நாளும் ஒரு வித்தியாசமான தலைவர்களைப் பற்றி மிக அழகாக தெளிவாக வரலாற்று செய்தியாக சொல்வது அறிவுக்கு விருந்தாக அமைகிறது இன்று சரோஜினி நாயுடு அவர்களின் வரலாறும் புகைப்படமும் மிகவும் அருமை பாராட்டுக்கள்.

பல் சுவை களஞ்சியம் பகுதி பரவசமுடன் படித்து மகிழ்ந்து அதில் வரும் விடுகதைகள் மிகவும் அருமை. பாராட்டுக்கள். ஜோதிடம் அறிவோம் என்று ஜோதிடத்தில் உள்ள அனைத்து தகவல்களையும் மிகத் தெளிவாக சொல்வது படிக்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது. எந்த திசையில் துளசி செடி நட வேண்டும் என்ற செய்தி மிகவும் அருமையான தகவல் பாராட்டுக்கள்.

வள்ளலார் ராமலிங்க அடிகள் அவதாரத் திருநாள் என்ற செய்தியும் ராமலிங்க அடிகளாரின் படமும் கண்ணுக்கு விருந்தாக அமைந்தது பாராட்டுக்கள்.

ஞாயிறு என்றாலே மிக அருமையாக வரும் ராசிபலன்களை படித்து அன்றைய வாரத்தினை நன்றாக புரிந்து கொள்வேன். சுற்றுலா பக்கத்தில் வந்த தகவல்கள் மிகவும் அருமை சேகரித்து வருகிறேன்.

திருக்கோவில்கள் பயிற்சி பள்ளியில் பயின்று 108 மாணவ மாணவியருக்கு சான்றிதழ்கள் வழங்கிய இதை படித்தவுடன் பெருமையாக இருந்தது. க்ரைம் காரணம் மிகவும் அற்புதம் நல்ல தகவல்களை அழகாக சொல்வதால் ஒரு விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள உதவுகிறது.

மத்திய பிரதேச மாநிலத்தில் குழந்தைகள் மரணத்திற்கு இருமல் சிரப் காரணமா என்று 19 ஆலைகளில் ஆய்வு செய்து தீவிரமாக இந்த பணியை செய்தவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். இதனால் இனி மற்ற குழந்தைகளாவது பாதுகாக்கப்படும் என்று எண்ண தோன்றியது.

எச் 1 பி விசாவுக்கான புதிய கட்டணத்தை ரத்து செய்யக்கோரி அமெரிக்க நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்த செய்தி அமெரிக்காவில் நடப்பதை கண்முன்னே கொண்டு வந்து காட்டியது. பிரதமர் மோடி அவர்கள் புத்திசாலியான தலைவர் என்று ரஷ்ய அதிபர் புதின் பாராட்டுவது உண்மையான தகவல் என்று மகிழ்ச்சியுடன் படித்தேன்.

அனைத்து பக்கங்களிலும் நல்ல அருமையான செய்திகளை கொடுத்து ஞாயிறு அன்றும் சுறுசுறுப்பாக இயங்க உதவிய தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்

Get Your Premium E-Commerce WEBSITE & ANDROID APP
ஆனந்த பாஸ்கர்
Advertise Business
www.anandabhaskar.com
anandabhaskarnews@gmail.com
செய்தியாளர்கள் தேவை
சென்னையிலிருந்து நாள்தோறும் தமிழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'ஆனந்த பாஸ்கர்' நடுநிலை நாளிதழுக்கு ஆர்வமும், துடிப்பும், ஈடுபாடும் கொண்ட மாவட்ட / தாலுகா செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், விளம்பர முகவர்கள் தேவை.
Call: 933 750 1889

அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/ மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com 7871617005
support@enthunai.com 7789941009

K-LINE Seating
Manufacturers of Executive Chairs & Sofa Sets
Best Quality! Factory Manufacturing Price!
Prop. B.GAJENDRA KUMAR MEHTA
Email: dgpmehta007@gmail.com
Ph: 9940097560 / 9840551775
No.57/68, Seniamman Kovil St., Tondiarpet, Chennai-81. TN

அடமான கடன்
ரூ.10 லட்சம் முதல் ரூ.10 கோடி வரை
வீடு கட்ட, வீடு வாங்க கடன் வழங்கப்படும்.
வீடு மற்றும் நிலத்தின் மீது அடமான கடன் வழங்கப்படும்.
வேறு நிறுவனத்தில் அடமானத்தில் உள்ள கடனை மாற்றி குறைந்த வட்டிக்கு,கூடுதல் தொகைக்கு அடமான கடன் வழங்கப்படும்.
தொடர்புக்கு:- J.இளங்கோவன்
Ph: 99419 20502

ONEPATH BUILDERS & DEVELOPERS
ஆட்கள் தேவை
சென்னையில் இயங்கி வரும் பிரபல ரியல் எஸ்டேட் நிறுவனத்திற்கு, ஆண்கள்/பெண்கள் தேவை
வயது வரம்பு அனுபவம் தேவை இல்லை
முதலீடு இல்லாமல் தற்போது நீங்கள் செய்யும் வேலை / தொழில் பாதிக்காமல் கூடுதல் வருமானம் பெற ஓர் அரிய வாய்ப்பு
மாதம் ரூ.30000 முதல் 1 லட்சம் வரை பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது
எங்கள் நிறுவனத்தில் CMDA, DTCP, RERA APPROVED வீட்டுமனைகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் தனி வீடு வங்கி கடன் (70% to 90% Loan) வசதியுடன் விற்பனை செய்ய ஆட்கள் தேவை
பகுதி நேரம் (Part Time) / முழு நேரம் (Full Time)
Cell: 89392 01422

இடம் விற்பனைக்கு
அரசூர் பவுண்டரி யூனிட் அருகில் பச்சாபாளையத்தில் 1 ஏக்கர் இடம் விற்பனைக்கு
CNC MACHINE SHOP, INDUSTRY மற்றும் முதலீட்டிற்கு ஏற்றது. AKA
77089 84140

M2 Civil & Interior
HIRING
ADMIN STAFF
SITE SUPERVISOR
Address: No.1, Elango Salai, Teynampet, Chennai-600018.
Ct: 8220177658, 7358584657

GSK CONSTRUCTION
அனைத்து வித கட்டுமான பணிகளும் லேபர் காண்ட்ரக்ட் & மெட்டீரியல் காண்ட்ரக்ட் அடிப்படையில் சிறந்த முறையில் தரமாக கட்டித்தரப்படும்.
Prop. G.சசிக்குமார்
Ph: 9962053955
No.2/28, தண்டையார் நகர், 1 வது தெரு, தண்டையார்ப்பேட்டை, சென்னை-81

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

டிரைலர் வாங்க / விற்க அனுகவும்
Cell: 9677174691

OM RUDHRA JOTHISAM & TANTRIC RESEARCH CENTER
12 YEARS EXPERTISE
Astrologer B.S.MAYA SASIKALA
Mob: +91 98841 91050
+91 6384766913 +91 9176654690
Email: omrudrajtr@gmail.com
O.No.13/2, N.No.2/3, Market Lane, 3rd St, New Washermenpet, Ch-81.

வரதமான் தங்க நகை மாளிகை
916 KDM, (22 CT) GOLD & SILVER DEALERS
New No.1151, Old No. 392, T.H.Road, Washermenpet, Chennai-600021.
Ph: 044 - 42699873

5K CAR CARE EVERLASTING SUCCESS
5K CAR CARE @ TONDIARPET
Combo Offer
Combo 1: Do Teflon Coating & get Full Interior Enrichment & Odour Removal
Combo 2: Do Rubbing Polish & get & Odour Removal
We offer the Following Professional Services
Eco Car Spa
Sanitizer Foam Car Spa
Interior Enrichment
Interior Foam Enrichment
Manual Polish(UV)
Teflon Coating Silver
Teflon Coating Gold
Teflon Coating Platinum
Teflon Coating Titanium
Engine Room Coating
Electrical Contact Cleaner
Rat Repellent
Odour Removal Treatment
Car Engine Carbon Cleaner
Wiper Smoothner Solution
Front Glass Vision Improver
Salt Water / Stain Remover
Fog Remover/ Ac Disinfectant
Air Aroma Therapy
Battery Terminal Coating
Organic Foam Wash
Interior Seat & Floor Vacum spa
Engine Room Enrichment
Door Pad Cleaning and Enrichment
Most Trusted CAR CARE
Alloy & Tire Cleaning Spa
Automatic under Chassic Spa
Interior Floor Vacum Spa
Lacto Calamine Treatment and Enrichment
Make Your Car Glow With 5K CARE CARE
Ph: 70944 85309 / 70944 85310
No.12C, Jeeva Nagar, Cross Road, Tondiarpet, Chennai-600081. Near MPT Ground

WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US!
94386 10756

## DISTRIBUTORS WANTED
PREMIUM WATER SODA & JUICE




87789 30420

---

## JOB VACANCY
**Kumbhat Holographics**

Flexo Printing Machine Operator - 2 Nos.
Assistants Flexo Operator - 3 Nos.
Slitting Machine Operator - 2 Nos.
Flatbed Die - Cutting Operator - 2 Nos.
Rotary Die - Cutting Operator - 2 Nos.
Quality Check With Excel Knowledge - 2 Nos.
Helpers (Below 30 yrs) - 5 Nos.

Experience: Minimum 3 years
Gender: Male/ Female
Date: 29.09.2025 to 11.10.2025
Time: 10.00 Am - 3.00 Pm
Place: KUMBHAT HOLOGRAPHICS
Plot No: 22A, 7th Street, Phase-3, Ambattur Industrial Estate (North), Chennai - 600098
Contact: 98844 55532 / 86675 66980

---

A creative CBSE school with a difference

## PHYSICAL EDUCATION TEACHERS

Basket Ball, Table Tennis and Kabaddi
கூடைப் பந்து, மேசைப் பந்து மற்றும் கபடி

விளையாட்டில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

Apply with your photo
புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெண்களுக்கு மட்டும் தங்கும் இடம் அளிக்கப்படும்.

kavibharathi@gmail.com

KAVI BHARATHI VIDYALAYA
கவி பாரதி வித்யாலயா
#792, T.H. Road
Thiruvottriyur, Chennai - 600019.

---

## TVS 2 Wheeler Showroom @ Chennai
Req. Exp.

+ Sales Manager
+ Sales Executives (Male / Female)
+ Service Advisors
+ Technicians
+ PDI Technicians
+ Floor In-Charge
+ Spare Parts In-Charge

Free Accommodation*/Attractive Salary
ESI/PF/Incentives/Annual Bonus

Ct: 73051 87222

---

## அடகு / ஏல நகை மீட்க விற்க
மார்க்கெட் விலையை விட மிக அதிக விலை

பணம் தேவையா

## மோனிகா கோல்டு
1070, கிராஸ்கட் 4 வது வீதி
காந்திபுரம், கோவை-12
98422 39186
0422 2481179

---

## SUKDHA INDUSTRIES PVT LTD
Mullipakkam Junction, Periya Irumbedu
Chengalpet - 603 105.

Auto Corrugated Box Manufacturing Unit Requires

- GENERAL MANAGER (Age 50-60 yrs) Min 25yrs Exp. in administration
- MARKETING MANAGER
- PRODUCTION & PLANNING MANAGER
- CIVIL SUPERVISOR (Diploma in Civil Engineering)

9840 44 5294
Apply Immediately to :
sukdhaindustries@gmail.com

---

enmac 25 years

A leading South India based MEP Engineering company requires

## HVAC Site Engineer
Qlfn : Diploma or BE
Exp : 2 Years Plus
Salary : Best in the Industry

Ph: 73388 42074
www.enmac.in

---

## WANTED
REQUIRED OFFICE ASSISTANT WITH TALLY KNOWLEDGE FOR A OFFICE IN CHETPET, CHENNAI - 31

ANY BASIC DEGREE
WITH 1 YEAR WORK EXPERIENCE WITH GOOD COMMUNICATION SKILLS

SALARY: 15K ONWARDS
Email: hrgp12@gmail.com

---

## டி.ஜே.எஸ். கல்விக் குழுமம்
பெருவாயல், கவரைப்பேட்டை
கும்மிடிப்பூண்டி
திருவள்ளூர் மாவட்டம்

பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளை இயக்க அனுபவம் உள்ள

ஓட்டுநர்கள் தேவை

வழித்தடம் :
சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டம்

வயது : 40 முதல் 60 வரை

அனுபவத்திற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்

தொடர்புக்கு : 9788877774
9486183985/ 7373730820

---

## தனியார் கடன் வசதி
- கோவை எல்லைக்குட்பட்ட வீடு, R.C.C. & ஓட்டு வீடு, சிமெண்ட் சீட் வீடு, காலிமனை, இடம், பூமி, தோப்பு போன்ற சொத்து பத்திரங்களின் பெயரில் கடன் வசதி செய்து தரப்படும்.

10 L முதல்...

- பத்திரம், மூலபத்திரங்கள், EC போன்ற தேவையான அனைத்து ஆவணங்களும் தயாராக இருந்தால் விரைவாக கடன் வசதி செய்து தரப்படும்.
- புதிய Loan Sanction Letter - ன் பெயரில் ஏற்கனவே வங்கியில் உள்ள கடன் பத்திரத்தை மீட்க கடன் வசதி செய்து தரப்படும்.
- சிறு/குறு உடனடி கடன் வசதி (Cash Loan) (10000 முதல் 50000) வரை செய்து தரப்படும்.
- DSA & ஏஜென்டுகளும் அணுகலாம்.

Ph : 99436 33559
VV FINSERVE
No.40, First floor, SVL Complex, Olymbus, Ramanathapuram, Coimbatore - 641045.

---

## WANTED
Experienced
## MARKETING EXECUTIVE
required immediately for a reputed Interior Firm operating in Chennai
90925-66293
-CKNB-

---

A Chemical Manufacturing company at MM Nagar REQUIRES

1. **SENIOR MANAGER**
BE Chemical / Mechanical, 8-10 years experience in chemical process industry
2. **MANAGEMENT TRAINEES**
Degree/ Diploma in Chemical/ Mechanical Engg.
3. **ACCOUNTANT** - B.Com with Tally knowledge

Apply to
nuca1610@gmail.com

---

## WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

---

## டிரைவர் தேவை
Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை
98414 41844
93455 31270

---

## கடன் வசதி
வீடு, காலி இடம் மற்றும் சொத்தின் மீது அடமானக் கடன் (வட்டி 1 ரூபாய் முதல்)
விக்டரி ஏஜென்ஸி,
129,பரணி காம்ப்ளக்ஸ், நடராஜா ரோடு, இடையர்பாளையம், கோவை 25
Call: 89 40 40 40 70
MMA

---

## repute
Requires to Market Water & FMCG Products

MARKETING MANAGER
Male, Age: 40 Yrs, Should have 5-10 Yrs FMCG Field Exp & Lead Sales Team.

SALES EXE / OFFICER
Male, Age: 20 - 35 years
FMCG Field Sales Experience Must.
GOOD SALARY + INC + ALLOWANCE

Send bio-data thru
Ct. M. IBRAHIM
Whatsapp 9094005900
Email: gm-fmcg@repute.in

---

## ACCOUNTS ASSISTANT
Tally & MS Office knowledge
## OFFICE ASSISTANT
With 2 wheeler, MS Office knowledge

ARCOT MILK TRANSPORT OPERATORS
1, 54th St, 2nd flr, 9th Avenue, Ashok Nagar, Ch-83
Ph: 9841674632 / 9841038333
revaidhyanathan@gmail.com

---

கோவூர் அருகாமையில் உள்ள தொழிற்கூடத்திற்கு
## BILL COLLECTOR
தேவை உடனே அணுகவும்
CALL @
89258 18582

---

## ஆட்கள் தேவை
பிரபலமான MNC கம்பெனிக்கு
CNC-VMC ஆப்ரேட்டர்
டர்னிங் ஆப்ரேட்டர்
புரோக்கிராம்மர் & செட்டர்
பணிபுரியும் இடம் : காஞ்சிபுரம்
7010776807

---

## ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
பல ஜவுளிக்கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
எம்.சி. ரோடு, வண்ணாரப்பேட்டை
சென்னை - 600 021.
போன் : 25901771-74
www.facebook.com/sriveerascreations www.sriveeras.com

---

## URGENTLY REQUIRED
- AC DUCTMAN
- AC TECHNICIAN
- CHILLER ELECTRICIAN
- COPPER PIPE BRAZING
- PIPE FITTER
- PIPE WELDER
- MECHNICAL FITTER
- HVAC PROJECT MANAGER
- MEP HELPER

Last drawn Salary 20% hike

RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123
enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
90439 49587,78458 29587

---

SRM

தங்கி பணிபுரிய
## பெண்கள் தேவை
வயது : 25 முதல் 45 வரை

கார்ப்பரேட் ஹவுஸ் கீப்பிங் சூப்பர்வைசர்
சம்பளம் :ரூ. 30,000/-
கல்வித்தகுதி : Any Degree

ஹவுஸ் கீப்பிங் ஸ்டாப்
சம்பளம் :ரூ. 20,000/-
கல்வித்தகுதி : 12th Std

Call : 99400 77012
044 - 27453147

---

## ஆட்கள் தேவை
எங்கள் உணவகத்திற்கு அனுபவமுள்ள
தென் இந்திய சமையல்காரர் தேவை.

காலை உணவு/ஸ்நாக்ஸ்:
இட்லி, தோசை (பிளைன், மசாலா, ரவா), வடை (மெது வடை, மசாலா வடை), உப்புமா, பொங்கல், பேசரட்டு, பரோட்டா.

சம்பளம், உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

முகவரி:
MCN நகர் விரிவாக்கம்,
துரைப்பாக்கம், சென்னை - 97.
தொடர்புக்கு: 9500549097

---

## கடன் தேவைகளுக்கு
- ரூ.5,000 முதல் ரூ.2,00,000 வரை ஆதார், பான்கார்டு & பேங்க் பாஸ்புக் இருந்தால் ஒரே நாளில் மாத தவணை முறையில் உடனடி லோன் பெறலாம்.
- அனைத்து வகையான EMI Card / Credit Card க்கு உடனடி கடன்.
- தனிநபர் கடன், தொழிற்கடன், வாகனக்கடன், சொத்தின் பெயரில் பேங்க் & பைனான்ஸில் கடன் உதவி செய்து தரப்படும்.

EASY FINANCIAL SERVICES
97, 5th St. Ext., DEVA ANBU SELVAM COMPLEX
GANDHIPURAM, COIMBATORE - 12.
99408 50431

---


## உடனடி கடன் உதவி
QUICK PROCESS

- தனிநபர் கடன் வியாபாரக் கடன்
ஆதார் கார்டு, பேன் கார்டு போதும்
10 ஆயிரம் முதல் 2 லட்சம் வரை
ஒரே நாளில் கடன் உதவி
- சிபில் 750 மேல் இருந்தால் ஆதார் கார்டு, பேன் கார்டு போதும் 5 லட்சம் வரை உடனடி கடன்
- பென்சன்தாரர் கடன் மத்திய மாநில அரசு
- அரசு ஊழியர் & தனியார் மாத சம்பளதாரர் கடன் (சிபில் தேவையில்லை)
- வீடு, காலி இடம், சொத்துக் கடன்
- அனைத்து EMI Card (டிஜிட்டல்) மற்றும் Credit Card Swipe க்கு

உடனடி பணம்
TEJAAS CREATIONS
Near Chennai Silks, Crosscut Road
Gandhipuram, Coimbatore - 12
6385712034
முன்பணம் தேவையில்லை



# பல்சுவை களஞ்சியம்



# மருமகனுக்கு மரண தண்டனை வழங்கிய மன்னர்



சேதுநாட்டை (ராமநாதபுரம் பகுதி) கி.பி.1710 முதல் 1725 வரை ஆட்சி செய்தவர் திருவுடையத்தேவர் என்ற முத்து விஜயரகுநாத சேதுபதி. இவர் ராமநாதபுரம் அரண்மனையில் உள்ள ஓவியங்களை வரையச் செய்தவர். ராமாயண காவியத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், அதில் வரும் காட்சிகளைக் குறிப்புகளுடன் ஓவியங்களாகச் சுவர் முழுக்கவும் வரையச் செய்தார். ஏறத்தாழ முந்நூற்று ஐம்பது ஆண்டுகள் ஆகியும், இந்தச் சுவர் ஓவியங்கள் இன்றும் பொலிவுடன் காட்சி அளிக்கின்றன. ராமேஸ்வரம் தீவில் கோதண்டராமர் கோயிலைக் கட்டிய இவர், கோயிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு இலவசப் படகுப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். சேதுநாட்டிற்கு உட்பட்ட ராமேஸ்வரம் பகுதிக்கு, தன் உறவினரான தண்டத்தேவர் என்பரை நிர்வாகியாக்கினார் சேதுபதி. அவருக்கே தன் இருமகள்களான சீனி நாச்சியார், லட்சுமி நாச்சியாரை மணம் முடித்துக் கொடுத்தார். ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு, போக்குவரத்து, தங்குமிடம் ஆகியவற்றைச் செய்து கொடுக்கும் பொறுப்பை மருமகனிடம் ஒப்படைத்தார். ஒரு கட்டத்திற்குப் பிறகு, கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் படகு சவாரிக்காகக் கட்டணம் வசூலித்தார் மருமகன். இந்தச் செய்தி விஜய ரகுநாத சேதுபதி மன்னருக்கு எட்டியது. மருமகன் என்றும் பாராமல், அவருக்கு மரண தண்டனை வழங்கினார். அவரின் மகள்கள் இருவரும் கணவனை எரித்த தீயில் புகுந்து உடன்கட்டை ஏறினர்.அவர்களின் நினைவாகப் பின்னர் மடங்களும் ஊர்களும் ஏற்படுத்தப்பட்டன. அவைதான் தற்போதும் அக்காள் மடம், தங்கச்சி மடம் என்ற பெயர்களில் ஊர்களாக உள்ளன. இந்த மன்னர், சேது பகுதியில் ராஜசிங்கமங்கலம், பாம்பன், கமுதி ஆகிய ஊர்களில் மூன்று கோட்டைகளைக் கட்டினார். ஆங்கிலேயர் காலத்தில் சேதுநாட்டில் இருந்த பல கோட்டைகள் இடிக்கப்பட்டன. அவற்றில் இந்தக் கோட்டைகளும் அடங்கும்.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

**நிலா**
குளிர்ச்சி தரும்
நீ காதலர்களின்
காதல் அல்லவா?

**சூரியன்**
பூமியின் இருள் நீக்கி
ஒளிரச் செய்யும் பகலவன்

**மரணம்**
ஒவ்வொரு மனிதன்
வாழ்விலும் வாழும் கடைசி
நொடி



**பூமி**
பொருமையின் பொருளாய்
விளங்கும் தனிப் பெருமை

**காற்று**
கண்ணிற்கு தெரியாத
போதும்
கடைசிவரை தேவைப்படும்

**நீர்**
நீ இன்றி உலகேது
நீதானே அடிப்படை
உயிர்த்தேவை

**மேகம்**
இதன் அழுகையில்தான்
சிரிக்கும் விவசாயம்

**மரம்**
இருக்கும் இடத்திலேயே
இன்றயமையா பயன் தரும்

**ஆகாயம்**
பூமித்தாயின் போர்வை நீ!
நில வண்ணத்தில்
மின்னும் அழகி

**நெருப்பு**
சுடும்! கவனமாக
பயன்படுத்த உணவ
தேவையில் நிறைவு தரும்

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

# மீம்ஸ்










| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



# ஜோக்ஸ்

சில டாக்டருக்கும் சில ஆக்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
இரண்டு பேரும் தியேட்டருக்கு வரவழைச்சு தான் கொல்லுவாங்க!

--------------------

சிவகாசிக்கும் நெய்வேலிக்கும் என்ன வித்தியாசம்?
சிவகாசில காச கரியாக்குவாங்க. நெய்வேலிலே கரிய காசாக்குவாங்க!

--------------------



FILE க்கும் PILE க்கும் என்ன வித்தியாசம்?
FILES அ உட்கார்ந்து பார்க்கணும். PILES க்கு பார்த்து உட்காரணும்.

--------------------

செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனுக்கு கால் இல்லேன்னா பேலனஸ் பண்ண முடியாது. செல் போன்ல பேலன்ஸ் இல்லேன்னா கால் பண்ண முடியாது.

--------------------

ஒவ்வொரு இளைஞனின் மன உளைச்சலுக்கும் காரணம்?
மதிப்பெண்ணும் மதிக்காத பெண்ணும்!

--------------------

வசதி இல்லாதவன் ஆடு மேய்க்கிறான்! வசதி உள்ளவன் நாய் மேய்க்கிறான்!

--------------------

ஆண்களை அதிக தூரம் நடக்க வைக்கும் விஷயங்கள் ரெண்டு?
ஒன்று பிகர், மற்றொன்று சுகர்!

--------------------

கணிப் பொறிக்கும் எலிப் பொறிக்கும் என்ன வித்தியாசம்???
கணிப் பொறியில் எலி வெளியே இருக்கும். எலிப் பொறியில் எலி உள்ளே இருக்கும்..

--------------------

சிரித்து சிந்தியுங்கள் இல்லைன்னா சிந்தித்து சிரியுங்கள்.....



# பன்முகம்



## மனதுக்கு சக்தி கொடுக்கும் மந்திரம்



வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். அவ்வப்போது மனம் துவண்டு விடலாம். அப்போதெல்லாம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி, கீழ்க்கண்ட மந்திரச் சொற்களில் பொருத்தமானவற்றை அடிக்கடி வாய்விட்டு உச்சரித்துப் பழகுங்கள். மனம் நிமிரும். சக்தி பெருகும். வெற்றி நெருங்கும்.

1. போனது போச்சு, ஆனது ஆச்சு, இனி என்ன ஆகணும்? அதைப் பேசு.
2. நல்ல வேளை. இதோடு போச்சுன்னு திருப்திப்படு.
3. உடைஞ்சா என்ன? வேற வாங்கிட்டா போச்சு.
4. பணம் தானே போச்சு. கை கால் நல்லா இருக்குல்ல. மனசுல தெம்பு இருக்குல்ல..
5. சொல்றவங்க ஆயிரம் சொல்வாங்க. எல்லாமே சரின்னு எடுத்துக்க முடியுமா?
6. இதெல்லாம் சப்ப மேட்டரு. இதுக்குப் போயா கவலைப்படறது.
7. கஷ்டம் தான், ஆனா முடியும்...
8. நஷ்டம் தான், ஆனா மீண்டு வந்திடலாம்.
9. இதில விட்டா அதில எடுத்திட மாட்டனா?
10. விழுந்தா என்ன? எழுந்திருக்க மாட்டனா?
11. விழுந்தது விழுந்தாச்சு. எழுந்திருக்கிற வழியைப் பாரு...
12. உட்கார்ந்து கிட்டே இருந்தா என்ன அர்த்தம்? எழுந்திரு. ஆக வேண்டியதைப் பார்...
13. இந்த வழி இல்லேன்னா வேற வழி இல்லியா?
14. இப்பவும் முடியலியா? சரி. இன்னொரு வாட்டி ட்ரை பண்ணு.
15. முடியுமான்னு நினைக்காதே. முடியணும்...னு நினை...
16. கிடைக்கலியா, விடு. வெயிட் பண்ணு. இதை விட நல்லதாகவே கிடைக்கும்.
17. அவன் கதை நமக்கெதுக்கு. நம்ம கதையைப் பாரு...
18. விட்டுத் தள்ளு. வெட்டிப் பேச்சு எதுக்கு? வேலை தலைக்கு மேலே இருக்கு.
19. திருப்பித் திருப்பி அதையே பேசாதே. அது முடிஞ்சு போன கதை...
20. சும்மா யோசிச்சுக் கிட்டே இருக்காதே. குழப்பம் தான் மிஞ்சும். சட்டுனு வேலையை ஆரம்பி.
21. உலகத்துல யாரு அடிபடாதவன்? யாரு ஏமாறாதவன்? அடிபட்டாலும் ஏமாந்தாலும், அவனவன் தலை தூக்காமலா இருக்கான்?
22. கஷ்டம் இல்லாத வாழ்க்கை எது? அது பாட்டுக்கு அது. வேலைபாட்டுக்கு வேலை.
23. எப்பவுமே ஜெயிக்க முடியுமா? அப்பப்ப தோத்தா அது என்ன பெரிய தப்பா?
24. நாலு காசு பார்க்கின்ற நேரம். கண்டதைப் பேசிக் காலத்தை கழிக்கலாமா?

## மாலைக்கண் நோயை குணமாக்கும் செவ்வாழைப்பழம்



கண் பார்வையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு செவ்வாழை சிறந்த மருந்தாகும். செவ்வாழையில் உள்ள பீட்டா கரோட்டீன் கண் நோய்களை குணமாக்கும். செவ்வாழையில் உயர்தர பொட்டாசியம் உள்ளது. இது சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதை தடுக்கிறது.

இரவு உணவிற்கு பிறகு தொடர்ந்து 40 நாட்கள் செவ்வாழை சாப்பிட்டு வந்தால் மாலைக்கண் குணமாகும். சொறி, சிரங்கு, தோலில் ஏற்படும் வெடிப்பு போன்ற தோல் வியாதிகளுக்கு செவ்வாழை மிக சிறந்த நிவாரணம் தரும்.

செவ்வாழையில் வைட்டமின் 'சி' அதிகம் உள்ளது. செவ்வாழையில் ஆண்டி ஆக்ஸிடென்ட் காணப்படுகிறது. இதில் 50 சதவிகிதம் நார்ச்சத்து காணப்படுகிறது.

சிவப்பு வாழைப்பழங்கள் பொட்டாசியம் நிறைந்தவை. இவை உடலின் வழக்கமான கழிவு வெளியேற்றும் வேலைக்கு அவசியம். பொட்டாசியம் சிறுநீரக கற்கள், இதய நோய் மற்றும் புற்றுநோய் உருவாவதை தடுக்கிறது. இது எலும்பு ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது, மேலும் கால்சியம் தக்க வைத்து உதவுகிறது.

பல் வலி, பல்லசைவு, போன்ற பல வகையான பல் வியாதிகளையும் செவ்வாழைப்பழம் குணமாக்கும். பல் தொடர்புடைய நோய்கள் ஏற்பட்டால் தொடர்ந்து 21 நாட்களுக்கு செவ்வாழை சாப்பிட்டு வர ஆடிய பல் கூட கெட்டிப்படும்.

சிவப்பு வாழைப்பழம் ஆண்கள் விந்தணு எண்ணிக்கையை அதிகரிப்பதாக கூறப்படுகிறது. இந்த நம்பிக்கையை ஆதரிக்க பல ஆய்வுகள் சாதகமாக முடிவுகள் தெரிவிக்கின்றது. வாழைப்பழங்களில் பி வைட்டமின்கள் மற்றும் புரோமைன் என்சைம் ஆகியவை விந்தணு எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. செவ்வாழை வயிற்றில் உள்ள அமிலத்தன்மையின் அளவை குறைக்க உதவுகிறது. மேலும் வயிறு எரிச்சலும் குறைகிறது.

## பழச்சாறு சிறந்ததா.. பழம் சிறந்ததா..?



பழங்களில் உள்ள சத்துக்களுக்காக அதை உண்பவர்களை பருகுபவர்களை விடவும் அதன் இனிப்பு சுவைக்காகவும் தித்திப்புக்காகவும் தான் அதிகம் விற்கின்றன. இது தான் உண்மை.

பழங்களில் இனிப்பு குறைவான பழங்களுக்கு மவுசு குறைவு தான்.

எனினும் நீரிழிவு நோயர்கள் கூட இனிப்பான வாழைபழம், மாம்பழம், பலாப்பழம், பேரீச்சம் பழம் என்று உண்பது இதனால் தான்.

இனிப்பான ஆப்பிள் பழத்தில் உள்ள அத்தனை சத்துகளும் இனிப்பு குறைவான கொய்யா காயில் உண்டு.

பழங்களில் உள்ள அத்தனை ஊட்டச்சத்துகளும் நன்மைகளும் காய்கறிகளிலும் உண்டு என்பதை நாம் அறிய வேண்டும்.

பழங்களை நார்ச்சத்துக்காக சாப்பிடுகிறேன் என்றால் அதே நார்ச்சத்து காய்கறி கீரைகளிலும் உண்டு.

அதே பழங்களை பழக்கூழாக்கி பருகும் போது நார்ச்சத்து இன்னும் குறைந்து விடுகிறது. உதாரணம் ஆரஞ்சு பழத்தின் நார்ச்சத்து 3.1 கிராம் என்றால் ஆரஞ்சு பழச்சாறின் நார்ச்சத்து 0.5 கிராம் என்று ஆறு மடங்கு குறைந்து விடுகிறது.

இதற்கடுத்தபடியாக இனிப்பு தித்திப்பு சுவை கொண்ட அனைத்து விசயங்களிலும் நம் மூளை அதற்கு அடிமை என்பதால் வரம்பு மீறினாலும் மூளை கண்டிக்காது.

அதுவே உப்பு காரம் புளிப்பு போன்றவை இத்தகைய வரம்பு மீறினால் உடனடியாக பிரச்சனைகளை கொண்டு வந்து விடுகின்றன

உதாரணம் குளாப் ஜாமூன் செய்யும் போது வழக்கமாக போட வேண்டிய பத்து ஸ்பூன் சீனிக்கு பதிலாக பதினைந்து ஸ்பூன் போட்டாலும் யாரும் குறை கூற மாட்டார்கள்

ஆனால் அதுவே சோற்றில் எப்போதும் போடும் உப்பை விட சற்று அதிகமாகப் போட்டாலும் உடனே மூளை கடுப்பாகிவிடும்.

வரம்பு மீறுதல் என்பது பழங்களை விட பழச்சாறுகளில் எளிதில் நடக்கும்.

உதாரணம் கரும்பை கடித்து சாப்பிடு என்று கூறினால் ஒரு சிறுவனால் அதிகபட்சம் அரைக் கரும்பைக் கூட முழுவதுமாக ஒரு சமயத்தில் சாப்பிட முடியாது .

ஆனால் அதுவே கரும்புச்சாறாக்கும் போது ஒரு முழுக் கரும்பும் சாறாகி ஒரு நிமிடத்தில் அவனால் குடித்து விட முடிகிறது.

ஒரு ஆப்பிள் பழத்தை துண்டுகளாக வெட்டும் போது எட்டு துண்டுகள் கிடைத்தால் அதை இரண்டு சிறுவர்களுக்கு ஸ்நாக்ஸாக கொடுக்கலாம்.

ஆனால் அதே ஆப்பிளை பழச்சாறாக்கினால் இரண்டு பழங்கள் போட்டு ஜூஸ் ஆக்க வேண்டும். இதில் பாலும் சீனியும் சேர்க்க வேண்டியிருக்கிறது .

பழமாக சாப்பிடும் போது மென்று மெதுவாக சாப்பிடுவதாலும் பழங்களின் திரவத்தன்மை திடமாக( VISCOSITY MORE) இருக்கும் என்பதால் வயிற்றில் நீண்ட நேரம் இருந்து பிறகு கீழிறங்கும்.

ஆனால் அதுவே பழச்சாறு நீர் போல இருப்பதால் சட்டென ஊற்றினால் விரைவில் வயிற்றை விட்டு இறங்கி விடும். இதனால் இண்ஸ்டண்ட் எனர்ஜி கிடைக்குமே தவிர நீண்ட நேரம் பசி அடங்காது. சீக்கிரமே அடுத்த ஸ்நாக்ஸ் மற்றும் உணவை கேட்கும் சூழல் ஏற்படும் .குழந்தைகளுக்கு சிறார்களுக்கு வளர் இளம் பருவத்தினருக்கு பேக்கரி ஸ்நாக்ஸ்களுக்கு பதிலாக பழங்களை உண்ணக் கொடுப்பது நல்லது.


பழங்களை பழச்சாறாக்கி அடிக்கடி பருகுவது நன்மையன்று. அதிலும் சீனி நாட்டு சர்க்கரை தேன் போன்றவற்றை சேர்த்து பருகுவது நீரிழிவு / ஃபேட்டி லிவர் / பிசிஒடி / உடல் பருமன் போன்ற பிரச்சனைகளை வரவழைக்கலாம்.

இண்ஸ்டண்ட் எனர்ஜி பெற வேண்டிய நேரங்களில் பழச்சாறுகள் கை கொடுக்கும். அப்போதும் இனிப்பு கலப்பது நன்மையன்று.

நீரிழிவு நோயர்/ உடல் பருமன்/ பிசிஒடி/ ரத்த கொதிப்பு இருப்பவர்கள் இனிப்பு சுவை கொண்ட பழங்களை தவிர்த்து இனிப்பு சுவை குறைந்த பழங்களை விரும்பிச் சாப்பிடலாம்.

இவர்களுக்கு பழங்களில் உள்ள அத்தனை சத்துகளும் காய்கறிகளிலும் உண்டு. எனவே காய்கறிகள் சாப்பிடலாம்.

## கடவுள் அங்கே தான் இருக்கிறார்



கடவுள் இந்த உலகத்தைப் படைத்துவிட்டு, இங்கேயே தங்கிவிட்டார்.

அப்பொழுது தான் அவர் செய்த தவறு அவருக்கே புரிந்தது. தினம் எதாவது புகார் கொடுக்க மனிதர்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.

இரவு, பகல் என்ற வித்தியாசம் இல்லை. சில பேர்கள் வந்து, என் பயிர் காய்கிறது. இன்று எனக்கு மழை தேவை. அடுத்து சிலர் வந்து இன்று மழை கூடாது. அது என் வேலையை பாதித்து விடும். நான் களிமண் பானை செய்து சுடுகிறேன்.இப்படி நிறைய புகார்கள் முரண்பாடாக வந்து கொண்டே இருந்தது.

கடவுள் கிட்டத்தட்ட பைத்திய நிலைக்கே சென்றுவிட்டார். அவருக்குச் சரியான தூக்கமும் இல்லை. எல்லாருடைய ஆசைகளையும், தேவைகளையும் அவரால் நிறைவேற்ற முடியவில்லை. ஒன்றுக்கு ஒன்று முரணாகவே இருந்தது .

பிறகு ஒரு நாள், தன் மந்திரி சபையைக் கூட்டி, என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டார்.

அதில் ஒரு சிலர், இது ஒன்றும் பெரிய பிரச்சனை இல்லை . நீங்கள் இமயமலைக்குச் சென்றுவிடுங்கள். அங்கு வந்து யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள் என்றார்கள்.

கடவுள் சிறிது யோசனை செய்து அது சரி வராது. எட்மண்ட் ஹில்லாரியும், டென்சிங்கும் அங்கு வர இருக்கிறார்கள். பிறகு ஒவ்வொருவராக அங்கேயும் வர ஆரம்பித்து விடுவார்கள்.

வேறு யோசனை சொல்லவும் என்றார். அடுத்து ஒரு சிலர், சந்திரனுக்குச் செல்லலாமே? என்றார்கள். கடவுள் அதற்கும் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஆளைத் தயார் பண்ணிக் கொண்டிருகிறது என்றார்.

சரி எதாவது தொலைதூர நட்சத்திரத்திற்குச் செல்லலாம் என்றார்கள் மற்றும் சிலர்.

கடவுள் இதெல்லாம் நிரந்தர தீர்வு ஆகாது. எனக்கு நிரந்தரமாக இந்த மனிதத் தொல்லையில் இருந்து விடுபட வேண்டும் என்றார்.

பிறகு , கடவுளுடைய பழைய வேலையாள் வந்து, மெல்ல அவர் காதுகளில் ஏதோ கிசுகிசுத்தார் . உடனே கடவுள் முகம் மலர்ந்து, ரொம்ப சரி, அப்படித்தான் செய்ய வேண்டும் என்று ஆமோதித்தார்.

அந்தக் கிழவன் சொன்னது என்னவென்றால்,

மனிதனால் அடைய முடியாத இடம் ஒன்று இருக்கிறது. அது வேறு எங்கேயும் இல்லை. அவனுக்குள்ளேயே இருக்கிறது. அவனுக்குள் மறைந்து கொள்ளுங்கள் என்பதே. அதிலிருந்து கடவுள் அங்கேயேதான் மறைந்து கொண்டு இருக்கிறார். மனிதன் நினைக்காத இடம் அது தான்.

மிக அருகில் உள்ளதை, மக்களின் அகங்காரம் ஏறெடுத்தும் பார்க்காது. அதில் அதற்கு சுவாரசியமும் இல்லை. ஆகவேதான் மக்கள் உண்மையை தவற விட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

## இந்தியாவின் மிகப்பெரிய காடுகள்

### இந்தியாவில் உள்ள மிகப்பெரிய ஐந்து காடுகள்...



1. மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தரவனக் காடுகள்... இந்தக் காடுகளில் தான் அதிகமாக புலிகள் வாழ்கிறது. இது பசுமை மாறா காடுகளாகும். இந்த காடுகளை ஒட்டிய ஆற்றுப்பகுதியில் தான் அதிகமாக சணல் பயிரிடப்படுகிறது.

2. மேகாலயா ஷில்லாங் பகுதிகளில் உள்ள மோப்லாக் டேக் ரெஸ்ட் காடுகள்... வடகிழக்கு இந்தியாவில் உள்ள பசுமை மாறா காடுகள். இவை உலகிலேயே அழகான அருவிகளைக் கொண்டவை.

3. தமிழ்நாட்டில் சிதம்பரம் அருகில் பிச்சாவரத்தில் உள்ள மாங்குரோவ் சதுப்பு நிலக்காடுகள் இவை 25 சதுர கிலோ மீட்டருக்கு மேல் பறந்து விரிந்து காணப்படுகிறது... ஆசியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய சதுப்பு நிலக்காடுகள் தமிழ்நாட்டில் தான் உள்ளன.

4. குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் காடுகள் இந்தியாவிலேயே இந்தக் காடுகளில் மட்டும்தான் சிங்கம் வாழ்கின்றன.

5. நீலகிரி மலைக் காடுகள் இந்தக் காடுகள் பல்லுயிர்கள் வாழும் இடமாக உள்ளன. நீலகிரி மலைக் காடுகள் 100 சதுர கிலோ மீட்டருக்கு மேல் பரந்து விரிந்து காணப்படுகின்றன.

## சென்னை உயர்நீதிமன்ற நீபதிகள் ஆய்வு



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் அருகே வணிகவளாகம் கட்டுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் நேற்று சென்னை உயர்நீதிமன்ற நீபதிகள் ஆர்.சுரேஷ்குமார், எஸ்.சவுந்தர் ஆய்வு மேற்கொண்டனர்.

## திருமாவளவனுக்கு திக பொதுச் செயலாளர் கி.வீரமணி நினைவுப்பரிசு



செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் நடந்த திராவிட கழகத்தின் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கேற்ற விசிக தலைவர் திருமாவளவனுக்கு திக பொதுச் செயலாளர் கி.வீரமணி நினைவுப்பரிசு வழங்கினார்.

## காதி இந்தியா நிறுவனத்தில் பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் கதர் ஆடைகளை வாங்கினார்



பிரதமர் வேண்டுகோளின்படி சென்னை காதி இந்தியா நிறுவனத்தில் பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் கதர் ஆடைகளை வாங்கினார்.

## நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்



மணவாளக்குறிச்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை கலெக்டர் அழகுமீனா ஆய்வு செய்தார்.மாநில உணவு ஆணையத்தலைவர்சுரேஷ் ராஜன் உடன்உள்ளார்.

## ஸ்ரீகேசவர் மற்றும் ஸ்ரீ பேயாழ்வார் பவித்ர உற்சவம்



நேற்று 3ம் நாள் காலை எங்களது ஸ்ரீகேசவர் மற்றும் ஸ்ரீ பேயாழ்வார் பவித்ர உற்சவம் மயிலை அடிக்கேசவப் பெருமாள்.

## கவரப்பேட்டை பகுதியில் கும்மிடிப்பூண்டி - பொன்னேரி தொகுதிக்குட்பட்ட பாக பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் திமுக துணை பொது செயலாளர் ஆர் ராசா பங்கேற்பு

**கும்மிடிப்பூண்டி, அக். 6:**

கும்மிடிப்பூண்டி அடுத்த கவரப்பேட்டை பகுதியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கும்மிடிப்பூண்டி - பொன்னேரி சட்டமன்ற பகுதியில் பாக பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் எம்எஸ்கே. ரமேஷ்ராஜ் தலைமை தாங்கினார்.

மாவட்ட அவைத் தலைவர் மு. பகலவன், தெற்கு ஒன்றிய செயலாளர் கி.வே ஆனந்தகுமார் ஆகியோர் வரவேற்றார்கள்.

தொகுதி பொறுப்பாளர்கள் கவி கணேசன், சுரேஷ், மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் டி.ஜெ.கோவிந்தராஜன், சி. எச். சேகர், ரமேஷ், உமாமகேஷ்வரி, ரவி, கதிரவன், தமிழரசு, அன்புவாணன், முர்த்தி, குணசேகரன், வெங்கடாசலபதி, லோகேஷ், உள்ளிட்டோர் முன்னிலை





வகித்தனர்.


தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராக நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக கழகத்தின் துணை பொது செயலாளர் ஆர் ராசா கலந்து கொண்டு கும்மிடிப்பூண்டி பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பூத்துக் கழக பொறுப்பாளர்கள் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அவரால் ஒதுக்கப்பட்ட பூத்துகளில் திறம்பட பணி செய்து திமுக அமோக வெற்றி பெற செய்ய வேண்டுமென பாடுபட வேண்டும் எனவும் மத்திய காலம் பாஜக அரசு போலி வாக்காளர்களையும் தேர்தல் கமிஷன்களையும் கையில் வைத்துக்கொண்டு மாநிலங்களில் வெற்றி பெற்று வருகிறது அதுபோன்ற வாக்குத்திருட்டுகள் தமிழகத்தில் நடக்கக்கூடாது என்றால் அனைத்து பொறுப்பாளர்களும் கண் விழித்து பணியாற்ற வேண்டுமென பேசினார் இறுதியில் மாவட்ட துணை செயலாளர் எம். எல். ரவி நன்றி உரையாற்றினார்.

## தியாகி கொடிகாத்த குமரனுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி



சென்னிமலை மேலப்பாளையம் பகுதியில், தியாகி கொடிகாத்த குமரனுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணியினை, அமைச்சர்கள் முத்துசாமி, சுவாமிநாதன்,கலெக்டர் கந்தசாமி, சந்திரகுமார் எம்எல்ஏ, பிரகாஷ் எம்.பி. துவக்கி வைத்தனர்.

## துளசி பூக்கள் அலங்காரத்துடன வீர ஆஞ்சநேயர்



ஜோலார்பேட்டை அருகே அம்மையப்பன் நகர்ப் பகுதியில் உள்ள கோவிலில் துளசி பூக்கள் அலங்காரத்துடன வீர ஆஞ்சநேயர்.

## இலவச மருத்துவ முகாம்



திருவெறும்பூர் தொகுதி கூத்தப்பாரில் அன்பில் அறக்கட்டளை சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாமினை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

## "நலன் காக்கும் ஸ்டாலின்" முகாம்



சென்னை அருகே கோவூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "நலன் காக்கும் ஸ்டாலின்" முகாமினை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## குருவரெட்டியூர் கிளை நூலகத்தில் ஈரோடு கலெக்டர் கந்தசாமி ஆய்வு



குருவரெட்டியூர் கிளை நூலகத்தில் ஈரோடு கலெக்டர் கந்தசாமி ஆய்வு மேற்கொண்டு, வாசகர்களிடம் கலந்துரையாடினார்.

## தலைக்கவசம் அணிந்த வாகன ஓட்டுநர்களை கலெக்டர் கந்தசாமி பாராட்டி, இனிப்புகள் வழங்கினார்



சென்னிமலை பேருந்து நிலையம் அருகில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தலைக்கவசம் அணிந்த வாகன ஓட்டுநர்களை கலெக்டர் கந்தசாமி பாராட்டி, இனிப்புகள் வழங்கினார்.

## ரவுசு மணி

பொய்கள்
பல நாள்
பல்லக்கில்
பவனி வரும்
ஆனால்
உண்மை
ஒருநாள்
அலங்கார
தேரில்
வரும்.



ராஜகோபாலன்.J
சென்னை 18

## ஆர் கே நகர் 1 வது சர்க்கிளில் இளைஞர் காங்கிரசார்





வடசென்னை கிழக்கு மாவட்டம், மாவட்ட தலைவர் திரவியம் முன்னிலையில் ஆர் கே நகர் 1 வது சர்க்கிளில் புதுவண்ணாரப்பேட்டை மார்க்கெட் பகுதியில் சர்க்கிள் பொறுப்பாளர் M மோகன்குமார் தலைமையில் இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் S தீபக், தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் வெங்கடேசன் ,வட்ட தலைவர்கள் நியாஸ், சந்திரன் நிர்வாகிகள் ராஜா, ரகு, கோடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சர் கோப்பைக்கான கால்பந்து விளையாட்டு போட்டி



தஞ்சாவூரில் முதலமைச்சர் கோப்பைக்கான கால்பந்து விளையாட்டு போட்டிகளை அமைச்சர் கோவி.செழியன் துவக்கி வைத்தார். கலெக்டர் பிரியங்கா பங்கஜம், உடன் உள்ளார்.

# சுற்றுலா: பருவமழை காலத்தில் மலையேற்றம் செய்யும்போது கவனிக்க வேண்டியவை!



பருவ மழை என்பது பயணிகள் தங்கள் அன்றாட வாழ்க்கையின் சலசலப்பில் இருந்து விடுபட உற்சாகமான பருவமாகும். இந்த சமயத்தில் சாகச ஆர்வலர்கள் பல மலைகள் மற்றும் மலைத்தொடர்களில் மலையேற்றம் செய்வதற்கு விரும்புகிறார்கள். மழைக்காலங்களில் மலையேற்றம் செய்ய விரும்புவதன் காரணங்கள்- குறைவான கூட்டம், புதிய பசுமையான நிலப்பரப்புகள், வியத்தகு வானிலை மற்றும் மேக விளையாட்டு, மலிவான தங்கும் இடங்கள் ஆகியவையே காரணங்களாகும்.

இருப்பினும் மழைக்காலங்களில் மலையேற்றம் செய்வது வேடிக்கையாக இருந்தாலும், கொஞ்சம் ஆபத்தானதாகவும் இருக்கலாம். எனவே அதற்குத் தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொண்டு செல்வது நல்லது.

மழைக்காலத்திற்கேற்ற வசதியான, எளிதில் உலரக்கூடிய ஆடைகளை எடுத்துச் செல்லவும். எப்போதும் மழைக்கால உபகரணங்களை நீர் புகா கவர்கள் எடுத்துச்செல்லவும்.

பருவ மழையின்போது குளிர் மற்றும் காற்றில் இருந்து பாதுகாக்க நல்ல தரமான மழைக்கோட்டுகள் அல்லது பொன்சோஸ் (PONCHOS) அவசியம். (நீர் புகார் தன்மை கொண்ட ஒரு வகை மேலங்கி). இது உடலை மறைத்து மழையிலிருந்து பாதுகாக்கிறது.

எப்போதும் பவர் பேங்குகள் மற்றும் ஆஃப்லைன் வரைபடங்களை எடுத்துச் செல்வது சிறப்பு.

மலையேற்றத்தின்போது பாறைகள் வழுக்கும் மற்றும் பாதை சேறும் சகதியுமாக இருக்கும். எனவே கவனமாகவும், மெதுவாகவும் நடக்கவும். வழுக்காத, நன்கு கிரிப் கொடுக்கும் மலையேற்ற காலணிகளை அணியவும்.

அட்டைப் பூச்சிகளை சமாளிக்க உப்பு அல்லது தெளிப்பான்களை எடுத்துச் செல்லவும்.

கடினமான பாதைகளுக்கு உள்ளூர் வழிகாட்டிகளை பின்பற்றவும். அனுபவம் வாய்ந்த உள்ளூர் வழிகாட்டியை உடன் அழைத்து செல்லவும். அவர்கள் பாதையை நன்கு அறிந்திருப்பார்கள் மற்றும் அவசர காலங்களில் உதவவும் செய்வார்கள்.

நிலச்சரிவுகள் ஏற்பட்டால் இமய மலைப் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கவும். சில பகுதிகள் நிலச்சரிவுகளை எதிர் கொள்ளலாம் அல்லது சாலைகள் மூடப்படலாம்.

முதலுதவி பெட்டி, போதுமான தண்ணீர், உணவு மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களை எடுத்துச்செல்வது அவசியம்.

பயணம் செய்வதற்கு முன்பு வானிலை அறிக்கையை சரி பார்க்கவும். அதிக மழையின்போது சில மலையேற்றப் பாதைகள் ரத்து செய்யப்படலாம். எனவே வானிலை முன்னறிவிப்பை தெரிந்து கொண்டு செல்வது நல்லது.

திடீர் நிலச்சரிவுகள் அல்லது வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ள ஆபத்தான பகுதிகளை மழைக்காலங்களில் தவிர்ப்பது நல்லது.

தனித்து மலையேற்றம் செல்வதைவிட நண்பர்களுடன் குழுவாகப் பயணம் செய்வது பாதுகாப்பு மற்றும் சுவாரஸ்யம் நிரம்பியதாக இருக்கும்.

மலையேற்றத்திற்கு முன்பு நம் பயணத் திட்டத்தை குடும்பத்தில் உள்ள மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது நல்லது.

முக்கியமாக நம் உடல் நலத்தை கவனத்தில் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். உடல்நிலை சரியில்லாத பொழுது மலையேற்றம் செய்வதை தவிர்க்கவும்.

பெரும்பாலான மலையேற்ற சாகசங்கள் பிரதான நகரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள பாதைகளை தேர்ந்தெடுப்பதை உள்ளடக்கி இருப்பதால், பருவமழை காலங்களின் பொழுது தேவை ஏற்பட்டால் அனைத்து அவசர தொடர்புகள் மற்றும் எண்களையும் குறித்து வைத்துக்கொள்வது அவசியம்.

பருவ மழை காலத்தில் மலையேற்றம் செய்வதற்கு முன்பு அந்த இடத்திற்கு பொருத்தமான நேரத்தை (பார்வையிட சிறந்த நேரம்) பற்றி அறிந்திருப்பது அவசியம்.

பகல் நேர மலையேற்றம் பொதுவாக இரவு பயணத்தைவிட பாதுகாப்பானது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் காலி பணியிடங்கள்

இந்திய சாலை போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் காலியாக உள்ள பல்வேறு பணியிடங்கள் தகுதியும் ஆர்வமும் உள்ள பொறியியல் பட்டதாரிகளிடம் இருந்து வரும் 7 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: Senior AI Engineer காலியிடங்கள்: 2

சம்பளம்: மாதம் ரூ. 2,50,000

பணி: AI Engineer காலியிடங்கள்: 3

சம்பளம்: மாதம் ரூ.2,00,000 தகுதி: மேற்கண்ட பணிகளுக்கு Science, Technology, Business Administration, Quantitative Field, Statistics, Economics ஆகிய ஏதாவதொரு பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்று 2, 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Associate AI Engineer காலியிடங்கள்: 5

சம்பளம்: மாதம் ரூ.1,50,000 தகுதி: Science, Technology, Engineering, Business Administration ஆகிய ஏதாவதொரு பிரிவில் முதுநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Full Stack Engineer காலியிடங்கள்: 2

சம்பளம்: மாதம் ரூ.1,75,000

தகுதி: Science, Technology, Engineering, Business Administration ஆகிய ஏதாவதொரு பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Associate AI Product Designer

காலியிடங்கள்: 3 சம்பளம்: மாதம் ரூ. 1,75,000 தகுதி: Design, HCI, Visual Communication, Arts, Service Design, System Design and Management, Business, Product ஆகிய ஏதாவதொரு பிரிவில் முதுநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Associate AI Product Engineer

காலியிடங்கள்: 3 சம்பளம்: மாதம் ரூ. 1,30,000

தகுதி: Design, HCI, Visual Communication, Arts, Service Design, System Design and Management, Business, Product ஆகிய ஏதாவதொரு பிரிவில் முதுநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆகிய ஏதாவதொரு பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்று 2, 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். https://www.nhai.gov.in என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கவும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி: 7.10.2025

# மலையாளிகளின் பெருமை... மோகன்லாலுக்கு கேரள அரசு பாராட்டு!



திருவனந்தபுரம், அக்.6:

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் லால் சலாம் நிகழ்ச்சி நடைபெற்றது. அரசியல் - பண்பாட்டு நிகழ்வான இதில் மாநில முதல்வர் பினராயி விஜயன், அமைச்சர்கள், திரைப்பிரபலங்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில், இந்தாண்டு தாதா சாகேப் விருது பெற்ற நடிகர் மோகன்லாலை மரியாதை செய்யும் விதமாக மாநில அரசு நினைவு விருதை வழங்கியது.

இதுகுறித்து பேசிய முதல்வர் பினராயி விஜயன், “நடிகர் மோகன்லால் ஒவ்வொரு மலையாளிகளின் பெருமை. 1984 ஆம் ஆண்டு மட்டும் 34 திரைப்படங்களில் நடித்து ஆச்சரியப்படுத்தினார். இன்று நடிக்கும் நடிகர்கள் ஆண்டிற்கு 2 அல்லது 3 படங்களில் மட்டுமே நடிக்கின்றனர். மோகன்லால் தன் பன்முகத்திறமையால் போற்றப்படுபவர்.” என பாராட்டினார்.

நிகழ்வில் பேசிய மோகன்லால், “தில்லியில் விருது வாங்கியதைவிட சொந்த ஊரில் பாராட்டுகளைப் பெறுவது உணர்வுப்பூர்வமாக இருக்கிறது. இங்குதான் நான் பிறந்து, வளர்ந்தேன். இதன் காற்றும், நினைவும் எப்போதும் என் ஆன்மாவின் பகுதியாகவே இருக்கிறது. சில உணர்வுகளை நடிக்க முடியாது. நான் வெற்றிகளையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டிருக்கிறேன். ஆனால், எப்போதும் இரண்டையும் சமமாகவே எண்ணுகிறேன். இந்த சமூகமும் ரசிகர்களும் இல்லையென்றால் என்னால் எதையும் சாதித்திருக்க முடியாது” என்றார்.

# பள்ளிக் கல்வித் துறையில் உதவியாளர் பணியிடங்கள்: அக்.6-இல் கலந்தாய்வு

சென்னை, அக்.6:

பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன் வெளியிட்ட அறிவிப்பு: டிஎன்பிஎஸ்சி சார்பில் 2024-ஆம் ஆண்டு நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு 2ஏ (நேர்முகத் தேர்வு அல்லாத பணியிடங்கள்) தேர்வுகள் மூலம் தேர்ச்சி பெற்று பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன கலந்தாய்வு அக்.6-ஆம் தேதி (திங்கள்கிழமை) அந்தந்த மாவட்டங்களில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலகங்களில் இணைய வழியில் நடைபெறவுள்ளது. எனவே, மேற்கண்ட உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களுடைய தெரிவுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள முதன்மைக்கல்வி அலுவலகத்தில் அக்.6-ஆம் தேதி கலந்து கொள்ள வேண்டும்.

# குழந்தைகளுக்கு இருமல் மருந்து அவசியமா? மருத்துவர்கள் அறிவுரை

சென்னை, அக்.6:

குழந்தைகளுக்கு இருமல் மருந்து கொடுப்பதைப் பற்றி மருத்துவர்கள் தரப்பிலிருந்து பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளில் முக்கியமாக, ‘குழந்தைகளுக்கு இருமல் மருந்து அவசியமில்லை!’ என்பது தெளிவாகியுள்ளது.

மழைக் காலத்தில் குழந்தைகளுக்கு சளி இருமல் தொந்தரவு ஏற்படுவது தவிர்க்க இயலாதவை. ஆனால், அதற்காக இருமல் மருந்துகள் கொடுக்க தேவையில்லை.

அம்மருந்துகளில் பெரும்பாலும் பல தரப்பட்ட ரசாயன மூலக்கூறுகள் கலந்த மருந்துகள் கலக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கும். இவற்றால் இருமலுக்கு முழு தீர்வு கிடைக்குமா என்பது உறுதியாகச் சொல்ல முடியாது என குழந்தைகள் நல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.



மேலும், இந்த மருத்துகளால் மார்பு வலியும் அசௌகரியமும்கூட ஏற்படக்கூடும். ஆனால், இவற்றையெல்லாம் அறியாமல், சர்வ சாதாரணமாக இருமல் மருந்துகளை வாங்கிக் குழந்தைகளுக்கு சிலர் கொடுக்கின்றனர்.

அது தவறு என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இருமல் மருந்து எடுத்துக்கொண்டால், இருமல் தீருமா? என்பதே சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. பொதுவாக, இந்த மருந்துகளை எடுக்காமலேயே குழந்தைகள் இயல்பாகவே உடல்நலம் தேறி விடுவார்கள்.

ஆகவே, குழந்தைகளைப் பொருத்தவரையில், அதிலும் குறிப்பாக சிறு குழந்தைகளுக்கு இருமல் மருந்துகளைப் பெரும்பாலும் தவிர்ப்பதே நல்லது என மருத்துவர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கின்றனர்.

# எடப்பாடி பழனிசாமியின் பிரசாரம் ஒத்திவைப்பு!

சென்னை, அக்.6:

கரூர் சம்பவத்தைத் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவு எதிரொலியாக எடப்பாடி கே. பழனிசாமியின் பிரசாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அதிமுக தலைமை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கரூரில் விஜய்யின் அரசியல் பிரசாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலால் 41 பேர் பலியானதைத் தொடர்ந்து, இவ்விவகாரம் தொடர்புடைய வழக்குகளை விசாரித்த நீதிமன்றம், தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் அரசியல் கட்சிகளின் பரப்புரைக்கு அனுமதி வழங்க தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், இவற்றை கவனத்திற்கொண்டு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச்செயலருமான எடப்பாடி பழனிசாமியின் பிரசாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைமை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

‘மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்’ பெயரில் அரசியல் சுற்றுப்பயணத்தை எடப்பாடி பழனிசாமி மேற்கொண்டு வரும் நிலையில், நாமக்கலில் திட்டமிட்டிருந்த பிரசாரம் வேறொரு தேதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைமை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாமக்கல் சுற்றுப்பயணம் அக். 5,6 தேதிகளில் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அப்பயணம் அக். 8-ஆம் தேதியில் நடைபெறும் என அதிமுக தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கரூர் பலி: தார்மிகப் பொறுப்பு தவெகவுக்கே! - டிடிவி. தினகரன்

சென்னை, அக்.6:

கரூர் விபத்து தொடர்பான தார்மிகப் பொறுப்பு தவெகவுக்குத்தான் உள்ளது என்று அமமுக பொதுச்செயலர் டிடிவி. தினகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தஞ்சையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், கரூர் விபத்து தொடர்பான தார்மிகப் பொறுப்பு தவெகவுக்குதான் உள்ளது. அதன் தலைவர் விஜய் ஏற்றிருந்தால், நீதிமன்றம் கூட கண்டனம் தெரிவித்திருக்காது. கரூர் விபத்து பற்றி சீமான் கூட நிதானமாகவும் சரியாகவும் பேசினார். பதவி ஆசையில் எடப்பாடி பழனிசாமி வாதமிடுக்கிறார்

ஆட்சிக்கு வர



வேண்டுமென எடப்பாடி பழனிசாமி தலைகீழாக நின்றாலும், அமமுக அவரை வீழ்த்தாமல் விடாது. எடப்பாடி பழனிசாமி தரம்தாழ்ந்து பேசுவது வருத்தம் அளிக்கிறது. அவர் அப்படித்தான் பேசுவார் என்பதும் தெரியும். அதிமுக மீதோ, பாஜக மீதோ எந்த பகையும் இல்லை, ஒரே பிரச்னை பழனிசாமிதான்.

கரூர் துயரச்சம்பவத்தில் முதல்வர் நிதானமாகவும் பொறுப்புணர்வோடும் செயல்பட்டார். தவெக-வின் வாதங்கள்யாவும் பொறுப்பற்ற தன்மையைதான் காட்டுகிறது. இச்சம்பவத்தில் அண்ணாமலை பேசியதில்கூட, ஒரு நெருங்கிய நண்பனாக எனக்கு வருத்தம் உள்ளது. கரூர் சம்பவத்தில் சதிக்கே வேலையில்லை. இது விதியோடு சதிதான்.

ஜாதி, மதம் கடந்துதான் தமிழகம் மக்கள் அனைவரையும் பார்பார்கள். திமுக ஆட்சிக்கு ஆதராக பேசவில்லை.

ஆனால் கரூர் விவகாரத்தில் சரியாக செயல்படுகிறது. தவெக திட்டமிட்டு இதைச் செய்ய வில்லை.

இது விபத்துதான். அனுபவம் குறைவால் அவர்களுக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். இந்த சம்பவத்தில் பாஜக அரசியல் செய்வது வருத்தமாக உள்ளது என்றார்.

# உயர் நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து தவெக தலைவர் விஜய் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்யும் நடவடிக்கை தீவிரம்



**சென்னை, அக்.6**

தவெக தலைவர் விஜய்யின் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்யுமாறு சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அதற்கான நடவடிக்கையில் போலீஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

கரூரில் கடந்த செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். இதை தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் 'ரோடு ஷோ' நிகழ்வுகள் மற்றும் சாலை பிரச்சாரத்துக்கு அனுமதி வழங்க தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தினேஷ் என்பவர் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.செந்தில்குமார் கடந்த 3-ம் தேதி பிறப்பித்த உத்தரவில் கூறியுள்ளதாவது: கரூரில் பிரச்சாரக் கூட்டத்தின்போது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தபோது, சம்பவ இடத்தில் இருந்த கட்சித் தலை வரும், பிற நிர்வாகிகளும் தங்களுக்கும், நடந்த சம்பவத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லாததுபோல நடந்துகொண்டுள்ளனர். நெரிசலில் சிக்கியவர்களுக்கோ, தங்களது ஆதரவாளர்களுக்கோ அவர்கள் எந்த உதவியும் செய்யவில்லை.உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலோ, ஆறுதலோ தெரிவிக்கவில்லை. பொறுப்பற்ற முறையில் அப்படியே விட்டுவிட்டு அங்கிருந்து நழுவிச் சென்றது கடும் கண்டனத்துக்குரியது.

குறைந்தபட்சம் தன்னை பார்க்க வந்தவர்கள் பரிதாபமாக உயிரிழந்த துயரத்துக்கு விஜய் சமூக வலைதளத்திலாவது உடனடியாக தனது அனுதாபம், வருத்தத்தை கட்சி சார்பில் தெரிவித்திருக்கலாம். அவர்களது இந்த பொறுப்பற்ற செயல்பாடு, மனித உயிர்களை குறைவாக மதிப்பிடும் ஆபத்தான அரசியல் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்க வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்கிறேன். விஜய் பயணம் செய்த பிரச்சாரப் பேருந்தின் உள்ளே, வெளியே மற்றும் சம்பவ இடத்தில் இருந்த அனைத்து கண்காணிப்பு கேமரா காட்சிகளையும் கைப்பற்றி விசாரணையை இந்த குழு உடனே தொடங்க வேண்டும். சம்பவத்தில் தொடர்புடைய விஜய்யின் பிரச்சார வாகனத்தையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு உத்தரவில் கூறியிருந்தார்.

இதையடுத்து, விஜய்யின் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் போலீஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். சென்னை பனையூரில் நிறுத்தப்பட்டுள்ள அந்த வாகனம் எந்த நேரத்திலும் பறிமுதல் செய்யப்படலாம் என தெரிகிறது.

## க்ரைம் கார்னர்

### கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட யூடியூபர், கல்லூரி மாணவர் உள்பட 4 பேர் கைது

**சென்னை, அக்.6:**

உயர் ரக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட யூடியூபர், கல்லூரி மாணவர் உள்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனையை தடுக்க சென்னை போலீஸார் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் தலைமையிலும் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பிரத்யேகமாக போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

அதன்படி, சூளைமேடு போலீஸார் இன்று காலை சூளைமேடு, கமலா நேரு நகர் பகுதியில் சந்தேகப்படும்படி நின்றிருந்த 4 இளைஞர்களை பிடித்து விசாரித்தனர். அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததால் அவர்களை சோதித்தபோது அவர்களிடம் உயர்ரக கஞ்சா, கஞ்சா ஆயில், போதை மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் போதைப் பொருள் வைத்திருந்த சூளைமேட்டைச் சேர்ந்த பிரதாப் (27), பள்ளிக்கரணையைச் சேர்ந்த ஜனார்த்தனன் (27), கீழ்கட்டளையைச் சேர்ந்த பூர்ணசந்திரன் (21), பூந்தமல்லியைச் சேர்ந்த அப்துல் வாசிம் (22) ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

விசாரணையில், 'பிரதாப் யூடியூப் சேனல் நடத்தி வருவதும், ஜனார்த்தனன் பெங்களூருவில் தனியார் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும், பூர்ணசந்திரன் கல்லூரியில் பிபிஏ படித்து வருவதும், அப்துல் வாசிம் நட்சத்திர ஓட்டலில் மேலாளராக உள்ளதும் தெரியவந்தது. இவர்கள் பெங்களூருவிலிருந்து கஞ்சா வாங்கி வந்து சென்னையில் விற்பனை செய்ய திட்டமிட்டது தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

### டெலிவரி பாய் போல் நோட்டமிட்டு தொடர் திருட்டு: உ.பி கொள்ளையர்கள் சென்னையில் கைது

**சென்னை, அக்.6:**

டெலிவரி பாய் போல் நோட்டமிட்டு பூட்டி இருக்கும் வீடுகளை குறி வைத்து தொடர் திருட்டில் ஈடுபட்ட உ.பி கொள்ளையர்கள் இருவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை சைதாப்பேட்டை, புஜங்காரா வீதியில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று உள்ளது. அதில், 2-வது தளத்தில் ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர் தியாகராஜன் என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த மாதம் 8ம் தேதி காலை வீட்டை பூட்டிவிட்டு ஆந்திர மாநிலம் புத்தூரில் உள்ள கோயிலுக்கு சென்று விட்டு மாலை வீடு வந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அதிர்ச்சியுடன் உள்ளே சென்றபோது பீரோவில் இருந்த 32 பவுன் தங்க நகைகள் மற்றும் வெள்ளிப்பொருட்கள் திருடு போயிருந்தது தெரியவந்தது.

உடனடியாக தியாகராஜன் இது குறித்து, சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார். அதன்படி, அக்காவல் நிலைய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல்கட்டமாக சம்பவ இடம் மற்றும் அதைச் சுற்றி பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி விசாரணையை முன்னெடுத்தனர்.

இதில், கொள்ளையில் ஈடுபட்டது உத்திரபிரதேசம் மாநிலத்தைச் சேர்ந்த ஷாம் முகமது (35), நூர் இஸ்லாம் (32) என்பது தெரியவந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

விசாரணையில், 'கைது செய்யப்பட்ட இருவரும் உத்திரப் பிரதேச மாநிலத்தில் இருந்து சென்னை வந்து சென்ட்ரலில் உள்ள தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கி, சென்னையில் பல்வேறு இடங்களுக்கு டெலிவரி பாய் போல சென்று பூட்டியிருக்கும் வீடுகளை நோட்டமிட்டு, அந்த வீடுகளின் பூட்டை உடைத்து தங்க நகைகளை திருடியது தெரியவந்தது. ஷாம் முகமது மீது மட்டும் உத்திரப்பிரதேச மாநிலத்தில் 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

### 'ஈகோ' மோதல்: சென்னையில் ரவுடியை கொலை செய்த 3 பேர் கைது

**சென்னை, அக்.6:**

சென்னை புதுவண்ணராப்பேட்டை, வெங்கடேசன் தெருவைச் சேர்ந்தவர் மனோஜ்குமார் என்ற மயாண்டு (20). இவர் மீது புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்பட பல வழக்குகள் உள்ளது. போலீஸாரின் 'சி' பிரிவு ரவுடி பட்டியலில் இருந்தார். இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த மேலும் சிலருக்கும் அவர்கள் ஏரியாவில் யார் பெரிய ஆள் என்பதில் மோதல் இருந்து வந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு புதுவண்ணாரப்பேட்டை அசோக்நகர் முதல் தெரு, வீரராகவன் தெரு சந்திப்பிற்கு எதிரே உள்ள காலியிடத்தில் மனோஜ் குமார் அதே பகுதியைச் சேர்ந்த மேலும் சிலருடன் அமர்ந்து மது அருந்தி உள்ளார். அப்போது, அந்த ஏரியாவில் யார் பெரிய ஆள் என்பதில் தகராறு ஏற்பட்டது. இதில், ஆத்திரம் அடைந்த எதிர் தரப்பினர் மதுபாட்டிலால் சரமாரியாக தாக்கி உள்ளனர். இதில், மனோஜ்குமார் உயிரிழந்தார்.

கொலை தொடர்பாக புதுவண்ணாரப்பேட்டையைச் சேர்ந்தசிபிரிவுரவுடிசஞ்சய்(22),தண்டையார்பேட்டையைச் சேர்ந்த பிரகாஷ் (22), புதுவண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த தேவ பிரசாத் (23) ஆகிய 3 பேரை கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### டைனோசர்கள் (DINOSAURS) அழிந்த நாள் எப்படி இருந்திருக்கும் தெரியுமா?



66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் வரலாற்றில் ஒரு மிகப்பெரிய பேரழிவு நடந்தது. சுமார் 10 கிலோ மீட்டர் அகலமுள்ள ஒரு விண்கல் பூமியை பலமாகத் தாக்கியது. இது நாம் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தியது. இந்தத் தாக்கத்தின் விளைவாக டைனோசர்கள்(Dinosaurs) உட்பட பூமியில் வாழ்ந்த 75%-க்கும் மேற்பட்ட விலங்கு மற்றும் தாவர இனங்கள் முற்றிலும் அழிந்து போயின. அப்படி அழியும்போது அந்த நாள் எப்படி இருந்திருக்கும் தெரியுமா?

**விண்கல் தாக்குதல்**

அப்போது இயற்கை எழில் கொஞ்சிய பூமியில் ஒரு பிரகாசமான ஒளி தோன்றியது. இது அதிபயங்கர ஓசையுடன் பூமியை நோக்கி வேகமாக வந்து, மெக்சிகோவின் யுகடன் தீபகற்பத்தைத் தாக்கியது. இந்த தாக்கத்தின் விளைவாக பூமி மொத்தமாக அதிர்ந்து சுனாமிகள் உருவாகின, தீ மலமலவென பரவியது மற்றும் பெரிய அளவிலான தூசிகள் வளிமண்டலத்தை முற்றிலுமாக மூடியது.

**இருள் சூழ்ந்தது**

தூசி மேகங்கள் ஒட்டுமொத்த வானத்தையும் மூடி சூரிய ஒளி பூமியினுள் வராமல் தடுத்தது. இதனால் பூமியே இருளில் மூழ்கியது. பூமியின் வெப்பநிலை கணிசமாகக் குறைந்து, பெரும்பாலான இடங்கள் உறையத் தொடங்கின. தாவரங்களுக்கு போதிய சூரிய ஒளி கிடைக்காததால் உணவுச் சங்கிலி முற்றிலுமாக சீர்குலைந்து பல உயிரினங்கள் பசியால் இறந்து போயின.

**டைனோசர்களின்(Dinosaurs) அழிவு**

டைனோசர்கள் அந்த காலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய விலங்கு இனமாகும். இந்த பிரம்மாண்ட விண்கல் தாக்கத்தை அவற்றால் தாங்க முடியவில்லை. பெரும்பாலான டைனோசர்கள் உணவு, தங்குமிடம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற காரணிகளால் இறந்து போயின. இதில் சில டைனோசர் இனங்கள் தப்பிப் பிழைத்தாலும், காலப்போக்கில் பறவைகளாக பரிணாம வளர்ச்சி அடைந்ததாக சொல்லப்படுகிறது.

**புதிய உலகம்**

பலமில்லியன் ஆண்டுகளுக்குப்பிறகு தூசிமேகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக கலைந்து சூரிய ஒளி மீண்டும் பூமியை அடைந்தது. காலநிலை மெதுவாக சீராக்கி புதிய தாவரங்கள் மற்றும் விலங்குகள் தோன்றத் தொடங்கின. பூமி மீண்டும் பல உயிரினங்களால் நிரம்பியது. பாலூட்டி இனங்கள் ஆதிக்கம் செலுத்தும் இனங்களாக மாறின. அதில் மனிதனும் அடங்குவான்.

டைனோசர்களின் அழிவு என்பது பூமியின் வரலாற்றில் ஏற்பட்ட ஒரு மிகப்பெரிய திசைத் திருப்பமாகும். இதன் காரணமாகவே புதிய உலகம் தோன்றியது. இன்று நாம் காணும் இந்த பூமி அப்போது நடந்த பயங்கரமான விளைவினாலேயே ஏற்பட்டது எனலாம். மனிதர்கள் உருவாவதற்கும் அந்தப் பேரழிவே காரணமாக இருந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# 'கலைஞர் பல்கலை' மசோதா விவகாரத்தில் ஆளுநருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு ரிட் மனு தாக்கல்




**புதுடெல்லி, அக்.6:**

கும்பகோணத்தில் 'கலைஞர் பல்கலைக்கழகம்' உருவாக்குவது தொடர்பான மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு ரிட் மனு தாக்கல் செய்துள்ளது.

சட்டப்பேரவையில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் 2025-26-ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்றது. இதில், முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் கும்பகோணத்தில் 'கலைஞர் பல்கலைக்கழகம்' உருவாக்குவதற்கான மசோதா தாக்கல் செய்து, நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து, ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்திருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தார். பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) விதிகள், துணைவேந்தர் நியமன மசோதா உள்ளிட்டவை தொடர்பாக பல்வேறு வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நிலையில், குடியரசுத் தலைவருக்கு இந்த மசோதா அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய 'கலைஞர் பல்கலைக்கழகம்' தொடர்பான மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் மிஷா ரோஹ்தகி ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

# சென்னையில் தெரு நாய்கள், செல்ல பிராணிகளுக்கு உரிமம் வழங்க ஒருங்கிணைந்த மேலாண்மை இணையதளம் தொடக்கம்

**சென்னை, அக்.6:**

சென்னை மாநகரில் தெரு நாய்கள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்குதல், மைக்ரோசிப் பொருத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு ஒருங்கிணைந்த மேலாண்மை இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி எல்லைக்குள் செல்லப் பிராணிகளை வளர்ப்பதற்கு உரிமம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

செல்லப்பிராணிகள் வளர்ப்பை முறைப்படுத்த கடந்த 2023-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் முதல் மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப்பிராணி உரிமம் பெறுவது நடைமுறையில் உள்ளது.

செல்லப் பிராணிகளின் உரிமையாளர் தங்களின் புகைப்படம், முகவரிச் சான்று, செல்லப்பிராணி புகைப்படம் மற்றும் வெறிநாய்க் கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து ரூ.50 உரிமக் கட்டணமாகச் செலுத்தி உரிமம் பெற்று வருகின்றனர். கடந்த 2024-ம் ஆண்டு முதல் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 12,393 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாட்டிலேயே முதன்முறையாக சென்னை மாநகராட்சியில் நாய்களுக்கு மைக்ரோசிப் செலுத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மேலாண்மை இணையதள சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சேவையை ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா 3ஆம் தேதி தொடங்கிவைத்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மாநகராட்சிப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று செல்லப் பிராணிகள் குறித்த கணக்கெடுப்பும், உரிமம் வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை வழங்கும் பணி வரும் நவம்பர் மாதம் முதல் தொடங்கப்படும். நாய்களை முறையாகப் பிடித்து விடுவிப்பதை உறுதி செய்வதற்காக, க்யூஆர் குறியீடு காலர்கள் மற்றும் மைக்ரோ சிப் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 12,250 தெருநாய்களுக்கு மைக்ரோ சிப் பொருத்தப்பட்டுள்ளது.

கடந்த 2021-ம் ஆண்டு முதல் தற்போது வரை 72,345 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. நாய்கள் தொடர்பாக 1913 என்கிற எண்ணிலும், 9445061913 என்ற வாட்ஸ்-அப் எண்ணிலும் புகார்களைத் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ. குமரகுருபரன், இணை ஆணையர் வீ.ப.ஜெயசீலன், நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) கோ.சாந்தகுமாரி, கால்நடை மருத்துவ அலுவலர் ஜெ.கமால் உசேன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தேவை ஏற்பட்டால் விஜய் கைது செய்யப்படுவார்: அமைச்சர்

**வேலூர், அக்.6:**

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த சேர்க்காடு பகுதியில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: கரூர் தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கில் நீதிபதி பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கு செல்லாத முதல்வர் ஸ்டாலின் கரூருக்கு சென்றது ஏன் என்றும், விசாரணை ஆணையம் அமைத்தது குறித்தும் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சியினர் அப்படித்தான் பேசுவார்கள். கள்ளக்குறிச்சி சம்பவம் நடந்தபோது இருந்த சூழ்நிலை வேறு, தற்போதுள்ள சூழ்நிலை வேறு. நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தது சாதாரண விஷயமா? உலகமே இந்த சம்பவத்தை பார்த்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் முதல்வர் உடனடியாக அங்கு சென்றார். கரூர் விவகாரத்தில் தவெக தலைவர் விஜய்யை கைது செய்யும் நிலை வந்தால், அவரைக் கைது செய்வோம்.

தேவையில்லாத சூழலில் அவரைக் கைது செய்ய மாட்டோம். அநாவசியமாக அரசு யாரையும் கைது செய்யாது. இவ்வாறு துரைமுருகன் கூறினார்.

# தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் அடுத்த மாதம் இறுதியில் பயன்பாட்டுக்கு வரும்: அதிகாரிகள் தகவல்

**புதுடெல்லி, அக்.6:**

இரண்டு தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில்கள் அடுத்த மாதம் இறுதிக்குள் பயன்பாட்டுக்கு வரும் என, ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னை ஐ.சி.எஃப் ஆலையில் தற்போது அதிவேக ரயிலான வந்தே பாரத் ரயில் தயாரிப்பில் கவனம் செலுத்தப்படுகிறது. இதுவரை, 60-க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரயில்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. இந்த ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.



இதையடுத்து, அம்ரித் பாரத் ரயில், தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில், வந்தே மெட்ரோ உட்பட பல்வேறு வகைகளில் வந்தே பாரத் ரயில்கள் தயாரிக்கப்படுகின்றன. அதிலும், தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில்களை தயாரித்து, இரவு நேரங்களில் இயக்க ரயில்வே திட்டமிட்டுள்ளது.

அதன்படி, கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள பிஇஎம்எல் நிறுவனத்தில், முதல் தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் தயாரிப்பு பணிகள் முடிந்து, கடந்த ஆண்டு அக்டோபரில் சென்னை ஐ.சி.எஃப். ஆலைக்கு வந்தது. இந்த வந்தே பாரத் ரயிலில், 16 'ஏசி' பெட்டிகள் இருக்கின்றன. பயணிகளை கவரும் வகையில் ஆரஞ்சு, மஞ்சள் நிறங்களில் உள் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு கட்ட ஆய்வுக்கு பிறகு, இந்த தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் சென்னை ஐ.சி.எஃப். ஆலையில் இருந்து டில்லிக்கு அனுப்பப்பட்டது. 10 மாதங்கள் கடந்துள்ள நிலையில் தூங்கும் வந்தே பாரத் ரயில் இன்னும் பயன்பாட்டுக்கு வராதது, பயணிகளிடம் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்நிலையில், அடுத்த மாதம் இறுதியில் இந்த ரயிலை பயன்பாட்டுக்கு கொண்டு வர ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில், பயணிகளை வெகுவாக கவரும் வகையில், தயாரிக்கப்பட்டுள்ளது. மணிக்கு 180 கி.மீ. வரை வேகமாக செல்லும் திறன் கொண்டது. பயணிகள் வசதிக்காக, ரயில் பெட்டியின் உள்பகுதியில் சில மாற்றங்களும் செய்யப்பட்டது.

நீண்ட தூரம் செல்லும் தடத்தில், தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் தயாராக உள்ளது. 2-வது ரயில், தயாரிப்பு பணியும் முடிந்து, அக். 15-க்குள் வந்து விடும். எனவே, இரண்டு வந்தே பாரத் ரயில்களும் அடுத்த மாதம் இறுதிக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவர ரயில்வே திட்டமிட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## 'மூன்று கேப்டன்கள் சாத்தியமில்லை' - இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவர் அகர்கர்

**மும்பை, அக்.6:**

மும்பை: இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டனாக ஷுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த சூழலில் அவரது தேர்வு குறித்து விளக்கம் கொடுத்துள்ளார் இந்திய அணியின் தேர்வுக்குழு தலைவர் அஜித் அகர்கர்.

எதிர்வரும் ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்துக்கான ஒருநாள் கிரிக்கெட் அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது. இதை சீனியர் வீரர்களான ரோஹித் சர்மா மற்றும் விராட் கோலி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதம் நடைபெற்ற ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி தொடரில் ரோஹித் தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.

இருப்பினும் இதன் பின்னர் நடைபெற்ற இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்னதாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக ரோஹித் அறிவித்தார். அவருடன் கோலியும் இணைந்து கொண்டார். ஏற்கெனவே 2024-ல் இந்திய அணி டி20 உலகக் கோப்பையை வென்றதும் ஓய்வு பெறுவதாக இருவரும் அறிவித்தனர். இந்த சூழலில் தான் ஒருநாள் கிரிக்கெட் அணிக்கான கேப்டன் பொறுப்பில் இருந்து தற்போது ரோஹித் விடுவிக்கப்பட்டுள்ளார்.

"மூன்று கிரிக்கெட் பார்மெட்டுக்கு மூன்று கேப்டன்களை நியமிப்பது சாத்தியம் இல்லை. 2027 ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடருக்கு அதிக அவகாசம் இருப்பது போல தெரியும். ஆனால், இந்த பார்மெட்டில் இப்போது நாம் அதிக போட்டிகளில் விளையாடுவது இல்லை. அதனால் கேப்டன்சி ரோலில் புதியவருக்கு போதுமான வாய்ப்பு அவசியம். அது அவருக்கு திட்டமிடல் சார்ந்து அதிகம் உதவும்.

ஏனெனில், இந்திய அணி கடைசியாக கடந்த மார்ச் மாதம் சாம்பியன் டிராபியில் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடி இருந்தது. அதன் பிறகு இந்த பார்மெட்டில் வரும் 19-ம் தேதி தான் விளையாடுகிறது.

இளம் வீரரான ஷுப்மன் கில், அழுத்தம் நிறைந்த சூழலில் என்ன செய்தார் என்பதை இங்கிலாந்து தொடரில் பார்த்தோம். அவரது செயல்பாடு நேர்மறையாக அமைந்துள்ளது. ஒருநாள் கிரிக்கெட்டில் அவரது ரெக்கார்டுகளையும் நாம் கவனிக்க வேண்டும். இதை வைத்துதான் அவரை கேப்டனாக தேர்வு செய்துள்ளோம்" என அஜித் அகர்கர் தெரிவித்துள்ளார்.

26 வயதான கில், இந்திய அணிக்காக 55 ஒருநாள் போட்டிகளில் விளையாடி உள்ளார். இதன் மூலம் 2,775 ரன்கள் சேர்த்துள்ளார். அவரது பேட்டிங் சராசரி 59.04. 8 சதம் மற்றும் 15 அரைசதம் பதிவு செய்துள்ளார்.

## தலைமை பொறுப்பிலிருந்து ரோஹித் விடுவிப்பு: இந்திய அணிக்கு ஷுப்மன் கில் கேப்டன்

**மும்பை, அக்.6:**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணிக்கு ஷுப்மன் கில் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். கேப்டன் பதவியிலிருந்து ரோஹித் சர்மா விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் அணியில் தொடர்கிறார்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி தற்போது விளையாடி வருகிறது. இந்த தொடர் முடிந்தவுடன் இந்திய அணி ஆஸ்திரேலியா சென்று, அந்த அணிக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், 5 போட்டிகள் கொண்ட சர்வதேச டி20 தொடரில் விளையாட உள்ளது. இந்தத் தொடர் வரும் 19-ம் தேதி தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) நேற்று தேர்வு செய்து அறிவித்துள்ளது.

இதுநாள் வரை இந்திய அணியின் கேப்டனாக செயல்பட்டு வந்த ரோஹித் சர்மா, பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். புதிய கேப்டனாக ஷுப்மன் கில்லும், துணை கேப்டனாக ஸ்ரேயாஸ் ஐயரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் அணியில் ரோஹித் சர்மா, விராட் கோலி இடம் பெற்றுள்ளனர்.

அதேபோல் டி20 போட்டிகளுக்கான இந்திய அணிக்கு சூர்யகுமார் யாதவ் கேப்டனாகவும், ஷுப்மன் கில் துணை கேப்டனாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 12 மணி நேரம் தொடர் மழை; 7 இடங்களில் நிலச்சரிவு: 17 பேர் பலி - டார்ஜிலிங் விரைகிறார் மம்தா பானர்ஜி!

**டார்ஜிலிங், அக்.6:**

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் 12 மணி நேரம் பெய்த தொடர் கனமழையால் 7 இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி சுமார் 17 பேர் உயிரிழந்தனர். பலர் மாயமாகி உள்ள நிலையில் மீட்புப் பணிகள் அங்கு முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, இன்று டார்ஜிலிங் செல்ல உள்ளார்.



டார்ஜிலிங்கில் சனிக்கிழமை அன்று கனமழை பொழிந்த நிலையில் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் மக்களின் வீடுகள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. மழையினால் சில பகுதிகளுக்கான சாலை போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கம் மற்றும் சிக்கிமை இணைக்கும் முக்கிய சாலை இதில் சேதமடைந்துள்ளது.

டார்ஜிலிங்கின் சார்ஸ்லே, ஜெஸ்பீர்கான், மிரிக் பஸ்தி, தார் கான், மிரிக் லேக் ஏரியா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மீட்பு பணியில் மாவட்ட நிர்வாகம், காவல் துறையினர் மற்றும் தேரிய பேரிடர் மீட்பு படையினர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தசூழலில்நிலச்சரிவில்சிக்கிஉயிரிழந்தவர்களுக்கு நிவாரண உதவி அறிவித்துள்ளார் மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி. நாளை (அக்.6) அவர் டார்ஜிலிங் செல்ல உள்ளார். அங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் கண்டு மாநில அதிகாரிகளுடன் சேத விவரங்களை பெற உள்ளார்.

"பூடானில் கனமழை பொழிந்த காரணத்தால் மேற்கு வங்க மாநிலத்தில் வடக்கு பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இது இயற்கை பேரிடர். இந்த சம்பவம் எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேசி உள்ளேன். அங்கு நிலவும் சூழலை உன்னிப்பாக மாநில அரசு கவனித்து வருகிறது.

இடைவிடாமல் 12 மணி நேரம் தொடர்ந்து மழை பொழிந்துள்ளது. 7 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நாளை பிற்பகல் அங்கு செல்ல திட்டமிட்டுள்ளேன். சுற்றுலா பயணிகள் அதிகளவில் டார்ஜிலிங்கில் சிக்கி உள்ளனர். அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். அவசரப்பட வேண்டாம். அவரவர் தங்கியுள்ள விடுதிகளில் பத்திரமாக இருங்கள். விடுதி உரிமையாளர்கள் சுற்றுலா பயணிகளிடம் கூடுதல் தொகை வசூலிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்" என்று மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

## சுற்றுலா தலங்கள் மூடல்

**டார்ஜிலிங், அக்.6:**

கனமழை மற்றும் நிலச்சரிவு பாதிப்பை அடுத்து டார்ஜிலிங்கில் பல்வேறு சுற்றுலா தலங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளன. டைகர் ஹில், ராக் கார்டன் போன்ற சுற்றுலா தலங்கள் மற்றும் டாய் ட்ரெயின் சேவையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

டார்ஜிலிங் நகரப்பகுதி மட்டுமல்லாது சிலிகுரி, ஜல்பைகுரி, கூச் பெஹர் உள்ளிட்ட பகுதிகளும் இந்த மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தசரா விடுமுறையை ஒட்டி டார்ஜிலிங்குக்கு சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் வந்திருந்த நிலையில் நிலச்சரிவால் அவர்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் உதவிக்காக காவல் கட்டுப்பாட்டு அறை 91478 89078 என்ற தொடர்பு எண்ணை அறிவித்துள்ளது. பல இடங்களில் மீட்பு பணிகள் மேற்கொள்ள முடியாத சூழல் நிலவுவதாக களத்தில் இருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றன.

# பிஹார் தேர்தல்: புதிய சீர்திருத்தங்களை அறிவித்த தேர்தல் ஆணையம்




**பாட்னா, அக்.6:**

விரைவில் நடைபெறவுள்ள பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் புதிய சீர்திருந்தங்களை நடைமுறைக்கு கொண்டு வர உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அது குறித்து பார்ப்போம்.

பிஹார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் நவம்பர் 22-ம் தேதியுடன் நிறைவடைகிறது. அந்த மாநிலத்தில் நவம்பரில் பேரவைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் ஆணையம் விரைவில் தேர்தலுக்கான தேதியை அறிவிக்க உள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை அன்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பத்திரிகையாளர்களை சந்தித்தார். புதிய சீர்திருத்தங்களை பிஹார் தேர்தலில் நடைமுறைக்கு கொண்டு வருகிறோம். அதில் சில தேர்தலின் போதும், சில வாக்கு எண்ணிக்கையின் போதும் நடைமுறைக்கு வரும்.

வாக்காளர்கள் பதிவு செய்த 15 நாட்களுக்குள் வாக்காளருக்கு கிடைப்பதை உறுதி செய்யும் எஸ்ஓபி நடைமுறை, வாக்குச் சாவடியில் மொபைல்போன்களைடெபாசிட் செய்யும் வசதி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 1,200-க்கும் குறைவான வாக்காளர்கள் மட்டுமே இருப்பார்கள். இதன் மூலம் வாக்குச்சாவடிகளில் நீண்ட வரிசை தவிர்க்கப்படும். நாட்டிலேயே இது முதல்முறை. வாக்காளர் சிறப்பு சீர்திருத்தம் மற்றும் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை கூட்டியது இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

முக்கியமாக மின்னணு வாக்கு பதிவு இயந்திரத்தில் வேட்பாளரின் வண்ண புகைப்படம் மற்றும் வரிசை எண்ணின் எழுத்துரு பெரியதாக இருக்கும். இந்த அம்சத்தை பெறுகின்ற முதல் மாநிலம் பிஹார் தான். வாக்குச்சாவடியில் உள்ள அலுவலர்களுக்கு அடையாள அட்டை, அனைத்து வாக்குப்பதிவு மையங்களிலும் 'வெப் காஸ்ட்டிங்' கவரேஜ் இருக்கும். இதன் மூலம் வாக்குப்பதிவு 100 சதவீதம் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கையின் போது படிவம் 17சி மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளில் வித்தியாசம் இருந்தால் அவை அனைத்தும் மீண்டும் முழுமையாக எண்ணப்பட வேண்டும். இது ஏற்கெனவே உள்ள நடைமுறை தான். இந்தியா முழுவதும் இந்த புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும் என அவர் தெரிவித்தார். மாதிரிகளை சேகரித்து சோதனை நடத்துகிறோம்" எனத் தெரிவித்தார்.

# எம்3எம் ஹுரூன் இந்தியா பணக்காரர் பட்டியல் 2025 வெளியீடு: இளம் பில்லியனர் பட்டியலில் அரவிந்த் ஸ்ரீனிவாஸ்

**புதுடெல்லி, அக்.6:**

சென்னையில் பிறந்த அரவிந்த் ஸ்ரீனிவாஸ் 31 வயதில் நாட்டின் இளம் பில்லியனர் பட்டியலில் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளார்.

'எம்3எம் ஹுரூன் இந்தியா பணக்காரர் பட்டியல் 2025' வெளியாகி உள்ளது. இதில், ரூ.1,000 கோடிக்கு மேல் சொத்து வைத்துள்ள 1,687 பேர் இடம்பிடித்துள்ளனர். கடந்த ஆண்டைவிட 284 பேர் கூடுதலாக இடம்பிடித்துள்ளனர். இதில் 148 பேர் புதிதாக இந்தப் பட்டியலில் இணைந்துள்ளனர்.

அந்தவகையில், சென்னையில் பிறந்த அரவிந்த் ஸ்ரீனிவாஸ் (31) முதல் முறையாக இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளார். இவரது சொத்து மதிப்பு ரூ.21,190 கோடி ஆகும். மேலும் 1 பில்லியன் டாலருக்கு மேல் (ரூ.8,900 கோடி) சொத்து வைத்துள்ள 350 இந்தியரில் இளையவர் (இளம் பில்லியனர்) என்ற சாதனையையும் படைத்துள்ளார். ஸ்டார்ட்-அப் நிறுவனமான பெர்ப்ளெக்சிட்டியின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான ஸ்ரீனிவாஸ், தகவல் தொடர்பு முறையை வேகமாக மாற்றி வரும் செயற்கை நுண்ணறிவு துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்.




முகேஷ் அம்பானி முதலிடம்: இந்தப் பணக்காரர் பட்டியலில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி (68), ரூ.9.55 லட்சம் கோடி சொத்துடன் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்த அதானி குழும தலைவர் கவுதம் அதானி ரூ.8.14 லட்சம் கோடியுடன் 2-ம் இடம் பிடித்துள்ளார். எச்சிஎல் நிறுவனத்தின் ரோஷினி நாடார் ரூ.2.84 லட்சம் கோடி சொத்துடன் முதல் முறையாக 3-ம் இடம் பிடித்துள்ளார். சைரஸ் புனாவல்லா (ரூ.2.46 லட்சம் கோடி) 4-ம் இடத்திலும், குமார் மங்கலம் பிர்லா (ரூ.2.32 லட்சம் கோடி) 5-ம் இடத்திலும் உள்ளனர்.

இந்த பணக்காரர்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர்களின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு ரூ.167 லட்சம் கோடி ஆகும். இது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சுமார் 50% ஆகும். கடந்த 2 ஆண்டுகளாக, சராசரியாக வாரந்தோறும் ஒருவர் புதிய பில்லியனர் பட்டியலில் இணைந்து வருகின்றனர் என ஹுரூன் தெரிவித்துள்ளது.

## அரபிக் கடலில் துறைமுகம் அமைக்க பாகிஸ்தான் திட்டம்

**இஸ்லாமாபாத், அக்.6:**

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள கனிம மாதிரிகளை டிரம்பிடம், ஷபாஸ் ஷெரீப் மற்றும் அசீம் முனிர் காண்பித்தனர்.

பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் மற்றும் ராணுவ தளபதி அசீம் முனிர் ஆகியோர் சமீபத்தில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டு அந்நாட்டு ஜனாதிபதி டிரம்பை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

இதில் கனிம வளங்கள் ஒப்பந்தம் தொடர்பாக ஆலோசித்தனர். அப்போது பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள கனிம மாதிரிகளை டிரம்பிடம் காண்பித்தனர். இந்த நிலையில் அரபிக் கடலில் புதிய துறைமுகத்தை அமைக்க திட்டமிட்டுள்ள பாகிஸ்தான் அதற்காக அமெரிக்காவின் உதவியை நாடி உள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள கனிம வளங்களை பூமியில் இருந்து வெட்டி எடுத்து தனது பொருளாதாரத்தை மேம்படுத்த பாகிஸ்தான் திட்டமிட்டு வருகிறது. கனிமங்களை உலகச் சந்தைக்குக் கொண்டு செல்ல பலுசிஸ்தான் மாகாணம் குவாதர் மாவட்டம் அருகே உள்ள கடற்கரை நகரமான பாஸ்னியில் புதிய துறைமுகம் கட்ட பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இங்கு சிவில் துறைமுகத்தை அமெரிக்கா உருவாக்கலாம் என்று பாகிஸ்தான் முன்மொழிந்துள்ளது. அமெரிக்க முதலீட்டாளர்கள் இந்தத்துறைமுகத்தைக்கட்டவும் இயக்கவும் பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்தத் துறைமுகம் பாகிஸ்தானின் உள்பகுதிகளில் இருந்து என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனிமங்களை கொண்டு செல்வதற்கான புதிய ரெயில் பாதையுடன் இணைக்கப்படும் ஆப்கானிஸ்தான் மற்றும் எல்லையான ஈரானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் துறைமுக நகரமான பஸ்னி தற்போது இந்தியா மேம்படுத்தி வரும் ஈரானின் சாபஹார் துறைமுகத்திற்கு அருகில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுக்கு போர் விமான என்ஜின்களை வழங்கவில்லை

**மாஸ்கோ, அக்.6:**

பாகிஸ்தானுக்கு போர் விமான என்ஜின்களை ரஷியா வழங்குவதாக வெளியான தகவலை நிராகரிக்கிறோம் என ரஷியா கூறியுள்ளது.

பாகிஸ்தான் ராணுவம், சீன தயாரிப்பான ஜெ.எப்.17 போர் விமானங்களை பயன்படுத்தி வருகிறது. இந்த விமானங்களுக்கு மேம்படுத்தப்பட்ட என்ஜின்களை பாகிஸ்தானுக்கு ரஷியா வழங்குவதாக தகவல் வெளியாகி உள்ளது. இது இந்திய பிரதமர் மோடிக்கு ஏற்பட்ட தோல்வி என்று காங்கிரஸ் விமர்சனம் செய்தது.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு போர் விமான என்ஜின்களை வழங்குவதாக வெளியான தகவலை ரஷியா மறுத்து உள்ளது. இதுதொடர்பாக ரஷியா தரப்பில் கூறியதாவது:- பாகிஸ்தானுக்கு போர் விமான என்ஜின்களை ரஷியா வழங்குவதாக வெளியான தகவலை நிராகரிக்கிறோம். இதுகுறித்து எந்த உறுதிப்படுத்தலும் இல்லை.

இந்தியாவை சங்கடப்படுத்தும் அளவுக்கு பாகிஸ்தானுடன் அத்தகைய ஒத்துழைப்பை நாங்கள் அளிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

## இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக 6 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றிய ஈரான்

**தெஹ்ரான், அக்.6:**

இஸ்ரேல், ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே கடண்டஹ் ஜூன் மாதம் மோதல் மூண்டது. 12 நாட்கள் நடந்த இந்த மோதலில் இரு தரப்பிலும் பலர் உயிரிழந்தனர்.

இதனிடையே, இந்த மோதலுக்குப்பின் இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக தங்கள் நாட்டை சேர்ந்த பலரையும் ஈரான் கைது செய்து வருகிறது. கைது செய்யப்படும் நபர்களுக்கு எந்தவித விசாரணையுமின்றி விரைவில் மரண தண்டனை நிறைவேற்றி வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக மேலும் 6 பேருக்கு ஈரான் மரண தண்டனை நிறைவேற்றி யுள்ளது.

மரண தண்டனை நிறைவேற்ற 6 பேரும் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாகவும், இஸ்ரேலுக்கு உளவு தகவல்களை கொடுத்ததாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

## தலைமுடியைப் பிடித்து இழுத்து... இஸ்ரேலில் கிரேட்டா தன்பெர்குக்கு நேர்ந்த அவலம்!





**துருக்கி அக்.6:**

சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்கின் தலைமுடியைப் பிடித்து இழுத்து, அவரை இஸ்ரேல் கொடியை ஏந்தும் படியும், முத்தமிடும்படியும் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் கொடுமைப்படுத்தியதாக அவருடன் இருந்த தன்னார்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதி வாழ் மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவி பொருட்களுடன் பார்சிலோனாவில் இருந்து 50 படகுகளில் சுமார் 500 செயற்பாட்டர்கள் கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் பயணம் மேற்கொண்டனர். இந்தப் படகுகளில் சில, கடந்த புதன்கிழமை இரவு பாலஸ்தீன பிரதேசத்தை அடைந்தது. அப்போது அதனை இஸ்ரேல் கடற்படையினர் இடைமறித்தனர். இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க் பயணித்த படகும் அடங்கும். அவர்கள் அனைவரையும் இஸ்ரேலிய படையினர் சிறைப்பிடித்தனர். அவர்களில் ஒரு சிலரை நாடு கடத்தினர். அவர்கள் சனிக்கிழமை துருக்கி வந்தடைந்தனர்.

துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையம் வந்த ஆர்வலர்களில் 36 பேர் துருக்கி நாட்டவராவர். அவர்களுடன் அமெரிக்க, ஐக்கிய அரபு அமீரக, அல்ஜீரிய, மொரோக்கோ, இத்தாலி, குவைத், லிபியா, மலேசியா, மொரிசீயனா, ஸ்விட்சர்லாந்து, டுனிசியா மற்றும் ஜோர்டன் நாட்டைச் சேர்ந்தோர் இருந்தனர் என்று துருக்கி வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.


இந்நிலையில், நாடுகடத்தப்பட்ட மலேசியாவைச் சேர்ந்த சமூகநல செயற்பாட்டாளார் ஹஸ்வானி ஹெல்மி மற்றும் அமெரிக்கரான விண்டீஃபீல்ட் பீவர் ஆகியோர் தன்பெர்க் இஸ்ரேலியர்களால் துன்புறுத்தப்படுவதை நேரில் பார்த்ததாகத் தெரிவித்துள்ளனர். துருக்கியில் செய்தியாளர்களிடம் இத்தகவலை அவர்கள் பகிர்ந்துள்ளனர். இஸ்ரேலியர்கள் எங்களை மிருகங்களைப் போல் நடத்தினார்கள் என்று ஹஸ்வானி ஹெல்மி கூறினார்.

அதேபோல் எர்சின் கெலிக் என்றொரு சமூக செயற்பாட்டாளரும், கிரட்டாவை இஸ்ரேலிய படைகள் தலைமுடியைப் பிடித்து இழுத்துச் சென்றது. அவரை அடித்துத் துன்புறத்தியதோடு இஸ்ரேலிய கொடியை முத்துமிடமாறு வற்புறுத்தினர் என்றார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளை இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சகம் பொய்க் குற்றச்சாட்டு என்று திட்டவட்டமாக மறுத்து வருகிறது.

சிறையில் கிரெட்டா நிலை என்ன? இந்நிலையில் இஸ்ரேல் காவலில் இருக்கும் கிரெட்டா தன்பெர்க் இன்னும் விடுவிக்கப்படவில்லை. சிறையில் அவர் சரியான உணவு, தண்ணீர் இல்லானல் சிரமப்படுவதாகவும். மூட்டைப் பூச்சி தொந்தரவால் உடல முழுவதும் தடிப்புகள் ஏற்பட்டு சிரமப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## குண்டுவீச்சை நிறுத்துமாறு டிரம்ப் கூறிய பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 6 பேர் உயிரிழப்பு



**ஜெருசலேம், அக்.6:**

இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 20 அம்ச அமைதி திட்டத்தை அறிவித்தார். இதை ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்தார். எனினும் ஹமாஸ் அமைதி காத்ததால் அதற்கு ட்ரம்ப் 3 நாள் கெடு விதித்தார்.

இந்நிலையில் அமைதிக்கு ஹமாஸ் தயாராக இருப்பதாகவும் பிணைக் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பிற நிபந்தனைகள் சிலவற்றை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் காசா மீது குண்டுவீச்சை நிறுத்துமாறு இஸ்ரேலை கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் ட்ரம்பின் இந்த அறிவுரைக்கு அடுத்த சில மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக ஹமாஸின் ஒப்புதலை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று அதிகாலை, “இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான டிரம்ப் அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது” என அறிவித்தது. மேலும் காசாவில் தாக்குதலை குறைக்க ராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

## பிறப்பால் குடியுரிமையை ரத்து செய்ய முடியாது: அமெரிக்க நீதிமன்றம்



**பாஸ்டன், அக்.6:**

அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு, பிறப்பால் குடியுரிமையை வழங்குவதை, அதிபர் டிரம்ப் நிர்வாகம் முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்று பாஸ்டனில் உள்ள பெடரல் மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பரபரப்புத் தீர்ப்பை அளித்துள்ளது.

நீதிமன்றம் பிறப்பித்திருக்கும் உத்தரவில், அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகம், நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களுக்கோ அல்லது தற்காலிகமாக தங்கியிருப்பவ ர்களுக்கோ பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமையை ரத்து செய்ய முடியாது என்று குறிப்பிட்டுள்ளது. இது அமெரிக்க அதிபரின் பிறப்பால் குடியுரிமையை ரத்து செய்து பிறப்பித்த உத்தரவுக்கு மிகப்பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது. அமெரிக்க சட்டம், 14வது திருத்தத்தின்படி, குடியுரிமைப் பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள, அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகள் பிறப்பால் குடியுரிமைக்கு உரிமையுடையவர்கள் என்ற வாதத்தின் கூற்றினை ஏற்று, அந்த உரிமையை வழங்குவதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில், பிறப்பால் குடியுரிமை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டதை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டன. இது தொடர்பாக அமெரிக்க கீழ் நீதிமன்றங்கள் பிறப்பித்த தடை உத்தரவுகளை பெடரல் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு உறுதி செய்திருக்கிறது.

குடியுரிமை என்பது ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த பெற்றோரின் செயல்களை அடிப்படையாக வைத்து முடிவு செய்வது என்ற வகையில் மாற்றுவதற்கான அண்மைக்கால முயற்சிகள் குறித்து எச்சரிக்கை உணர்வுடன் இருப்பதற்கு அனைத்து காரணங்களையும் வழங்குகிறது. ஆனால், மிக அரிதான சூழ்நிலை என்னவென்றால், ஒருவர் அமெரிக்காவில் பிறந்தார் என்ற எளிய உண்மை ஒன்றுதான் அந்த உரிமையை வழங்குகிறது என்று நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

## நேபாளம்: கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு

**காத்மாண்டு, அக்.6:**

இந்தியாவின் அண்டை நாடு நேபாளம். அந்நாட்டின் கோஷி மாகாணத்தில் நேற்று இரவு முதல் கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக அம்மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களில் வெள்ளம், நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது

இந்நிலையில், நேபாளத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர். கோஷி மாகாணத்தில் இலாம் மாவட்டத்தில் 7 பேர், மன்சிபங் மாவட்டத்தில் 5 பேர், கோசங் மாவட்டத்தில் 6 பேர் என மொத்தம் 18 பேர் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதேவேளை, கனமழை தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் மக்கள் கவனமாக இருக்க அந்நாட்டு அரசு வலியுறுத்தியுள்ளது.

## உக்ரைன் மீது ரஷியா தாக்குதல்



**கீவ், அக்.6:**

உக்ரைன் , ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 318வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இதனால் இரு நாடுகளும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷியா நேற்று இரவு அதிரடி தாக்குதல் நடத்தியது. 50 ஏவுகணைகள், 500 டிரோன்கள் கொண்டு உக்ரைனின் சப்போரியா மாகாணம் மீது ரஷியா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

## விமான நிலையம் அருகே பறந்த மர்ம பலூன்கள்; விமான சேவை நிறுத்தம்

**வில்னியஸ், அக்.6:**

ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடு லித்துவேனியா. இந்நாடு பெலாரஸ் அருகே உள்ளது. உக்ரைன் - ரஷியா போரில் லித்துவேனியா உக்ரைனுக்கு ஆதரவு அளித்து வருகிறது. அதேவேளை ரஷியாவுக்கு பெலாரஸ் ஆதரவு அளித்து வருகிறது.

இந்நிலையில், லித்துவேனியாவின் தலைநகர் வில்னியசில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே நேற்று இரவு மர்ம பலூன்கள் பறந்தன. இதனால் பாதுகாப்பு நலன் கருதி வில்னியஸ் விமான நிலையத்தில் விமான சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அந்த விமான நிலையத்திற்கு வந்த விமானங்கள் வேறு நகரங்களில் உள்ள விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்டன. மேலும், போலாந்து, லாத்வியா ஆகிய நாடுகளுக்கும் விமானம் திருப்பி அனுப்பப்பட்டன. வில்னியஸ் நகரம் பெலாரசில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. விமான நிலையத்தின் வான்பரப்பில் மர்ம பலூன்கள் பறக்கும் சம்பவத்தில் பெலாரசுக்கு தொடர்பு இருக்கலாம் என்று லித்துவேனியா அதிகாரிகள் சந்தேகம் எழுப்புகின்றனர். இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக, டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகன், ஜெர்மனியின் தலைநகர் முனிச் விமான நிலையங்கள் அருகே மர்ம டிரோன்கள் பறந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில் மதப்பள்ளி இடிந்து விபத்து: 36 பேர் பலி

**ஜகார்தா, அக்.6:**

ஆசியாவின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நாடு இந்தோனேசியா. இந்நாட்டின் கிழக்கு ஜாவா மாகாணம் சிடொர்ஜொ நகரில் அல் ஹொசின் இஸ்லாமிய மதப்பள்ளி உள்ளது. இந்த மதப்பள்ளியில் 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மதப்பாடம் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில், இந்த மதப்பள்ளியில் கடந்த திங்கட்கிழமை மதியம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மத வழிபாடு (தொழுகை) செய்துகொண்டிருந்தனர். அப்போது, மதப்பள்ளி கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்தது.

இதனால் மத வழிபாடு செய்துகொண்டிருந்த மாணவர்கள் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த தீயணைப்பு, மீட்புக்குழுவினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். கடந்த 5 நாட்களாக மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவர்கள் எண்ணிக்கை தற்போது 36 ஆக அதிகரித்துள்ளது. அதே சமயம் இடிபாடுகளில் சிக்கிய 104 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.